# திட்டம்

மாத இதழ்

மலர் 48
இதழ் 10

ஜூன் 2017
ஜேஷ்ட - ஆஷாட 1938-39

முதன்மை ஆசிரியர்
**தீபிகா கச்சல்**
முதுநிலை ஆசிரியர்
**ஆ.இளங்கோவன்**

கட்டுரையாளர்களின் கருத்துக்கள் அவர்களுடையதே. எல்லாக் கருத்துக்களும் அரசின் கருத்துக்களை ஒட்டி இருக்கும் என்று கூற இயலாது.

திட்டமிடுதல் மற்றும் நாட்டின் வளர்ச்சியைப் பற்றியது இந்த ஏடு. மொத்தம் 13 மொழிகளில் இது வெளியாகிறது. திட்டத்தினால் ஏற்படும் நன்மைகளை இது விளக்குகிறது என்றாலும் அரசின் கருத்துக்களை மட்டுமே தெரிவிப்பது இதன் நோக்கமல்ல.

**சந்தா விபரம்**

| | | |
|---|---|---|
| தனிப்பிரதி | ... | ரூ. 22.00 |
| ஓர் ஆண்டு | ... | ரூ. 230.00 |
| இரண்டாண்டு | ... | ரூ. 430.00 |
| மூன்றாண்டு | ... | ரூ. 610.00 |

சந்தா-வை DD மூலம் அனுப்ப வேண்டிய முகவரி :
துணை இயக்குநர்
**திட்டம்**
சாஸ்திரி பவன், ஹாடோஸ் சாலை
சென்னை –600 006.
தொலைபேசி : 2827 2382



- இந்திய இளைஞர்கள்: உருவாகி வரும் ஆற்றல்
  - சங்கியா துபே
- இந்தியாவில் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு உருவாக்குவதற்கான சவால்கள்
  - அலக் N. ஷர்மா - பல்வந்த் சிங் மேத்தா
- பணியமர் திறமை : அதிகாரமளிக்கும் செயல்
  - சுனிதா சங்கி
- தொழில் முனைவை ஊக்குவிக்கும் ‘தொடங்கிடு இந்தியா’ திட்டம்
  - சௌரவ் சன்யால் - டாக்டர் ரஞ்சித் மேத்தா
- ஆரோக்கியமான, சமநிலையான, மன அழுத்தமற்ற வாழ்க்கையை நடத்துவதற்கு இளைஞர்களுக்கு யோகா பயன் தரக்கூடியதாக எப்படி இருக்கிறது?
  - டாக்டர். ஐஸ்வர்யா - என்.ஆச்சார்யா.
  - டாக்டர். ராஜிவ் ரஸ்தோகி
- இளைஞர்களுக்கு அதிகாரம் அளித்தலும் யோகாவும்
  - ஈஸ்வர் வி. பசவரட்டி
- இளைஞர்கள்: வளர்ச்சிக்கான மாற்று சக்தி!
  - முனைவர் இரா.வெங்கடேஷ்
- உலகம் முழுவதும் பரவியுள்ள இந்திய இளைஞர்கள்
  - டாக்டர் ஷீத்தல் சர்மா - பாஸ்கர் ஜோதி
- தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் இளைஞர்களுக்கான முயற்சிகள்
  - ரவி போகர்னா
- இந்திய இளைஞர்களுக்கு அதிகாரம் அளிக்க அடிப்படை அறிவியல் மற்றும் மானிடவியல் துறைகளில் தரமான கல்வி
  - டாக்டர் ராகேஷ் கே.வாட்ஸ் - டாக்டர் மீனு வாட்ஸ்
- மாற்றத்தை ஏற்படுத்தும் சரக்கு மற்றும் சேவை வரி (ஜி.எஸ்.டி.)
  - டி.எஸ். மாலிக்



Log on to **http://publicationsdivision.nic.in/**
*in collaboration with* **bharatkosh.gov.in**

# இந்திய இளைஞர்கள்: உருவாகி வரும் ஆற்றல்

- ஏ.கே. துபே

இந்திய அரசின் இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறையில் இளைஞர் விவகாரங்களுக்கான செயலர்

யுனெஸ்கோ இளைஞர் என்ற சொல்லுக்கான அர்த்தத்தை - "குழந்தைப் பருவத்தின் சார்புத்தன்மையில் இருந்து பருவ வயதின் சுதந்திரத் தன்மைக்கு மாறுகின்ற காலகட்டம் என வரையறை செய்துள்ளது. மேலும் சமுதாயத்தின் உறுப்பினர்களாக உணர்ந்து நமது சுதந்திரம் குறித்து அறியும் பருவம் இதுவாகும். நிர்ணயிக்கப்பட்ட வயதுப் பிரிவினர் எனப் பார்ப்பதைவிட இளைஞர் என்பதை மிகவும் நெகிழ்ச்சியான வகைப்பாட்டினராகப் பார்க்கப்பட வேண்டும்."

இளைஞர் உறவுகள் மற்றும் விளையாட்டு அமைச்சகத்தின் (இளைஞர் உறவுகள் துறை) 2016 -17ஆம் ஆண்டு அறிக்கையின்படி, ஆளுகைக்கான எந்த ஒரு நிறுவனத்திலும் மிகவும் துடிப்புமிக்க பிரிவினராக இளைஞர்களே இருக்கின்றனர். அவர்களது உற்சாகமான மற்றும் சுறுசுறுப்பான அணுகுமுறையில், "இந்தியா" ஒரு இளைமையான நாடாகத் திகழ்கிறது. அதாவது நாட்டின் மொத்த மக்கள்தொகையில் சுமார் 65% நபர்கள் "35 வயதுக்குக் குறைவானவர்கள்" என்ற வகைப்பாட்டின் கீழ் தோராயமாக அடங்கி விடுகின்றது. இதுதான் இந்தியாவை அதிக அளவில் இளைஞர்கள் நிரம்பிய நாடாக ஆக்குகிறது. அமைச்சகத்தின் 2016 -17ஆம் ஆண்டின் அறிக்கையின்படி, 2020ஆம் ஆண்டில், தெற்கு ஆசிய நாடுகள் மற்றும் சீனாவின் சராசரி வயது 38 ஆண்டுகள் என இருக்கும். அப்போது இந்தியாவின் சராசரி வயதாக 28 ஆண்டுகள் என்பது இருக்கும். இந்தியாவின் மொத்த மக்கள் தொகையில் 15-29 என்ற வயதுப் பிரிவின் பங்கு 27.5 சதவிகிதமாக இருக்கும். இதுவே இந்தியாவுக்குச் சாதகமான குடிமையியல் விவரத் தோற்றத்தைத் தருகின்றது.

இந்தக் குடிமையியல் வகைப்பாட்டின் பயனை அதன் அளவில் முழுமையாகப் பெறுவதற்கு, இளைஞர்கள் இலாபகரமான வெளியீடுகளை உற்பத்தி செய்தல் மற்றும் ஆக்கப்பூர்வமான உள்ளீடுகளைச் செய்தல் என்ற சுழற்சியில் ஈடுபட வேண்டியது முக்கியமானதாகும். எதிர்கால, உருவாகிவரும் ஆற்றலாக இளைஞர்கள் இந்தியாவுக்கு சர்வதேச அளவில் உதவ வேண்டுமானால் அவர்களுக்கு அடிப்படை கொள்கை ரீதியான அரவணைப்பும் உதவியும் தரப்பட வேண்டும். அரசு இயந்திரத்தின் இறுதிநிலை துணை உற்பத்திப் பொருட்களைப் பரிசோதித்துப் பார்ப்பதற்கான ஆயத்த ஆய்வுக் கூடங்களாக இளைஞர்கள் இல்லை. இதற்குப் பதிலாக, தற்காலத்துக்குப் பொருத்தமான தொழில்திறன்கள் அடிப்படையில் புதிய வாய்ப்புகளை உருவாக்குவதற்குப் பயன்படுத்திக் கொள்ள வேண்டிய மாறிலிகளாக இளைஞர்கள் உள்ளனர்.

"சமூக மாற்றத்துக்கான செயலூக்கமான ஏஜென்ட்டுகளாக இளைஞர்" என்ற தனது நூலில் மைக்கேல் கிரீனே இவ்வாறு கூறுகிறார்: சாதகமான இளைஞர் மேம்பாடு என்பது எப்போதும் விரிவடைந்து கொண்டும் செல்வாக்கான இயக்கமாகவும் இருக்கிறது. இதன் கவனம் விமோசனம் என்பதைவிட பலம் மற்றும் நலன்கள் சார்ந்ததாகவும் மற்றும் போதாமைகளை எதிர்கொள்வதாகவும் அமைகிறது. பிரச்சனைகளை மையமாகக் கொண்ட அணுகுமுறையில் இருந்து பிரச்சனைகளைத் தீர்த்தல் என்ற அணுகுமுறைக்கு முக்கியத்துவம் தரப்படுகின்றது.

சமூக, அரசியல், சிவில் சமூக இயக்கங்களின் படையெடுப்புகளுக்கு இடையில், இளைஞர்கள் நடவடிக்கைகளின் மையமாக இருக்கின்றனர். எல்.ஜி.பி.டி.கியூ இயக்கம் முதல் "பெண்களுக்கான சமஉரிமை இயக்கம்" வரை சுற்றுச்சூழல் பிரச்சனைகள் முதல் மனித உரிமைகள் வரை அனைத்திலும் இளைஞர்கள் செயல்பாடுகளின் மையமாகத் திகழ்கின்றனர். பொதுவாழ்வில் பலதரப்பட்ட செயல் களங்களால் இளைஞர்கள் சூழப்பட்டுள்ளனர். பெரும்பாலும் இவர்கள் செயலூக்கமான பொதுவான குறிக்கோள் கொண்ட குழுவாகச் செயல்படுகின்றனர். அவர்களது விரிவடைகின்ற ஆர்வத்தையும் கரிசனங்களையும் ஒருங்கிணைக்க, ஊடகங்கள் / சமூகஊடகங்கள் தொடர்ச்சியாகவும் முழுமையாகவும் பயன்படுத்திக் கொள்ளப்படவேண்டும். விவாதங்களும் பிரபலமான அபிப்பிராயங்களும் இவற்றில் முன்வைக்கப்பட வேண்டும். புதிய ஊடகக் கருவிகள் யோசனைகளை உருவாக்குவதற்கு மட்டுமே பயன்படவில்லை. அவை ஒரு யோசனையை ஒருங்கிணைக்கவும் பலருக்கும் தொடர்புபடுத்தவும்கூட உதவுகின்றன. இந்த யோசனையை அல்லது விவாதத்தை பொதுமக்கள் ஒப்புதலுடன் உறுதிப்படுத்தவும் இந்த ஊடகக் கருவிகள் உதவுகின்றன. பொருளாதார/சமூக அளவிலான செயல்பாடுகளின் மையத்தில் இளைஞர்கள் இருக்க வேண்டும் என்பதற்கான காரணம் என்பது எப்போதும் மாறிக் கொண்டே இருக்கும் சமூக இயக்கவியலுக்கு ஏற்ப தகவமைத்துக் கொள்ளும் இயல்பான உள்ளுறைந்த திறன் அவர்களுக்கு இருப்பதே ஆகும்.

இரண்டு தலைமுறைகளுக்கு இடையிலான பாலமாக இளைஞர்கள் செயலாற்ற வாய்ப்பு உள்ளது. முறையாக இதனை விளக்கிக் கூறினால், இவர்கள் ஒத்த வயதுடைய குழுவினராவர். இக்குழுவினரின் சொந்த வளர்ச்சி மற்றும் மேம்பாட்டை ஊக்குவிக்க நெகிழ்ச்சித் தன்மை இருந்தாக வேண்டும் என்ற தேவையைப் புரிந்து கொள்ள வேண்டும். கருத்தியல்

இறுக்கத்தன்மைகள் மற்றும் கண்மூடித்தனமாக மேற்கு உலக கலாச்சாரத்தைக் கடைப்பிடித்தல் போன்ற தீவிர நிலைகள் நாட்டுக்கு நெடுங்கால ஓட்டத்தில் எந்தவிதமான சாதக நல்விளைவுகளையும் ஏற்படுத்தாது. இன்றைய இளைஞர்கள் முற்றுரிமை அல்லது தன்னாட்சி மட்டுமே அனைத்துப் பிரச்சனைகளுக்கும் தீர்வாகாது என புரிந்து கொண்டுள்ளனர். ஒருங்கிணைந்து முழுமையாகச் செயல்படும் வகையில் உட்பிரிவான அலகுகள் நெருக்கமாக ஒருங்கிணைந்து செயல்படும் போதுதான் தீர்வுகள் கிடைக்கும். புதிய சமுதாயச் சிந்தனை, பொருளாதார மேம்பாடு மற்றும் அரசியல் நடவடிக்கைகளுக்கு இளைஞர்கள் அடிப்படை ஊக்கிகளாக உள்ளனர்.

இன்றைய இளைஞர்கள் மிகச் சிறந்த அனுபவத்தைப் பெறும் நிலையில் உள்ளனர். ஆன்மாவின் பரிசோதனைக்களமாக அவர்கள் உள்ளனர். இந்திய ஜனநாயக அமைப்பு முறைக்குள் பலவகைப்பட்ட விலக்குதல் நடைமுறைகள் உள்ள பின்னணிக்கு எதிராக அர்த்தமுள்ள நோக்கத்துடன் இவை பின்னிப் பிணைந்து இருக்க வேண்டும்.

இளைஞர்கள் பயன்படுத்தும் தர்க்க நியாயம், மதிப்பு கூட்டுதல் மற்றும் ஆய்வுத் தேடல் ஆகியன இறுக்கமான சமூக அமைப்பு என்ற சுவரை அடித்து உடைப்பதற்கான சுத்தியலாக இருக்கின்றன. இன்றைய இளைஞர்கள் பலதரப்பட்ட சமுதாயத்தினருடன் இணைந்து உணவு உட்கொள்ளுதல், சமுதாயம் மாறி திருமணம் செய்து கொள்ளுதல் ஆகிய விஷயங்களில் அந்த அளவிற்கு இறுக்கமான மனநிலையில் இல்லை. சக மனிதர்களிடம் காட்டப்படும் பிற்போக்குத்தனமான கூர் உணர்வு இல்லாத அணுகுமுறையை அதாவது ஜாதி, வர்க்கம், இனம் அல்லது பாலினம் ஆகியவற்றின் அடிப்படையை ஒதுக்கிவிட்டு இளைஞர்கள் கேள்வி கேட்கின்றனர்.

இது பெரிய அளவில் நிகழவில்லை என்றாலும்கூட, சரியான திசையில் உறுதியான சிறுசிறு அடிகள் எடுத்து வைக்கப்பட்டே வருகின்றன. தங்களது பாரம்பரிய வேர்களை இளைஞர்கள் கண்டறிய உதவியாக இருக்கும் மிக முக்கியமான காரணிகளில் ஒன்றாக தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதும் தொழில்நுட்பத்துக்கு முக்கியத்துவம் தருவதும் உள்ளது. ரொக்கப் பணம் இல்லாத பொருளாதாரம் மற்றும் டிஜிட்டல் இந்தியா போன்ற கருத்தாக்கங்கள், செயல்பாடுகள் மூலம் மின்னணு மயமாதலுக்காக அரசு எடுத்து வரும் முயற்சிகளில் தொழில்நுட்பம் முக்கிய பங்கு வகிக்கிறது. பொருளாதாரப் பிரச்சனைகளை எதிர்கொள்வதற்கான அனைத்து முயற்சிகளிலும் உருவாகி வரும் தொழில்நுட்பமே திறன்மிக்கத் தேர்வாக அமைகிறது. நமக்குத் தெரிந்த வரையில், அன்றாட வாழ்வில் நாம் எதிர்கொண்டு வரும் விதத்தில் தொழில்நுட்பம் என்பது முன்னேற்றத்துக்கான சாதகமான வழியாகவே உள்ளது. அடைய முடியாத அரும் செயல்கள் என்று பார்க்கப்பட்டவற்றை தற்போது மனித இனம் அடைவதற்கு தொழில்நுட்பம் உதவியாக உள்ளது. ஒவ்வொரு நாளும் நாம் புதிய புதிய சாதனைகளை வென்று எடுத்து வருவதைப் பார்க்கின்றோம். வாழ்க்கை வளமாக இருப்பதற்கும் தொழில்நுட்பம் பயன்படுகிறது - குறிப்பாக வளரும் நாடுகளில் வளமான வாழ்க்கைக்கு தொழில்நுட்பமானது அதிக அளவில் பயன்படுகிறது.

இந்தியாவில் உள்ள மின்னணுச் சூழல் வலுவான முறையில் உலக அளவில் இளைஞர்கள் காலூன்றி நிற்பதற்கான அதிகாரத்தை வழங்கி உள்ளது. இது வேகமான தகவல் தொடர்பியல், விரைவான கற்றல் ஆகியவற்றுக்கு வழி வகுத்துத் தந்தது. மேலும் ஒரு பொதுவான அடித்தளத்தின் மீது தூர தூரமான இரண்டு இடங்களை இணைக்கவும் செய்தது. இந்த டிஜிட்டல் சூழல் ஒரே சிந்தனை உடையவர்களின் கருத்துகளைத் தொகுத்து தரும் இடமாகவும் செயல்படுகிறது. பிறகு சாத்தியமான தீர்வுகள் மற்றும் விளைவுகள் குறித்து செயலாற்றுகின்றது. ஒரு பொத்தானை அழுத்துவதன் வழியாகவே, நாம் கருத்துகளைப் பகிர்ந்துக் கொள்ளலாம்; ஆலோசிக்கலாம்; இணைந்து செயலாற்றலாம்; மற்றும் சிந்தனைகளையும் செயல்களையும் தூண்டலாம். கண்ணால் பார்க்கும் யதார்த்தத்தைவிட தொழில்நுட்பம் மேலும் மேலானதாக இருக்கிறது. ஒரு மாணவருக்கு படிப்பு சார்ந்த விஷயங்கள் தகவல் பெருவழி மூலம் கிடைக்கலாம். படிப்பு மையங்களில் கவனம் செலுத்துகின்ற கல்வி நிலையங்களுக்கு அந்த மாணவர் விண்ணப்பிக்கலாம். தொழில்நுட்பம் சமமான வாய்ப்புகளை உருவாக்கித் தருகின்றது. குறைந்த பட்சம் அணுகுதல் என்ற அம்சத்தில் இவ்வாறு நிகழ்கின்றது. புதிய தொழில்நுட்ப வாய்ப்புகள் குறித்து கற்பதிலும் அவற்றை ஏற்றுக் கொள்வதிலும் இளைஞர்கள் முன்னோடிகளாக உள்ளனர்

இளைஞர் மற்றும் தொழில்நுட்பம் இரண்டின் கூட்டிணைவின் மிகப் பெரிய சாதனை என சவாலை எதிர்கொள்ளும் துடிப்பு மற்றும் ஸ்டார்ட்அப் தொழில்கள் அதிகரிப்பு ஆகியவற்றைக் கூறலாம். குறிப்பிட்ட பிரிவினருக்கான திறன்கள் மற்றும் குறிப்பிட்ட திறன்களை மெருகேற்றுதல் ஆகிய தொடக்க நடவடிக்கைகள் மூலம் ஸ்டார்ட்அப் என்ற தொழில் முனைவு இயக்கம் குறிப்பிட்ட மேல்தட்டு வர்க்கத்தினர் மட்டுமே தொழில்களைத் தொடங்கி .சேவைகளை வழங்க முடியும் என்ற மேலாதிக்க தன்மையை தற்போது தகர்த்து விட்டது. இளைஞர் படை தொழில்நுட்பத்துடன் இணைந்தது என்பது அனைவருக்கும் தொழில்முனைவு சாத்தியத்தை உருவாக்கி உள்ளது. அரசானது தனது விசேஷமான இளைஞர் உறவுகள் மற்றும் விளையாட்டுகள் அமைச்சகம் மூலமாக இந்திய இளைஞர்களின் யதார்த்தமான மற்றும் பலன் அளிக்கக் கூடிய வளர்ச்சிக்கான மேம்பாட்டு அம்சங்கள் மீதும் முன்னேற்றங்கள் மீதும் தொடர்ச்சியான கவனத்தைச் செலுத்தி வருகின்றது. வழக்கமான மீளாய்வுகளை அரசு மேற்கொண்டு வருகின்றது. அதனோடு இளைஞர்கள் தொடர்புடைய புதிய நடவடிக்கைகள்/திட்டங்கள் மற்றும் பயிலரங்குகளையும் நடத்தி வருகின்றது.

வழக்கமான மற்றும் வாழ்க்கை முறை / தலைமைத்துவத் திறன்களுக்கான பயிற்சியின் அவசியத்தையும் அரசு வலியுறுத்தி வருகின்றது.

2016-17ஆம் ஆண்டறிக்கையின்படி, 2014ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்ட "தேசிய இளைஞர் கொள்கை"யானது இந்திய இளைஞர்களின் ஒட்டுமொத்த வளர்ச்சியை உறுதிப்படுத்த ஒட்டுமொத்த தேசமும் அர்ப்பணிப்புடன் இருந்தாக வேண்டும் என்பதைத் திரும்பத் திரும்ப வலியுறுத்துகின்றது. அப்போதுதான் இளைஞர்கள் தங்களின் முழுமையான ஆற்றலை உணர்வதோடு தேசிய கட்டுமானச் செயல்முறையில் ஆக்கப்பூர்வமான பங்களிப்பையும் செலுத்துவார்கள்.

தேசிய இளைஞர் கொள்கை 2014 இந்திய இளைஞர்களுக்கு ஒரு முழுமையான பார்வையைத் தரும் வகையில் உருவாக்கப்பட்டு உள்ளது. தங்களது முழுமையான ஆற்றலை அடையும் வகையில் நாட்டில் உள்ள இளைஞர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட வேண்டும் என்று இந்தக் கொள்கையானது குறிப்பிடுகின்றது. மேலும் இளைஞர்களின் மூலமாக உலக நாடுகளுக்கு இடையில் இந்தியா தனக்கான சரியான இடத்தைப் பெற உதவ வேண்டும் என்றும் இந்தக் கொள்கையானது தெரிவிக்கிறது.

**தேசிய இளைஞர் கொள்கை 2014ன் குறிக்கோள்கள் மற்றும் முன்னுரிமை குறித்த அம்சங்கள் கீழே தரப்படுகின்றன:**

I. இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிக்கு கணிசமான பங்களிப்பைச் செய்யக் கூடிய வகையில் ஆக்கப்பூர்வமான உழைப்புச் சக்தியை உருவாக்குதல் இதற்கான முன்னுரிமை அம்சங்கள் எவை எனில்

- கல்வி
- தொழில் முனைதல்
- வேலை வாய்ப்பு மற்றும் தொழில்திறன் மேம்பாடு

II. எதிர்காலத் தலைமுறைகளைத் தாங்கிப் பிடிக்கக் கூடிய வகையில் ஒரு வலுவான, ஆரோக்கியமான தலைமுறையை வளர்த்தெடுத்தல்

இது செயல்படுத்தப்பட வேண்டிய வழிமுறைகள் எவை எனில்

- ஆரோக்கியம் ஆரோக்கியமான வாழ்க்கை முறை
- விளையாட்டுக்கள்

III. சமூக மதிப்பீடுகள் இளைஞர்களின் மனதில் பதிய வைக்கப்பட வேண்டும் மற்றும் சமுதாயத்துக்குச் சேவை ஆற்றும் மனப்பான்மையையும் அவர்களிடம் உருவாக்க வேண்டும். இதற்காக உருவாக்க வேண்டிய அறிவுப்பூர்வமான செயல்பாட்டு கருவிகள் எவை எனில்

- சமூக மதிப்பீடுகளை மேம்படுத்துதல்
- சமுதாய நிகழ்வுகளில்/வளர்ச்சியில் பங்கேற்றல்

IV. ஆட்சி முறையின் அனைத்து மையங்களிலும் பங்கேற்கவும் சிவில் சமூகமாக செயல்படவும் ஊக்குவித்தல் வேண்டும். இதனை கீழ்வருவனவற்றின் மூலம் செயல்படுத்த வேண்டும்:

- அரசியல் மற்றும் அரசாட்சியில் பங்கேற்றல்
- இளைஞர்களின் ஈடுபாடு

V. ஆபத்துக் காலங்களில் இளைஞர்களுக்கு ஆதரவாக இருத்தல் முன்னுரிமை கிடைக்காத அனைத்துப் பிரிவு இளைஞர்கள் மற்றும் விளிம்பு நிலையில் உள்ள இளைஞர்கள் ஆகியோருக்குச் சமமான வாய்ப்புகள் உருவாக்கப்பட வேண்டும். இதற்கான முன்னுரிமைச் செயல்பாடு எதுவெனில் அனைவரையும் உள்ளடக்குதல் மற்றும் சமூகநீதி கிடைக்கச் செய்தல் ஆகும்.

இளைஞர்களின் பங்கேற்பை அதிகப்படுத்தவும் இளைஞர்களின் முழுமையான ஒட்டுமொத்த மேம்பாட்டுக்கு உதவவும் தற்போது ஆட்சி செய்யும் மத்திய அரசானது பன்முகப்பட்ட செயல்திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிறது. எடுத்துக்காட்டாக, தேசக் கட்டுமான நடவடிக்கைகளில் இளைஞர்களை ஈடுபடுத்த வேண்டும்; அதற்கேற்ப அவர்களை மேம்படுத்த வேண்டும் என்பது கட்டாயமான நிபந்தனையாக தற்போது உள்ளது.

"இளையோர் மற்றும் வளர் இளம்பருவத்தினர் மேம்பாட்டுக்கான தேசிய செயல்திட்டங்கள்" என்பதும் மேலே கூறிய திட்டங்களோடு நடைமுறையில் உள்ளது. மேலும் இளைஞர்களை ஊக்கப்படுத்தவும் அவர்களைப் பங்கேற்கச் செய்யவும் தேசிய இளையோர் விழாக்கள் நடத்தப்படுகின்றன; மற்றும் தேசிய இளையோர் விருதுகளும் வழங்கப்படுகின்றன.

2011ஆம் ஆண்டின் மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி இந்திய மக்கள் தொகையில் தோராயமாக 41 சதவிகிதம் நபர்கள் 20 வயதிற்குக் கீழ் உள்ளனர். இந்த வயது எல்லை என்பது தனிநபர் ஆளுமைத்திறன் மேம்பாடு என்ற அம்சத்தில் மிக முக்கியமானதாகும். இந்த ஆளுமைத் திறன் என்பது சரியான வழிகாட்டுதல், அணுகும் நிலை மற்றும் செயல்நெறிகள் ஆகியவற்றைச் சார்ந்து உருவாவது ஆகும். அதி வேகமாக வளர்ந்து வரும் நகர நெருக்கடிகளின் தீய விளைவுகளுக்கு இன்றைய இளைஞர் சமுதாயமானது வருத்தப்படத்தக்க அளவில் ஆட்படுகின்றனர். மேலும் வாழ்க்கையை நடத்துவதற்காகவே குற்றச் செயல்களைச் செய்வதிலும் ஈடுபடுகின்றனர். இந்த எதிர்மறையான அணுகுமுறைக்கு ஒரு மிகப்பெரும் காரணமாக கிடைப்பதற்கும் அணுகுவதற்கும் இடையில் உள்ள வித்தியாசத்தைக் குறிப்பிட முடியும். இளைஞர்களின் நலனுக்காக அரசு முன்னோடி நடவடிக்கைகளையும் திட்டங்களையும் செயல்படுத்தக் கூடும். ஆனால் அத்திட்டங்களின் பலனைப் பெறுவதற்கான முறையோ அல்லது வழியோ அவர்களால் எளிதில் அடைய முடியாததாக உள்ளது. இத்தகைய பலன்களைப் பெறுவதில் மேலாதிக்கச் சக்தியாக இருப்பது நிதிசார்ந்த தடைகள் அல்லது

சமூகக் கட்டமைப்பு முறைகளே ஆகும். இளைஞர்கள் நெருக்கடி மற்றும் அதை எதிர்கொள்வதற்கான வழிமுறை குறித்த விழிப்புணர்வு இல்லாமல் இருப்பதற்கான முக்கிய காரணமாக விரிவான கல்விப்புலத்தில் இந்த இளைஞர்களை இணைக்க வேண்டும் என்ற முயற்சியின் தோல்வியே உள்ளது. கல்விப்புலமானது இளைஞருக்கான அடையாள உருவாக்கலில் வளர்ந்து வரும் நெருக்கடி குறித்து முழுமையாக உணர்ந்திருக்கவில்லை. அதேபோன்று, இளைஞர்களின் உள்ளுறை ஆற்றலையும் அவர்கள் ஆற்றக்கூடிய பங்களிப்பையும் கல்விப்புலம் உணர்ந்திருக்கவில்லை. கல்வியைப் போதிப்பதில் பல்துறை சார்ந்த அணுகுமுறையை உள்ளடக்குவதன் மூலம் பலவிதமான பலன்களை இளைஞர்கள் மூலம் பெற முடியும். இளைய சமுதாயத்தினரின் சிந்தனையையும் மனதையும் அங்கீகரிக்கவும் ஏற்றுக் கொள்ளவும் அவர்களைப் பாராட்டவும் வேண்டிய அவசரத் தேவை இப்பொழுது உருவாகி உள்ளது. இளைஞர்கள் எவ்வாறு இருக்க வேண்டும் என்ற வழக்கமாகக் கறாராக எதிர்பார்க்கப்படும் எதிர்பார்ப்புகளைக் கொண்ட இறுக்கமான சிந்தனை அமைப்பில் இருந்து வேறுபட்டதாக இந்த அங்கீகாரமானது இருக்க வேண்டும். உரையாடல் மற்றும் இதுபோன்ற தொடக்க நடவடிக்கைகள் மூலமாக இளைஞர்களுக்கு இன்றியமையாதது எனக் கருதப்படும் மாறிலிகளை ஏற்படுத்திக் கொடுப்பதாக இந்த அக்கறையானது இருக்க வேண்டும். ஏற்கனவே பரவலாக நன்கு ஏற்றுக்கொள்ளப்பட்டு தற்போது நடைமுறையில் இருக்கின்ற நாட்டுநலப்பணித் திட்டம் (என்.எஸ்.எஸ்) என்பதைத் தாண்டி நேரு யுவகேந்திரா சங்கதனின் கீழ் குறிப்பிட்ட விசேஷமான திட்டங்களும் தற்போது செயல்பாட்டில் உள்ளன. இவை பிரச்சனைகளுக்கு பலவிதத் தீர்வுகளை முன்வைத்து தீர்த்து வைக்கும் அணுகுமுறையைக் கொண்டவையாக உள்ளன.

அமைச்சகத்தின் 2016-17ஆம் ஆண்டின் அறிக்கையின்படி, தேசிய இளைஞர் கொள்கை 2014ஆனது சரியான முறையில் வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட, ஏற்கனவே நடைமுறையில் இருக்கின்ற முன்னுரிமை அம்சங்களோடு, இப்போது சில இடையீட்டு நடவடிக்கைகளும் பரிந்துரைக்கப்படுகின்றன. அவற்றில் மிக முக்கியமான நடவடிக்கைகள் கீழே தரப்படுகின்றன:

- ➢ கல்வியில் அமைப்பு திறன் மற்றும் தரம் ஆகியவற்றைக் கட்டமைத்தல்
- ➢ இளைஞர்களைச் சென்றடைதல் மற்றும் விழிப்புணர்வை இலக்காக நிர்ணயித்தல்- வேலைவாய்ப்பு மற்றும் திறன் மேம்பாட்டில் அமைப்புகளுக்கும் பங்குதாரர்களுக்கும் இடையில் இணைப்பைக் கட்டமைத்தல்
- ➢ தொழில்முனைதல் பிரிவில் அவரவர் தேவைக்கு ஏற்ப செயல் திட்டங்களைத் தயாரித்தல்
- ➢ சுகாதாரப் பிரிவில் சேவைகளை வழங்குவதில் அபிவிருத்தி செய்தல்

இப்போது ஆர்.ஒய்.எஸ்.கே.யானது முழுமையான மற்றும் ஒட்டுமொத்த அபிவிருத்தியை உருவாக்கி வழங்க வேண்டும் என்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. வகைப்பாட்டு வாரியாகச் செயல்படாமல் இத்திட்டமானது இப்போது பல்துறை சார்ந்த அணுகுமுறையோடு செயல்படுகின்றது. அரசின் மிக முக்கியமான தொடக்க நடவடிக்கைகளில் சில கீழே தரப்படுகின்றன:

1. **தொழில்திறன் மேம்படுத்துதல் பயிற்சித் திட்டம் (எஸ்.யு.டி.பி):** இத்திட்டமானது தொழில்கல்விப் பயிற்சிக்கான திறன்களை பயிற்சி பெற்ற நபர்களின் மூலம் மேம்படுத்துவதை இலக்காகக் கொண்டுள்ளது.

   கூடுதல் வருமானம் ஈட்டவும் தன்னம்பிக்கையை அதிகரிக்கவும் இத்திட்டமானது உதவும். உள்ளூர்த் தேவையை அறிந்து அதற்கேற்ப தொழில்கல்விப் பயிற்சியை அங்கீகரித்து வழங்குவதை இந்தத் திட்டம் குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

2. **நாட்டார் கலை, கலாச்சாரம் மற்றும் யுவ கிருதி ஆகியவற்றை மேம்படுத்துதல்:** X தலைமுறையானது மேற்குலக மாயையில் மூழ்கி இருக்கும் இச்சூழலில் இத்திட்டமானது செயல்பாட்டுக்கு வந்துள்ளது, ஊரக இளைஞர்கள் தங்களிடம் மறைந்துள்ள கலாச்சாரக் கூறுகள் மற்றும் திறன்களை வெளிப்படுத்துவதற்கான வாய்ப்புகளை எடுத்துக்காட்டுவதற்கு இத்திட்டம் உதவுகிறது. இளைஞர்களுக்கு மிகவும் தேவைப்படும் திட்டமாக இது இருக்கும்.

3. **மகாத்மா காந்தி யுவ ஸ்வச்சத அபியான மற்றும் ஷர்மதான் காரியகிரம்:** தூய்மையாக்கல் பணியிலும் நீர் சேகரிப்பு மற்றும் பாதுகாப்பு பணியிலும் இளைஞர்களை ஈடுபடுத்தி பங்காற்றச் செய்யும் திட்டமாக இது இருக்கிறது.

நாடு முழுவதிலும் உள்ள பாகுபாடு, குறைவான மற்றும் போதாமை நிலையில் உள்ள பங்கேற்பு ஆகியவற்றைத் தொடர்ந்து அனைவரையும் உள்ளடக்கும் சில திட்டங்களை அரசு இப்போது செயல்படுத்தி வருகிறது. சமூக உள்ளடக்கல் மற்றும் வளர்ச்சிக் கொள்கை மீதான அரசின் நோக்கத்தையும் முக்கியத்துவத்தையும் இத்திட்டங்கள் எடுத்துக்காட்டுகின்றன. அவற்றில் மிக முக்கியமான சில திட்டங்கள் கீழே தரப்படுகின்றன:

4. **வளர் இயம்பருவத்தினருக்கான வாழ்க்கைத் திறன் பயிற்சி (வளர் இளம் பருவத்தினருக்கு அதிகாரம் அளித்தல்):**

   இளைஞர்களின் உளவியல் தடுமாற்றம் குறித்து கவனம் கொள்வதால் இது மிக முக்கியமான மற்றும் முழுமையான திட்டமாக உள்ளது. மன அழுத்தத்தை எதிர்கொண்டு சமாளிப்பதற்கும் ஆரோக்கியமான வாழ்க்கைத் தேர்வுகளை மேற்கொள்ளவும் தேவையான பயிற்சியை இளைஞர்களுக்கு அளிக்கவும் இத்திட்டமானது உதவுகிறது. இனப்பெருக்க மண்டல ஆரோக்கியம் குறித்த பிரச்சனைகள் மற்றும் அக்கறை குறித்து அவர்களுக்கு விழிப்புணர்வு

ஏற்படுத்தி கவனம் செலுத்த வைப்பதையும் இத்திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது. பிரச்சனையைத் தீர்த்து வைப்பதில் இளைஞர்களின் ஆற்றலை ஒருமுகமாகச் சேர்த்து ஒருமனதான தீர்வை உருவாக்குவதையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

புவியியல் மற்றும் சமுதாய தடைகளை நீக்குவதற்கான பாலங்கள் சிறப்பாக உள்ள இரண்டு திட்டங்கள் :

i. **பழங்குடியின இளைஞர் பரிமாற்றத் திட்டம் (டி.ஒய்.இ.பி)**: இடதுசாரி தீவிர வாதம் பாதித்துள்ள பழங்குடியினப் பகுதிகளில் இருந்து ஆற்றல் மிக்க இளைஞர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களை நாட்டின் பிற பகுதிகளுக்கு சுற்றுலாவாக அழைத்துச் சென்று வருவது இத்திட்டத்தின் நோக்கமாகும். ஆதிக்க நிலையிலான உள்ளூர் கருத்தியலின் தாக்கத்தில் இருந்து இத்தகைய இளைஞர்களின் மனப்போக்கை விடுவித்து அவர்களின் சிந்தனையை தேசியமயமாக்குதல் என்பதும் இதன் நோக்கமாகும். டி.ஒய்.இ.பி. என்ற இந்தத் திட்டமானது அனுபவங்களின் மூலம் கற்றல் என்ற முறையை மேற்கொள்ள வாய்ப்பு ஏற்படுத்தித் தருகிறது. பழங்குடியின இளைஞர்களின் சொந்த ஊரில் இதை நடைமுறைப்படுத்த முடியும். இந்த ஊரின் இளைஞர்கள் வளர்ச்சி, உள்கட்டமைப்பு வசதி, அபிவிருத்தி மற்றும் தொழில்திறன் மேம்பாடு என்ற மாயாஜாலத்தைக் கண்கூடாகப் பார்க்க முடியும்.

ii. **வடகிழக்குப் பிராந்திய இளைஞர் பரிமாற்றத் திட்டம்**: இளைஞர் உறவுகள் அமைச்சகம் மற்றும் உள்துறை அமைச்சகம் ஆகிய இரண்டு அமைச்சகங்களின் கூட்டு முயற்சியாக நேரு யுவகேந்திரா சங்காதனின் கீழ் இத்திட்டமானது தொடங்கப்பட்டுள்ளது. வடகிழக்கு பிராந்திய இளைஞர்களை மஹாராஷ்டிர மாநில இளைஞர்களுடன் இணைந்து கலாச்சார ரீதியில் வேறுபட்ட வாழ்க்கை முறையின் பண்பாட்டுக் கூறுகளையும் சமூகப்பொருளாதார மேம்பாட்டையும் புரிந்து கொள்ளச் செய்வதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.

இந்த வகையில் முதலாவதாக, தமிழ்நாட்டின் ஸ்ரீபெரும்புதூரில் ஒரு மைல்கல் சாதனையானது எட்டப்பட்டுள்ளது. இளைஞர் உறவுகள் மற்றும் விளையாட்டு அமைச்சகத்தின் கீழ் "தேசிய முக்கியத்துவம் வாய்ந்த ஒரு கல்வி நிலையம்" நிறுவப்பட்டு இச்சாதனையானது எட்டப்பட்டுள்ளது.

2012ல் ஒரு சட்டம் இயற்றி அதன் மூலம் **"ராஜீவ்காந்தி தேசிய இளையோர் மேம்பாட்டு நிலையம்"** நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இளையோர் மேம்பாட்டில் சர்வதேச அளவில் அங்கீகாரம் மற்றும் கல்விப் புலச் செயல்பாட்டில் உயர்சிறப்பு மையம் என இந்த நிலையம் தன்னளவில் புகழ் பெற்றுள்ளது.

இந்த நிலையம் பலவிதமான கல்வி சார்ந்த படிப்புகளை வழங்குகிறது. குறிப்பாக எம்.எஸ்சி ஆலோசனை உளவியல், எம்.ஏ. சமூகப் புத்தாக்கம் மற்றும் தொழில்முனைவு, எம்.ஏ.பாலின ஆய்வியல், எம்.ஏ.வளர்ச்சிக் கொள்கை மற்றும் நடைமுறை முதலான படிப்புகள் இந்த மேம்பாட்டு நிலையத்தில் வழங்கப்படுகின்றன. முனைவர் பட்ட ஆராய்ச்சியை மேற்கொள்வதற்கான வசதியும் இந்த நிலையத்தில் உள்ளது. இளைஞர் தொடர்பான பல்துறை சார்ந்த முனைவர் பட்ட ஆய்வை ஒருவர் இங்கு மேற்கொள்ளலாம்.

கலாச்சார ரீதியாக மற்றும் வரலாற்று ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த நகரங்களில் அரசு இளைஞர் விடுதிகளை அமைத்துள்ளது. கட்டணம் குறைவான, சமுதாய மக்களின் நம்பிக்கைக்குரிய மற்றும் எளிதில் கிடைக்கக் கூடிய விடுதிகளாக இருக்க வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையிலேயே இவை கட்டப்பட்டுள்ளன.

நகரங்கள் மற்றும் சுற்றுலா தளங்கள் எனக் கண்டறியப்பட்ட இடங்களில் இந்த விடுதிகள் உருவாக்கப்படுகின்றன. மின்சாரமும் தண்ணீரும் எப்போதும் கிடைக்கும் வகையில் இந்த விடுதிகள் செயல்படும். தேசிய அளவில் பல்வேறுபட்ட கலாச்சாரங்களின் ஒரு வாழ்வியல் அனுபவத்தைத் தருவதாக இவை இருக்கும். மேலும் குறைந்த கட்டணத்தில் தங்கும் வசதி தரப்படுவதோடு பிற கலாச்சார உறவினர்களுடன் கலந்துரையாடலில் ஈடுபடுவதற்கான வாய்ப்பும் ஒருசேர இங்கு கிடைக்கிறது.

ஒவ்வொரு தனிப்பட்ட இளைஞனின் உள்ளுறை ஆற்றலையும் திறமைகளையும் வெளிக்கொணர பல்வேறு வழிமுறைகளில் அரசு முயற்சித்து வருகின்றது. இது அந்த இளைஞரின் தனிநபர் ஆளுமை வளர்ச்சிக்கு உதவுவதோடு தேசிய, உலகளாவிய ஆதிக்கக் குரலை எழுப்ப உதவுவதாகவும் இருக்கும். மடைமாற்றம் பெறும் இளைஞர்கள்தான் மனசாட்சி உள்ள, கூர் உணர்வுள்ள மற்றும் ஒருங்கிணைந்த உலகின் முன்னோடிகளாக விளங்குவார்கள்.

இளைஞர்களின் முக்கியத்துவம் மற்றும் அவர்களின் ஆதிக்கம் செலுத்தாத ஆன்மா குறித்து கூறி இக்கட்டுரையை முடிக்கும் போது சுவாமி விவேகானந்தரின் வார்த்தைகள் பிரகாசமாகவும் உண்மை ஒளியுடனும் நம்முன் எழுகின்றன - **"எழுந்திரு! விழிப்புக்கொள்! இலக்கை அடையும் வரை நிற்காதே"**.

**பார்வை நூல்கள்**


1. மக்கள் தொகை கணக்கெடுப்பு 2011
2. இந்தியா 2017, வெளியீட்டுப் பிரிவு, தகவல் ஒலிபரப்பு அமைச்சகம், இந்திய அரசு.
3. 2016-17 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கை, இளைஞர் உறவுகள் மற்றும் விளையாட்டு அமைச்சகம், இந்திய அரசு.



**சங்கியா துபே*** கட்டுரை ஆசிரியர், புதுதில்லியில் உள்ள ஜமியா மிலியா இஸ்லாமியா பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்ட ஆராய்ச்சியாளர் ஆவார். ●

# இந்தியாவில் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு உருவாக்குவதற்கான சவால்கள்

- அலக் N. ஷர்மா, இயக்குனர், மனிதவள மேம்பாடு கல்வி நிலையம்
- பல்வந்த் சிங் மேத்தா, உறுப்பினர், மனித வள மேம்பாடு கல்வி நிலையம்

உலக மொத்த இளைஞர்களின் மக்கள் தொகையில் இந்தியாவில் ஐந்தில் ஒரு பங்கு என்ற விகிதத்தில் மிக அதிக அளவிலான இளைஞர்கள் உள்ளனர். அவர்களை தொழிற் சந்தையில் சரியாக பயன்படுத்திக் கொண்டால் இந்தியா உயர் அளவு பொருளாதார வளர்ச்சி அடைய முடியும். இந்தியாவில் மொத்த மக்கட்தொகையில் பாதிக்கும் மேல் 60.3 சதவிகிதம் 15-59 வயது தொகுப்பில் உள்ளனர். கால் பங்கு (27.5 சதவிகிதம்) 15 முதல் 25 வயது கொண்ட இளைஞர்களாக உள்ளனர் (இந்திய மக்கட்தொகை கணக்கெடுப்பு 2011) இந்தியாவின் இளைஞர் ஜனத்தொகை ஆண்டொன்றிற்கு 2 சதவிகிதம் என்ற உயர் அளவில் உள்ளது. 2001-2011 மக்கள்தொகை வளர்ச்சியில் ஒட்டு மொத்தமாக 1.6 சதவிகிதம் இருந்தது. ஆகவே, இந்தியாவில் ஆண்டொன்றிற்கு ஒரு கோடி புதிய இளைஞர்கள் தொழிற் சந்தைக்கு வருகிறார்கள். இந்தியாவில் இந்த இளைஞர்களின் அதிகரிப்பு வட மற்றும் கிழக்கு மாநிலங்களில் அதிகமாகக் காணப்படுகிறது. ஆனால், ஒவ்வொரு ஆண்டும் புதிதாக உருவாக்கப்படும் வேலை வாய்ப்புக்கள் இவர்களை தொழிற்சந்தையில் ஈடுபடுத்தப் போதுமானதாக இல்லை. இந்தப் பிரச்சினையை சமாளிக்க இந்திய அரசு, பல புதிய வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளது. பிரதம மந்திரி வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டம், ஸ்வர்ண ஜெயந்தி கிராம வேலை வாய்ப்பு திட்டம், ஸ்வர்ண ஜெயந்தி நகர்ப்புற வேலை வாய்ப்பு திட்டம், "இந்தியாவில் பொருள் செய்வோம்" மற்றும் "திறன் மிகு இந்தியா" என்ற திட்டங்களாவன அவை : இந்தக் கட்டுரையில் இளைஞர்களின் வேலை வாய்ப்பு பற்றிய சவால்களும் அதனை போக்க அரசு மேற்கொண்டுள்ள திட்டங்களையும் பார்க்கலாம். இதற்கான தகவல்கள் 2015-16இல் இந்திய அரசின் தொழிலாளர் வாரியம் மேற்கொண்ட ஐந்தாவது ஆண்டுக்கொரு முறையான வேலை வாய்ப்பு ஆய்விலிருந்து எடுக்கப்பட்டுள்ளது. பொதுவாக, 15-29 வயதிலானவர்களையே இளைஞர்கள் என்று கொள்ளும் நிலையில் இந்தக் கட்டுரையில் 18-29 வயதினரை இளைஞர்களாக கருதுகிறோம். இதற்கு காரணம் 15-17 வரையிலான இளைஞர்கள் மிகக் குறைந்த அளவிலேயே தொழிற்சந்தைக்கு வருகிறார்கள். ஆகவே, முக்கிய வேலை வாய்ப்பு சார்ந்த சவால் 18-29 வயதினருக்கு மட்டுமே.

**தொழிலாளர் பங்கேற்பு விகிதம்** :

தொழிலாளர் பங்கேற்பு விகிதம் என்பது மொத்த ஜனத்தொகையில் வேலையாட்களின் எண்ணிக்கையாகும். 2015-1இல் இந்த விகிதம் இளைஞர்களிடையே 30.2ஆக இருந்தது. 30 வயதினருக்கும் மேற்பட்டவர்களின் விகிதம் 57.3ஆக இருந்தது (அட்டவணை 1). இது எதிர்பார்த்ததுதான். ஏனெனில் 18-29 வயதினர் பலர் இன்னும் கல்வி நிலையங்களில் உள்ளனர். அட்டவணையிலிருந்து நாம் பார்க்கும் போது, இந்த விகிதம் கிராமப்புறங்களில் அதிகமாகவும், நகர்ப்புறங்களில் குறைவாக உள்ளதும் தெரிகிறது. இது அல்லாமல், 18-29 வயது பெண்களைவிட ஆண்கள், 3.5 மடங்கு அதிகமாக உள்ளனர்.

**அட்டவணை 1 : வேலை பங்கேற்பு விகிதம் - வயது தொகுப்பு வாரியாக, 2015-16**

| துறை | 15-17 வயது | | | 18-29 வயது | | | 30+ வயது | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | நபர்கள் | ஆண் | பெண் | நபர்கள் | ஆண் | பெண் | நபர்கள் |
| கிராமப்புறம் | 11.1 | 4.3 | 8.0 | 63.1 | 19.1 | 42.3 | 89.0 | 29.8 | 60.1 |
| நகர்ப்புறம் | 4.0 | 1.4 | 2.8 | 48.6 | 11.8 | 30.7 | 82.6 | 16.7 | 50.4 |
| மொத்தம் | 9.3 | 3.6 | 6.7 | 59.3 | 17.1 | 39.2 | 87.1 | 26.0 | 57.3 |

ஆதாரம்: தொழிலாளர் வாரியம், இளைஞர்களின் பணியமர்வு மற்றும் வேலை இல்லாமை நிலைமை அறிக்கை, தொகுப்பு 2, 2015-16 இந்திய அரசு.

18-29 வயது இளைஞர்களில் ஐந்தில் இரண்டு பங்கு பேர் சுய தொழில் செய்பவர்கள். 30 வயதுக்கு மேற்பட்டவர்களில் பாதிக்கு மேல் சுய வேலை செய்பவர்கள். அட்டவணை 2இல் காண்பது போல அதிகமான இளைஞர்கள் தொழில் சந்தையில் நிரந்தர மற்றும் தற்காலிக பணியாளர்களாக சேருகிறார்கள். இதை கிராமப்புற மற்றும் நகர்ப்புற பகுதி இரண்டிலுமே காணலாம்.

**அட்டவணை 2: பணியாளர்களின் பலவகை நிலைமைகள், வகுப்பு தொகுப்புகள் வாரியாக 2015-16.**

| | 15-17 வயது | | | 18-29 வயது | | | 30 வயது மற்றும் அதற்கு மேல் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | கிராமப்புறம் | நகர்ப்புறம் | கிராமப்புறம் மற்றும் நகர்ப்புறம் | கிராமப்புறம் | நகர்ப்புறம் | கிராமப்புறம் மற்றும் நகர்ப்புறம் | கிராமப்புறம் | நகர்ப்புறம் | கிராமப்புறம் மற்றும் நகர்ப்புறம் |
| சுய வேலையில் | 40.8 | 30.9 | 39.7 | 40.5 | 33.3 | 39.0 | 51.2 | 43.4 | 49.2 |
| சம்பளப் பணியாளர் | 5.1 | 18.9 | 6.5 | 14.1 | 37.6 | 19.0 | 10.5 | 33.8 | 16.5 |
| ஒப்பந்தப் பணியாளர் | 3.6 | 7.7 | 4.0 | 4.6 | 8.4 | 5.4 | 2.4 | 4.9 | 3.0 |
| தற்காலிகப் பணியாளர் | 50.6 | 42.6 | 49.7 | 40.8 | 20.7 | 36.6 | 35.9 | 17.9 | 31.0 |
| மொத்தம் | 100 | 100 | 100 | 100 | 100 | 100 | 100 | 100 | 100 |

ஆதாரம் : தொழிலாளர் வாரியம், இளைஞர்களின் பணியமர்வு மற்றும் வேலை இல்லாமை நிலைமை அறிக்கை, தொகுப்பு 2, 2015-16 இந்திய அரசு.

**தொழில் வாரியாக, தொழிலாளர்களின் பணியமர்வு**

தொழில்வாரியாக மக்கள் பணியாற்றுவதை பார்க்கும் போது, 18-29 வயதினர் விவசாயம் மற்றும் அதைச் சார்ந்த துறைகளிலும் (38.1%) வணிகம், விடுதிகள் மற்றும் உணவகங்களிலும் (19.4%) கட்டுமானத்துறையில் (15.1%), பொருள் உற்பத்தி மற்றும் பிற சேவைகளில் (13.1 சதவிகிதத்தினரும்) உள்ளனர். 30 வயதுக்கு மேற்பட்டவர்களை ஒப்பிட்டு பார்க்கும் போது, இளைஞர்கள், கட்டுமானம், பொருள் உற்பத்தி, வணிகம் மற்றும் அதை சார்ந்த துறைகளில் அதாவது, விவசாயம் அல்லாத துறைகளில் பணி செய்கிறார்கள். இதற்கு முக்கிய காரணம், விவசாயத்துறையில் அதிக வேலை வாய்ப்புகள் இல்லை. மேலும், இளைஞர்கள் விரும்பும் நல்ல ஊதியமும் கிடைப்பதில்லை. அவர்கள், நல்ல கல்வித் தகுதியையும் பெற்றிருக்கிறார்கள்.

**அட்டவணை 3 : பணியாளர்களின் வேலை சார்ந்த விவரங்கள் வயது தொகுப்பு வாரியாக, 2015-16**

| தொழில்கள் | 15-17 வயது | 18-29 வயது | 30+ வயது |
|---|---|---|---|
| விவசாயம் மற்றும் சார்பு துறைகள் | 53.4 | 38.1 | 47.2 |
| சுரங்கம் மற்றும் கல் குவாரி | 1.9 | 0.9 | 1.1 |
| பொருள் உற்பத்தி | 14.5 | 13.2 | 9.6 |
| மின்சாரம், எரிவாயு மற்றும் குடிநீர் | 0.2 | 0.6 | 0.6 |
| கட்டுமானத்துறை | 14.8 | 15.1 | 10.0 |
| வியாபாரம், விடுதிகள், உணவகங்கள் | 12.2 | 19.4 | 17.5 |
| போக்குவரத்து, பொருள் பாதுகாப்பு மற்றும் தொடர்பு துறைகள் | 1.1 | 3.7 | 3.9 |
| நிதி, காப்பு, வீடு நிலம் வாங்க விற்க, வியாபார சேவைகள் | 1.4 | 8.3 | 9.2 |
| சமூக மற்றும் தனியார் சேவைகள் | 0.6 | 0.7 | 0.8 |
| மொத்தம் | 100.0 | 100.0 | 100.0 |

**வேலையற்றோர் விகிதம்**

வேலையற்றோர் விகிதம் என்பது வேலை செய்யக்கூடியவர்கள் மற்றும் வேலை தேடுபவர்களிடையே எத்தனை பேருக்கு வேலை வாய்ப்பு இல்லை என்பதாகும். 2015-16இல் 18-29 வயது இளைஞர்களின் வேலை இல்லாத நிலைமை 13.2 சதவிகிதமாக இருந்தது. (அட்டவணை 3). இது 30 வயதுக்கும்

மேற்பட்டவர்களைவிட (1.6%) 8 மடங்கு அதிகமாகும். இதே வயதினரில் இளம் பெண்களுக்கு வேலை வாய்ப்பின்மை 20 சதவிகிதமாக இருந்தது. இது, இளம் ஆண்களைவிட (11.3%) இரு மடங்காகும். கிராமப்புறங்களைவிட நகர்ப்புறங்களில் வேலையின்மை அதிகமாக உள்ளது. அதைப்போலவே ஆண்களைவிட பெண்களுக்கு நகர்ப்புறங்களில் இளம் பெண்களின் வேலையின்மை, எச்சரிக்கையூட்டும் அளவில் 28% உள்ளது (இளம் ஆண்களுக்கு 11.5%). 15-17 வயதினர் குறைந்த அளவிற்கே, வேலை தேடினாலும் 18-29 வயதினர் போலவே, உயர் அளவு வேலையின்மை உள்ளது. இந்த நிலைமை கிராமப்புறம் மற்றும் நகர்ப்புறங்களிலும், ஆண்களும், பெண்களுக்குமிடையேயும் அப்படியே உள்ளது.

**அட்டவணை - 4 வேலையற்றோர் விகிதம் - வயது தொகுப்பு வாரியாக 2015-16**

| துறை | 15-17 வயது | | | 18-29 வயது | | | 30+ வயது | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | நபர்கள் | ஆண் | பெண் | நபர்கள் | ஆண் | பெண் | நபர்கள் |
| கிராமப்புறம் | 18.4 | 22.8 | 19.5 | 11.2 | 17.9 | 12.7 | 0.9 | 3.7 | 1.6 |
| நகர்ப்புறம் | 22.1 | 21.4 | 22.0 | 11.5 | 27.9 | 15.1 | 0.7 | 5.3 | 1.5 |
| மொத்தம் | 18.8 | 22.7 | 19.8 | 11.3 | 20.0 | 13.2 | 0.9 | 4.0 | 1.6 |

ஆதாரம்: தொழிலாளர் வாரியம், இளைஞர்களின் பணியமர்வு மற்றும் வேலை இல்லாமை நிலைமை அறிக்கை, தொகுப்பு 2, 2015-16 இந்திய அரசு.

படித்த இளைஞர்களிடையே வேலையின்மை படிப்படியாக உயர்ந்து தீவிரமடைந்துள்ளது. இளைஞர்களின் வேலையின்மை அவர்கள் எந்த அளவிற்கு கல்வி பெறுகிறார்களோ அந்த அளவிற்கு உயர்ந்துள்ளது (அட்டவணை 4). பட்டப்படிப்பில் சான்றிதழ் அல்லது பட்டயப்படிப்பு கல்வி பெறுவோர்களிடம் 23 சதவிகித வேலையின்மையும், பட்டபடிப்பு முடித்தவர்களிடம் அது 35 சதவிகிதமாகவும் காணப்படுகிறது. இது அல்லாமல், ஆண்களைவிட படித்த பெண்கள் வேலையின்மை மிகவும் உயர் அளவே உள்ளது.

**அட்டவணை - 5 வேலையற்றோர் வேலை விகிதம் - கல்வி மற்றும் வயது தொகுப்பு வாரியாக**

| கல்வி | 18-29 வயது | | | 30+ வயது | | |
|---|---|---|---|---|---|---|
| | M | F | P | M | F | P |
| எழுத்தறிவில்லாதவர்கள் | 4.0 | 6.2 | 4.9 | 0.6 | 3.0 | 2.2 |
| ஆரம்பக்கல்விக்கும் குறைவான நிலையில் இருப்பவர்கள் | 4.8 | 5.8 | 5.1 | 0.6 | 1.9 | 1.6 |
| ஆரம்பக்கல்வி | 5.5 | 8.0 | 6.2 | 0.6 | 2.3 | 1.0 |
| நடுநிலை / உயர்நிலை / மேல்நிலைக்கல்வி | 9.2 | 17.1 | 10.4 | 0.7 | 4.8 | 1.6 |
| பட்டப்படிப்பு நிலையில் சான்றிதழ் படிப்பு | 21.3 | 31.3 | 23.5 | 0.6 | 11.2 | 2.4 |
| பட்டயப்படிப்பு | 20.9 | 33.1 | 23.0 | 1.0 | 7.6 | 1.4 |
| பட்டப்படிப்புக்கு மேல் | 29.7 | 47.7 | 34.8 | 2.3 | 13.5 | 6.2 |
| மொத்தம் | 11.3 | 20.0 | 13.2 | 0.9 | 4.0 | 1.6 |

ஆதாரம்: தொழிலாளர் வாரியம், இளைஞர்களின் பணியமர்வு மற்றும் வேலை இல்லாமை நிலைமை அறிக்கை, தொகுப்பு 2, 2015-16 இந்திய அரசு.

18-29 வயதுள்ள இளம் பெண்களில் பட்டப்படிப்பு நிலையில் சான்றிதழ் அல்லது பட்டயப்படிப்பு படித்தவர்களில் வேலையின்மை மூன்றில் ஒரு பங்காக உள்ளது. பட்டப்படிப்புக்கு மேல் படித்த இளம் பெண்களின் வேலையின்மை மிகவும் மோசமான அளவில் 48 சதவிகிதமாக இருந்தது. இதன்படி இந்திய தொழில் சந்தையில் போதுமான அளவு வேலை வாய்ப்பு உருவாக்கப்படாத நிலையில், பணியமர்த்துவதில் பெண்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள். இதற்கு மற்றொரு காரணம், பெண்களுக்கு ஏற்ற வேலை வாய்ப்புக்களை நாம் உருவாக்காமல் இருப்பது அல்லது பெண்கள் எளிதாக வேலைக்குச் செல்லும் வகையில் போக்குவரத்து, குழந்தைகள் பாதுகாப்பு போன்ற வசதிகள் இல்லாமல் இருப்பதாகும். மொத்தத்தில், இளைஞர்களுக்கான வேலை வாய்ப்புக்களை இந்தியாவால் உருவாக்க முடியவில்லை. நகர்ப்புற பெண்களுக்கான வேலை வாய்ப்பு, மிகப்பெரிய சவாலாக உள்ளது.

**சமீபத்திய அரசு முயற்சிகள்**

அரசு முன்னதாக, பல சுய வேலை வாய்ப்பு முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. ஆனால், அவை

பயணிக்கவில்லை. ஆகவே, சமீபத்தில் புதிதாக தொழில் துவங்குவோம், குறு தொழில்கள் மேம்பாடு மற்றும் மறு நிதி வழங்கு அமைப்பு, நிமிர்ந்து நில் இந்தியா, எளிதாக வியாபாரம் செய்யும் இயக்கம், கிராமப்புறங்களில் தொழில் முனைவு திட்டங்கள் போன்ற தொழில் முனைவு திட்டங்களை ஊக்குவிக்கிறது. அவைகளைப் பற்றி இப்போது பார்க்கலாம்.

**புதிதாகத் தொழில் துவங்குவோம் மற்றும் நிமிந்து நில் இந்தியா**

ஜனவரி 2016இல் இந்திய அரசு, புதிய தொழில் துவங்குவோம் மற்றும் நிமிர்ந்து நில் இந்தியா என்ற இரண்டு தொழில் முனைவு ஊக்குவிப்பு திட்டங்களின் அடிப்படையில் வரிச்சலுகைகள் அளிக்க ரூ.10,000 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. வியாபாரத்தை எளிதாகத் துவங்க அரசு அதற்கான சூழ்நிலைகளில் பெரிய மாறுதல்களை செய்துள்ளது. அவைகள், பதிவு செய்தல், சட்ட நடவடிக்கைகள், ஒழுங்குமுறைக் கட்டுப்பாடு, வரி சலுகை, ஆகியவை சார்ந்தவைகளாகும். டிசம்பர் 2016வரை இந்தியாவில் 4700 புதிய தொழில் முனைவுகள் ஏற்பட்டன. ஆனால், இவைகளால், பெரிய நற்பயன்கள் ஏற்படவில்லை. ஏனெனில் துவங்கப்பட்ட ஓராண்டுக்குள்ளேயே 200க்கும் மேற்பட்டவைகள் மூடப்பட்டுவிட்டன. துவங்கப்பட்ட புதிய வியாபாரங்களில் இயல்பாகவே, 20 சதவிகிதம் மட்டுமே போட்டிமிக்க இந்த சந்தைகளில் நிலைக்க முடியும் என்றிருந்தாலும் (இந்தியா ஸ்டாட்அப் அவுட்லுக் அறிக்கை, 2017). இந்த அமைப்புகள் விரைவில் நலிந்து போவதை தவிர்க்க வழிவகைகள் மேற்கொள்ள வேண்டும். ஜனவரி 2016இல், நிமிர்ந்து நில் இந்தியா என்ற திட்டம் துவக்கபட்டுள்ளது. இந்த திட்டத்தில் நலிந்த வகுப்பினர்களான ஷெட்யூல்டு வகுப்பினர், ஷெட்யூல்டு பழங்குடியினர் மற்றும் மகளிர் தொழில் முனைவு மேற்கொள்ள ஊக்குவிக்கப்படுகின்றனர். டிசம்பர் 2016வரை நிமிர்ந்து நில் இந்தியாவின் திட்டத்தின் கீழ் 2055 பெண்கள், 2568 ஷெட்யூல்டு வகுப்பினர் மற்றும் ஷெட்யூல்டு பழங்குடியினர் 718 பேர் உட்பட மொத்தம் 11341 பேருக்கு கடன்கள் வழங்கப்பட்டுள்ளது. (நிதி அமைச்சகம், இந்திய அரசு 2017.)

**பிரதம மந்திரி முத்ரா திட்டம்**

சிறு, குறு வணிக நிறுவனங்களுக்கு அமைப்பு சார்ந்த நிதி உதவி வழங்க ஏப்ரல் 2015இல் பிரதம மந்திரி முத்ரா திட்டம் துவங்கப்பட்டது. ஒரு வியாபார நிறுவனத்தின் வளர்ச்சி நிலைக்கு ஏற்ப மூன்று வகையான கடன்கள் அளிக்கப்படுகிறது. ஆரம்ப நிலை (ரூ.50,000) இளம் நிலை (ரூ.50,000 முதல் ரூ.5,00,000 வரை) முதிர்ந்த நிலை (ரூ.5 இலட்சத்திலிருந்து ரூ.10 இலட்சம் வரை) இந்த திட்டத்தின் கீழ் மார்ச் 2016 வரை 1,25,000 கோடி வழங்கப்பட்டுள்ளது. மொத்தம் 3,27,00,000 கடன் வாங்கியவர்களில் 3,03,00,000 பேர் ஆரம்ப நிலையில் உள்ளவர்கள் ஆவார்கள்.

**கிராமப்புற தொழில் முனைவோர் ஊக்குவிப்புத் திட்டம் :**

கிராமப்புறங்களில் தொழில் முனைவை ஊக்குவிக்க அரசு கிராமப்புற தொழில் முனைவு ஊக்குவிப்புத் திட்டத்தை செயல்படுத்த உள்ளது. நிலைத்து நிற்கும் வேலை வாய்ப்புகளை உருவாக்க கிராமப்புறங்களில் இருந்து துவங்கி புதிய தொழில்களை உருவாக்க இந்தத் திட்டம் முற்படுகிறது. இதனால் 24 மாநிலங்களில் உள்ள 125 ஊராட்சி ஒன்றியங்களில் 2015-2019 ஆண்டுகளில் 1.82 இலட்சம் கிராமப்புறத் தொழில் முனைவுகளை உருவாக்கி வலுப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இதனால் 3.78 லட்சம் மக்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதனால், கிராமப்புற இளைஞர்களுக்கு தொழில் முனைவும் வேலை வாய்ப்பும் கிடைக்கிறது.

**முடிவாக**

இந்தியாவில் தற்போது ஏற்பட்டு வரும் மக்கட்தொகை மாற்றங்களினால் இளைஞர்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது. பெரும் பான்மையான இளைஞர்களுக்கு நல்ல கல்வியும், தொடர்ந்து நல்ல வேலை வாய்ப்பும் தேவை. நாம் ஏற்கனவே பார்த்தபடி படித்த இளைஞர்களுக்கான சவால்கள் மிகப்பெரிய அளவில் உள்ளது குறிப்பாக, படித்த இளைஞர்களுக்கு துரதிஷ்டவசமாக ஒரு புறம் இந்தியாவில் பெண்கள் பணி செய்வது உலத்திலேயே மிகக்குறைந்த அளவு உள்ள நிலையில் அவர்களுக்கு வேலையின்மையும் மிக அதிகமாக உள்ளது. ஆகவே, அரசு எடுத்துக் கொண்டுள்ள முயற்சிகள் சரியான பாதையில் உள்ளது. ஆனால், மேலும் பலவற்றைச் செய்ய வேண்டும். வேலை வாய்ப்பை உருவாக்குவது என்பது மேல் மட்ட கொள்கைகளில் அங்கமாக இருக்க வேண்டும். இந்திய பொருளாதாரத்தில் போதுமான வேலை வாய்ப்புக்கள் உருவாக்கப்படுவதில்லை. ஆகவே வேலைவாய்ப்புக்களை உருவாக்க எல்லா அமைச்சகங்களும் தங்களுடைய எல்லா திட்டங்களிலும், கொள்கைகளிலும் வேலை வாய்ப்புக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். மேற்கு மற்றும் தெற்கு மாநிலங்களைப் போல மத்திய மற்றும் கிழக்கு மாநிலங்களில் வேலை வாய்ப்பு அதிகமாக உருவாவதில்லை. இப்படிப்பட்டப் பகுதிகளுக்கிடையேயான ஏற்றத் தாழ்வுகளை நீக்கி மக்களுக்கு அவர்களுடைய பகுதிகளிலேயே வேலை கிடைக்கும் வண்ணம் வாய்ப்புக்களை உருவாக்க வேண்டும். மகளிருக்கு மேலும் மேலும் வேலை வாய்ப்புக்களை அதிகரிக்க ஏதுவான கொள்கைகளும், திட்டங்களும் அவசியம். ஜனத்தொகையின் நற்பயன்களை நாம் பெற வேண்டுமானால் நாடு வேகமாக முன்னேற வேண்டும். இதில் நாம் தோல்வி அடைந்தால் ஜனத்தொகையின் நற்பயன்களுக்கு பதிலாக ஜனத்தொகை சார்ந்த கேடுகளே அதிகமாக விளையும்.

●

# பணியமர் திறமை : அதிகாரமளிக்கும் செயல்

-சுனிதா சங்கி

நிதி ஆயோக் அமைப்பில் திறன் மேம்பாடு, வேலைவாய்ப்பு, நகர்மயமாதல் மேலாண்மை ஆலோசகர்

**"திறன் வளர்ப்பு என்பது நல்ல இந்தியாவை உருவாக்கும் செயலாகும்.**

**முன்னேற்றத்தை நோக்கி இந்தியா செல்ல வேண்டுமானால், திறன் மேம்பாடு நம்முடைய**

**முக்கிய நோக்கமாக இருக்க வேண்டும்" பிரதமர் 15 ஆகஸ்ட் 2014.**

இந்தியாவின் மக்கட்தொகையில் ஒரு முக்கிய மாற்றம் ஏற்படும் நேரமிது. சுமார் 65 சதவிகிதத்தினர் 15-59 என்ற வயதுக்குள் உள்ளனர். நாம் உலகத்தின் திறன் தலைநகரமாக உருவாக இது ஒரு நல்ல வாய்ப்பு. உலகளாவிய திறன் தர அடிப்படையில் முதிர்ந்த பொருளாதாரங்களின் தேவையான திறமையான திறன்களை நாம் வழங்க முடியும்.

தேசிய இளைஞர்கள் கொள்கை 2014இன் படி 15-29 வயதுக்குட்பட்ட எல்லோரும் இளைஞர்களாக கருதப்படுகிறார்கள். அவர்கள், பல்வேறு தன்மைகள், தேவைகள், எதிர்பார்ப்புகள் ஆகியவைகளைக் கொண்டவர்களாக உள்ளனர். 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மக்கள்தொகையில் இவர்கள் 28 சதவிகிதம் உள்ளனர். இந்தியாவின் மொத்த உள் நாட்டு உற்பத்திக்கு 34 சதவிகிதம் பங்களிக்கிறார்கள். இளைஞர்களுக்கு அதிக வேலை வாய்ப்பு அளித்து அவர்களின் உற்பத்தித் திறனை அதிகரித்தால், உள் நாட்டு மொத்த உற்பத்தியில் அவர்களின் பங்களிப்பை அதிகரிக்க முடியும். இன்றைய தேவை இந்த இளைஞர்கள் தங்களுடைய முழு திறன்களையும் வெளிப்படுத்த வாய்ப்பளித்து திறன்மிகு தொழிலாளர் படையில் இந்தியா முன்னணி வகிக்க வேண்டும்.

இந்தியாவின் மக்கட்தொகை அளவின் பயன்கள், இந்தியாவின் எல்லா பகுதிகளிலும் ஒரே மாதிரி பெறப்படுவதில்லை. தீபகற்ப பகுதிகளான மேற்கு வங்கம், கேரளம், கர்நாடகம், தமிழ்நாடு மற்றும் ஆந்திர பிரதேச ஆகிய மாநிலங்களுக்கும் உட்பகுதிகளான மத்திய பிரதேசம், ராஜஸ்தான் மற்றும் பிஹார் மாநிலங்களுக்கிடையே பெரிய வேற்றுமை காணப்படுகிறது. தீபகற்ப மாநிலங்களில், சீனா, கொரியா போலவே வேலை செய்யும் வயதுடைய மக்களின் ஜனத்தொகை மிகவும் அதிகரித்தும் மிகவும் குறைந்தும் காணப்படுகிறது. ஆனால், உட்பகுதி மாநிலங்களில் உள்ள பணியாளர்கள் இளமையாகவும், வேகம் மிகுந்தவர்களாகவும் இருக்கிறார்கள். வேலை செய்யும் வயதுள்ளவர்களின் எண்ணிக்கை அதிகரித்து, இந்த நூற்றாண்டின் மத்தி வரை அதே நிலைமையில் நீடிக்க வாய்ப்புண்டு[2].

ஆகவே, ஜனத்தொகை அளவில் இரண்டு இந்தியாக்கள் உள்ளன. இதனால், கொள்கைகளும் மாறுபட வேண்டும், அதாவது விரைவில் வயது முதிர்வடையும் இந்தியா (தீபகற்ப இந்தியா) இங்கு முதியோர்கள் மிகுந்து அவர்களின் தனித்தேவைகள் கவனிக்கப்பட வேண்டும்; மற்றும் ஒரு இளம் இந்தியா (உட்பகுதி மாநிலங்கள்) இங்கு மக்களுக்கு கல்வி, திறன் மேம்பாடு, மற்றும் வேலை வாய்ப்புகள் வழங்குவதில் அக்கறை காட்ட வேண்டும். ஆனால், இங்குள்ள இளைஞர்களைத் திரட்டி அவர்களுக்கு தொழில்கல்வி அளித்து திறன் வளர்ப்பது கடினமான காரியமாகும். இதற்குக் காரணம் அவர்களுக்கு வேறு இடங்களுக்கு செல்வதில் தயக்கம், பயிற்சிக்கான செலவை ஏற்க இயலாமை. வேலை அளிப்பவர்களின் ஏற்பு இல்லாமை. மிகக்குறைந்த எழுத்தறிவு மற்றும் போதிய விழிப்புணர்வு இல்லாமை ஆகியவைகளாகும். இந்த இளைஞர்களுக்கு அதிகாரமளிக்க முற்படும் போது, தொழிலாளர் சந்தையில் அதனுடைய பங்கு என்ன என்பதை பார்க்க வேண்டும்.

### இளைஞர்களும் தொழிலாளர் சந்தையும்

தொழிலாளர் சந்தைக் குறியீடுகளான தொழிலாளர்களின் எண்ணிக்கையில் பங்கேற்பு விகிதம் (பணி செய்பவர்கள் அல்லது பணி தேடுபவர்கள்), மொத்த மக்கட்தொகையில் பணியாளர்களின் விகிதம் மற்றும் வேலை இல்லாதவர்களின் விகிதம் அட்டவணை 1இல் கொடுக்கப்பட்டுள்ளது. இது, இந்தியாவின் தொழிற்சந்தையில் இளைஞர்களின் பங்கை வெளிப்படுத்துகிறது.

**தொழிலாளர்களின் எண்ணிக்கையில் பங்கேற்பு விகிதம், மொத்த மக்கட்தொகையில் பணியாளர்களின் விகிதம் மற்றும் வேலை இல்லாதவர்களின் விகிதம் பல வயது இளைஞர்களின் நிலைமைகள்:**

1. தேசிய இளைஞர் கொள்கை 2014 :

2. அத்தியாயம் 1 பொருளாதார நிலைமை மற்றும் கொள்கைசார் சவால்கள், பொருளாதார ஆய்வறிக்கை, 2016-17.

| | கிராமப்புற ஆண்கள் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| வயது பிரிவினர் | 1999-2000 | | | 2011-12 | | |
| | தொழிலாளர்களின் எண்ணிக்கையில் பங்கேற்பு விகிதம் | மொத்த மக்கட்தொகையில் பணியாளர்களின் விகிதம் | மக்கட்தொகையில் வேலை இல்லாதவர்களின் விகிதம் | தொழிலாளர்களின் எண்ணிக்கையில் பங்கேற்பு விகிதம் | மொத்த மக்கட்தொகையில் பணியாளர்களின் விகிதம் | மக்கட்தொகையில் வேலை இல்லாதவர்களின் விகிதம் |
| **15-19** | 532 | 503 | 6.5 | 333 | 303 | 11.4 |
| **20-24** | 889 | 844 | 6.2 | 788 | 742 | 6.9 |
| **25-29** | 975 | 950 | 3.2 | 963 | 942 | 2.8 |
| **15-29** | - | 741 | 5.1 | - | 616 | 6.1 |
| மொத்தம் | 540 | 531 | - | 553 | 543 | - |
| | **கிராமப்புற பெண்கள்** | | | | | |
| **15-19** | 314 | 304 | 3.1 | 164 | 156 | 8.0 |
| **20-24** | 425 | 409 | 4.9 | 297 | 278 | 9.9 |
| **25-29** | 498 | 491 | 2.4 | 369 | 357 | 5.8 |
| **15-29** | - | 400 | 3.7 | - | 258 | 7.8 |
| மொத்தம் | 302 | 299 | - | 253 | 248 | - |
| | **நகர்ப்புற ஆண்கள்** | | | | | |
| **15-19** | 366 | 314 | 15.4 | 256 | 223 | 14.4 |
| **20-24** | 755 | 658 | 13.9 | 664 | 594 | 11.6 |
| **25-29** | 951 | 883 | 7.5 | 951 | 906 | 5.3 |
| **15-29** | - | 593 | 11.5 | - | 558 | 8.9 |
| மொத்தம் | 542 | 518 | - | 563 | 546 | - |
| | **நகர்ப்புற பெண்கள்** | | | | | |
| **15-19** | 121 | 105 | 15.5 | 89 | 78 | 15.3 |
| **20-24** | 191 | 155 | 25.8 | 197 | 160 | 21.9 |
| **25-29** | 214 | 194 | 15.8 | 253 | 231 | 10.8 |
| **15-29** | - | **149** | **19.9** | - | **157** | **15.6** |
| மொத்தம் | **147** | **139** | - | **155** | **147** | - |
| | **கிராமப்புற ஆண்கள்** | | | | | |
| வயது பிரிவினர் | **1999-2000** | | | **2011-12** | | |
| | தொழிலாளர்களின் எண்ணிக்கையில் பங்கேற்பு விகிதம் | மொத்த மக்கட்தொகையில் பணியாளர்களின் விகிதம் | மக்கட்தொகையில் வேலை இல்லாதவர் களின் விகிதம் | தொழிலாளர்களின் எண்ணிக்கையில் பங்கேற்பு விகிதம் | மொத்த மக்கட்தொகையில் பணியாளர்களின் விகிதம் | மக்கட்தொகையில் வேலை இல்லாதவர் களின் விகிதம் |
| **15-19** | 532 | 503 | 6.5 | 333 | 303 | 11.4 |
| **20-24** | 889 | 844 | 6.2 | 788 | 742 | 6.9 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 25-29 | 975 | 950 | 3.2 | 963 | 942 | 2.8 |
| 15-29 | - | 741 | 5.1 | - | 616 | 6.1 |
| மொத்தம் | 540 | 531 | - | 553 | 543 | - |
| | **கிராமப்புற பெண்கள்** | | | | | |
| 15-19 | 314 | 304 | 3.1 | 164 | 156 | 8.0 |
| 20-24 | 425 | 409 | 4.9 | 297 | 278 | 9.9 |
| 25-29 | 498 | 491 | 2.4 | 369 | 357 | 5.8 |
| 152-9 | - | 400 | 3.7 | - | 258 | 7.8 |
| மொத்தம் | 302 | 299 | - | 253 | 248 | - |
| | **நகர்ப்புற ஆண்கள்** | | | | | |
| 15-19 | 366 | 314 | 15.4 | 256 | 223 | 14.4 |
| 20-24 | 755 | 658 | 13.9 | 664 | 594 | 11.6 |
| 25-29 | 951 | 883 | 7.5 | 951 | 906 | 5.3 |
| 15-29 | - | 593 | 11.5 | - | 558 | 8.9 |
| All | 542 | 518 | - | 563 | 546 | - |
| **நகர்ப்புற பெண்கள்** | | | | | | |
| 15-19 | 121 | 105 | 15.5 | 89 | 78 | 15.3 |
| 20-24 | 191 | 155 | 25.8 | 197 | 160 | 21.9 |
| 25-29 | 214 | 194 | 15.8 | 253 | 231 | 10.8 |
| 15-29 | - | 149 | 19.9 | - | 157 | 15.6 |
| மொத்தம் | 147 | 139 | - | 155 | 147 | - |

ஆதாரம் : தேசிய மாதிரி நிறுவனத்தின் வேலை வாய்ப்பு மற்றும் வேலையின்மை பற்றிய பல ஆய்வுகள்.

குறிப்பு 1 : தொழிலாளர்களின் எண்ணிக்கையில் பங்கேற்பு விகிதம் என்பது ஆயிரம் மக்களின்/மக்கள் தினங்களில் எத்தனை பேர் தொழிலாளர்களாக/ தொழிலாளர் நாட்களாக உள்ளனர். (வேலை செய்பவர்களையும், வேலை இல்லாதவர்களையும் சேர்த்து)

2. மொத்த மக்கட்தொகையில் பணியாளர்களின் விகிதம் என்பது ஆயிரம் மக்களில்/மக்கள் நாட்களில் எத்தனை பேருக்கு/எத்தனை மக்கள் நாட்களுக்கு வேலை உண்டு என்பதாகும்.

3. வேலையற்றவர்களின் விகிதம் என்பது ஆயிரம்பேர்களில்/ஆயிரம் மக்கள் நாட்களில் எத்தனை பேர்/எத்தனை மக்கள் நாட்களுக்கு வேலை இல்லை.

மேற்கண்ட அட்டவணையில் காண்பது போல எல்லா வயதினர்களிடையேயும் ஆண் பெண் மற்றும் எல்லா பகுதிகளிலும் உள்ளவர்கள் வேலையில் சேரும் விகிதம் குறைந்து கொண்டே வருகிறது. ஆனால், கிராமப்புற பெண்களில் இந்தக் குறைவு மிகவும் அதிகரித்து உள்ளது. இதற்கு கிராமப்புறங்களில் வேலை வாய்ப்புக் குறைவும் சமூக மற்றும் மதம் சார்ந்த பழக்க வழக்கங்களும் காரணமாக இருக்கலாம். கிராமப்புற மற்றும் நகர்ப்புற பகுதிகளில் இரண்டிலுமே இளம் வயது ஆண்களின் விகிதம் குறைவாக இருப்பதற்குக் காரணம் அவர்கள் மேற்கொண்டு படித்து திறன் பெற்று பிறகு வேலை செய்யலாம் என்ற எண்ணத்தால் இருக்கலாம். 15 முதல் 29 வயது வரையிலான இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பும் இதன்படியே உள்ளது.

வேலைவாய்பின்மை விகிதத்தைப் பார்க்கும் போது, பல வயது வகுப்பினர் மற்றும் பிற அடிப்படையில் அது 6.1 சதவிகிதத்திலிருந்து 15.6 சதவிகிதம் வரை உள்ளது. கிராமப்புற பெண்களிடையே (15 - 29) வேலைவாய்பின்மை நிலைமை மிக உயர்ந்த அளவாக 15.6 சதவிகிதமாக இருந்தது. இது, அவர்களுக்கு இருக்கும் குடும்பப் பொறுப்புக் காரணமாக இருக்கலாம். பல வயது வகுப்பினரிடையே வேலை வாய்ப்பை பார்க்கும் போது, 15-19 வயதினரிடையே மிக உயர்ந்த விகிதம் உள்ளது. வயது வகுப்பு உயர உயர இது குறைந்து கொண்டே போகிறது. ஆனாலும், தேசிய அளவை விட உயர்ந்தே உள்ளது.

படித்த இளைஞர்களிடையே, பெருமளவு வேலையின்மை காணப்படுவதால் நாம் ஜனத்தொகையின் நற்பயனைப் பெற இயலவில்லை. 2011-12 வேலை

வாய்ப்பு தகவலின்படி படித்த இளைஞர்களிடையே காணப்படும் உயர் அளவு வேலையின்மை அவர்கள் எதிர்பார்த்த வேலை இல்லாத காரணமாகவும் அவர்கள் விரும்பிய வேலை கிடைக்காததுமாக இருக்கலாம். இரண்டாவது அட்டவணையில் நாம் காண்பது போல முறைப்படி படித்தவர்களிடையே மட்டும் வேலையற்றத் தன்மை அதிகமாக காணப்படுவதோடு பட்டயப்படிப்பு மற்றும் சான்றிதழ் படிப்பு சார்ந்த தொழில் கல்வி பயின்றவர்களிடையேயும் பெருமளவு வேலையின்மை காணப்படுகிறது.

**அட்டவணை 2 - பலவகைக் கல்வி நிலைகளில் சாதாரணமான வேலையின்மை விகிதம்**

| பொதுக்கல்வி நிலைமை | வேலையின்மை விகிதம் (15 முதல் 29 வயது) | | | |
|---|---|---|---|---|
| | கிராமப்புற | | நகர்ப்புற | |
| | ஆண் | பெண் | ஆண் | பெண் |
| **கல்வி கற்காதவர்கள்** | 2.3 | 0.8 | 2.5 | 1.6 |
| **ஆரம்பக்கல்வி வரை** | 3.2 | 0.6 | 4.8 | 4.3 |
| **நடுநிலைக்கல்வி வரை** | 4.2 | 4.6 | 5.1 | 5.8 |
| **உயர்நிலைக் கல்விவரை** | 4.6 | 8.6 | 5.5 | 15.1 |
| **மேல்நிலைக் கல்வி வரை** | 6.5 | 13.8 | 12.0 | 14.6 |
| **பட்டய / சான்றிதழ் படிப்புகள் வரை** | 15.9 | 30.0 | 12.5 | 17.3 |
| **பட்டப்படிப்புக்கு மேல்** | 19.1 | 29.6 | 16.3 | 23.4 |
| **எல்லா வகையும்** | 5.0 | 4.8 | 8.1 | 13.1 |

மேற்கண்ட விவரங்கள்படி ஒரு எதிர்மறையான நிலைமை இருப்பதை பார்க்கிறோம். படித்த இளைஞர்கள் வேலை தேடுகிறார்கள், தொழில் நிறுவனங்கள் திறன் பெற்ற பணியாளர்களைத் தேடுகிறார்கள். இளைஞர்களுக்கும் வேலை கிடைப்பதில்லை. தொழில்களுக்கும் மனித வளம் கிடைப்பதில்லை. இப்படிப்பட்ட திறன் முரண்பாட்டால் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு இல்லாமல் உள்ளது. இதற்குக் காரணம், ஒரு குறிப்பிட்ட திறனுக்கு உண்டான வேலை வாய்ப்பை விட மிக அதிகமானவர்கள் அந்த திறன்களைக் கொண்டிருக்கலாம் அல்லது மாணவர்களின் கல்வியின் திறனும் பணியமர்த்துவதற்குத் தேவையான திறன்களுக்கு ஏற்றவாறு இல்லாமல் இருக்கலாம். படிப்பிற்கு ஏற்ற வேலை வாய்ப்பின்மையாலும், தொழில்நுட்ப வளர்ச்சியால் சில திறன்கள் பயன்படாமலும் போகலாம். முறைப்படுத்தப்படாத துறைகளில் உள்ள வேலைகளில் 90 சதவிகித வேலை வாய்ப்பு வழங்கப்படக்கூடிய நிலையில் இந்தியாவில் வேலையற்றவர்களில் இளம் வயதினர் 49 சதவிகிதம் உள்ளனர். இந்தியாவில் படித்த இளைஞர்கள் ஒன்று வேலையில்லாமல் இருக்கிறார்கள் அல்லது குறைவான பணியில் உள்ளனர், வேலை தேடும் நிலையில் உள்ளனர், வேலைகளில் மாறிக்கொண்டே இருக்கின்றனர் அல்லது பாதுகாப்பற்ற பணிச் சூழ்நிலையில் வேலை செய்து கொண்டிருக்கின்றனர். 2017 இந்தியத் திறன் அறிக்கையின்படி சுமார் 40 சதவிகித படித்த இளைஞர்கள் பணி செய்ய திறம் பெற்றவர்களாக இருக்கிறார்கள். ஆகவே, முக்கிய சவால்களாக உள்ளது பணி செய்யும் ஏழைகள், பணிப்பாதுகாப்பின்மை, சந்தைக்கு ஏற்ற திறன் இல்லாமை, தகவல் விழிப்புணர்வின்மை மற்றும் திறன் மேம்பாடு பற்றிய போதிய அறிவு இல்லாமையாகும். இதனால் நாம் தெரிந்து கொள்வது, (i) தற்போது தேவைப்படும் திறன்களுக்கேற்ற மனித வளத்தை அளிப்பது (ii) ஏற்பட்டுவரும் மாற்றங்களை ஏற்றுக்கொள்ளும் வண்ணம் பணியாளர்களும், நிறுவனங்களும் மாறிக்கொள்ளும் தன்மை மற்றும் (iii) எதிர்கால தொழில் சந்தைக்கு ஏற்ப திறமைகளை வளர்த்துக்கொள்வது. ஆகவே, பணியமர்த்துவதை மேம்படுத்துவது எப்படி என்பதைப் பற்றி நாம் சிந்திக்க வேண்டும்.

**பணியமர்த்துவதற்கான முயற்சிகள்**

ஜனத்தொகையின் நற்பயன்களைப் பெறவும் இளைஞர்களைப் பணியமர்த்தக்கூடிய நிலைக்கு உருவாக்கவும் 2015இல் தேசிய திறன் மேம்பாடு இயக்கமும், தேசிய திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவுக் கொள்கையும் மேற்கொள்ளப்பட்டது. இந்த இயக்கத்தின்படி தேவைக்கு ஏற்ப மனித வளத்தை வழங்க திறன் படைத்தவர்களை தொடர்ந்து வழங்குவதற்கும் திறன்களை மேம்படுத்தவும் இப்போதுள்ள திறமைகளை தொழில்நுட்ப மேம்பாட்டிற்கு ஏற்ப மாற்றியமைக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இது அல்லாமல், தேசிய திறன் தகுதி அமைப்பின் மூலம் உலக தரத்தில் சான்றிதழ்களை வழங்குவது தேவைக்கு ஏற்ப மனித வளத்தை வழங்குவது மற்றும் தொழில்முனைவை ஊக்கப்படுத்துவது ஆகியவை பிற முயற்சிகளாகும். இதன் அடிப்படையில், எல்லா அமைச்சகங்களுக்கும்

இடையே, ஒருங்கிணைப்பு, பணியாளர்களை திரட்டி அவர்களை தொடர்பில் வைத்திருப்பது, வேலை வாய்ப்பு அணுகுமுறைகளை மேம்படுத்துவது மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரை அணுகி செயல்திட்டங்களை மேற்கொள்ளுதல் ஆகியவை புதிய முயற்சிகளாகும்.

தொழில்முறைக் கல்வியைப் பெரிதளவு மேம்படுத்தி தரத்தையும் மொத்த அளவையும் உயர்த்த பெருமுயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதற்காக, ஒன்பதாம் வகுப்பு முதல் பள்ளிக் கல்வியில் தொழில்சார் திறன்களையும் வழங்க கல்வி முறையில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. இதற்கான பாடத் திட்ட மாற்றங்கள், தொழில்முறை பயிற்சிகள், ஆசிரியர் களுக்கான பயிற்சிகள், தொழில்துறைக்கு ஏற்ப தொழில்பயிற்சிக் கழகங்களை மாற்றியமைத்தல், தொழில் நிறுவனங்களோடு புரிந்துணர்வு ஒப்பந்தம், பொருட்களை வழங்குவதில் மேம்பட்ட தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துவது, ஒவ்வொரு தொழில் துறைக்குமான திறன் மேம்பாட்டுக் கழகங்களை அவற்றோடு ஒருங்கிணைப்பது, தொழில் கூடங்களில் பயிற்சி அளிப்பது மற்றும் அதற்குத் தேவைப்படும் இளைஞர்களை ஈர்க்க வலைதளப் பயிற்சி, அரசு தனியார் கூட்டுமுயற்சியில் திறன் மேம்பாட்டு புதிய நிலையங்களை அமைத்தல், மாறிவரும் வேலைகளுக்கு ஏற்ப திறன்களை வழங்குவது ஆகியவைகளும் மேற்கொள்ளப்படுகின்றன. திறன் வழங்கு பல்கலைக்கழகங்களை உருவாக்கி தேவைப்படும் ஏராளமான திறம் படைத்த பயிற்சியாளர்களை உருவாக்குவது, தொழில்கல்வி வழங்க பாடத்திட்டம் மற்றும் கல்வி அளிக்கும் முறைகளில் ஆய்வுகளைச் செய்தல் மற்றும் திறன் மேம்பாட்டு கல்வி நிலையங்களை மேற்பார்வை செய்வதும் புதிய முயற்சிகளாகும். திறன் மேம்பாட்டு அமைச்சகம் உள்ளிட்ட 20 மத்திய அமைச்சகங்களின் பல்வேறு முயற்சிகளாக பொதுவான திட்டங்கள், பகுதிக்கு ஏற்ற திட்டங்கள், தொழில்துறைக்கு ஏற்ற திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு இளைஞர்களின் பணியமர்வுத் திறன் மேம்படுத்தப்படுகிறது. பலதரப்பட்ட திறன்களை வழங்க 13,000க்கும் மேற்பட்ட நிலையங்கள் 4000க்கும் மேற்பட்ட துணை பொறியியல் கல்வி நிறுவனங்கள் மற்றும் 20,000க்கும் மேற்பட்ட தொழில்சார் பயிற்சி நிலையங்கள் உள்ளன. இங்கு மக்கள் தங்கள் வாழ்நாள் முழுவதும் திறன் மேம்பாட்டுக் கல்வியையும், பயிற்சிகளையும் பெற்று அதற்கான நம்பகத்தன்மை கொண்ட சான்றிதழ்களையும் திறன்சார் தகுதிகளின் மொத்த அளவையும் பெறுவார்கள். முறைப்படுத்தப்படாத துறைகள் பெருமளவிலான மக்கள் குறைந்த திறன்களோடு பணி செய்வதால் அவர்களை சோதித்து, சான்றிதழ்களை வழங்க அவர்களுக்கு ஏற்கனவே உள்ள கல்வியை நிர்ணயிக்க பிரதம மந்திரி தொழில் மேம்பாட்டுத் திட்டத்தைப் பயன்படுத்தி, இப்படிப்பட்ட பணியாளர்களுக்கு திறன் மேம்பாடும், பிற திறன்களும் வழங்கப்பட வேண்டும். பிரதமரின் இந்த திட்டத்தால், பள்ளிப்படிப்பைப் பாதியிலேயே விட்டவர்கள் பணியமர்வுக்குத் தேவையான திறன்களைப் பெற்று வேலை வாய்ப்பு பெற முடியும். இதற்கு, பணியாளர் சந்தையில் பெரிய மாற்றங்கள் ஏற்பட்டு, பணியாளர்கள் திறன் மேம்பாடு பெற மிகுந்த ஆர்வம் காட்டவேண்டும்.

தேசிய திறன் மேம்பாட்டு அமைப்பு பலவகையான அமைப்பு சார்ந்த மாற்றங்களை மேற்கொண்டு வருகிறது. இதற்கான தேசிய திறன் தகுதி அமைப்பு திறன் மேம்பாட்டு ஆர்வத்தை ஊக்குவித்து, தொழிலாளர்கள் பதவி உயர்வு பெறவும் பிற தொழில்களுக்கு மாறவும் வசதி செய்கிறது. மத்திய அரசு நிறுவனங்களுக்கு பொதுவான செயல்திட்டங்களின்படி ஒரே அளவிலான கட்டணங்கள், பாடத்திட்டங்கள், பயிற்சியின் காலம் ஆகியவை சீரமைக்கப்படும். வேலைவாய்ப்பு, பணியமர்த்தல் போன்றவைகளுக்கு தேவையான தரமான தகவல்களை அளிக்க தொழிலாளர் சந்தை அமைப்பை மேம்படுத்துதல், நாட்டில் தொழில் வழங்கு திட்டத்தை கண்காணித்தல் ஆகியவை பிற முயற்சிகளாகும். தேசிய திறன் மேம்பாட்டு வாரியம், தனியார் துறையைப் ஊக்குவித்து உள் கட்டமைப்பு வசதிகளை பெருக்கி 2015 கொள்கையில் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை அடைய அதற்கு ஏற்றவாறான தொழில்பயிற்சிகளை அளிக்கிறது. ஒவ்வொரு துறைக்குமான திறன் மேம்பாட்டு கவுன்சில்கள், அந்தந்தத் துறையினால் மேற்கொள்ளப்பட்டு தேவைக்கு ஏற்ற திறன்களை வழங்க ஏதுவான பயிற்சி திட்டங்களையும் மதிப்பீடு மற்றும் சான்றிதழ் வழங்கு முறைகளையும் மேம்படுத்தி வருகின்றன. ஏழை மாணவர்கள், திறன் மேம்பாட்டு பயிற்சிகளில் சேர கடன் வசதியையும் அரசு துவக்கி உள்ளது. தேவையான கொள்கையும், திட்ட செயல்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டாலும், இளைஞர்களின் சக்தியை முழுமைப் படுத்தவும், பொருளாதார மேம்பாட்டிற்கும் அவர்களுக்குத் தேவையான திறன்களை வழங்க வேண்டியுள்ளது. இதற்கு தேவையான அடிப்படை அம்சங்களை இப்போது நாம் பார்க்கலாம்.

**இளைஞர் சக்தியை பயன்படுத்துதல் : என்ன செய்ய வேண்டும் :**

**1. இளைஞர்களின் ஆர்வத்தை அளவெடுத்தல்**

எல்லோரையும் உள்ளடக்கிய சமூகப் பொருளாதார நிலைமையை ஏற்படுத்த கண்ணியமான வேலை வாய்ப்புக்களை வழங்க ஏதுவாக திறன் மேம்பாட்டு உருவாக்க இளைஞர்களின் ஆர்வங்களை அளவெடுக்க வேண்டியது அவசியம். 2011-12ஆம் ஆண்டின் படித்த வேலை வாய்ப்பற்றவர்களின் ஆய்வறிக்கையின்படி கிராமப்புற மற்றும் நகர்ப்புற பகுதிகளில் சிலவகையான தொழில்களுக்கே விருப்பம் அதிகமாகக் காணப்படுகிறது. 22.3 சதவிகித ஆண்கள் வாகனங்களை ஓட்டுவது மற்றும் பழுது பார்க்கும் தொழில் கல்வி பெற விரும்புகிறார்கள். நகர்ப்புற ஆண்களில் 26.3 சதவிகிதத்தினர் வலைதள வியாபாரத்

துறைகளில் பயிற்சி பெற விரும்புகிறார்கள். அதேபோல கிராமப்புறங்களில் 32.2 சதவிகிதத்தினர் தையல் துறையில் பயிற்சி பெறுகிறார்கள். நகர்ப்புறப் பெண்களில் 30.4 சதவிகிதத்தினர் பெரும்பாலும் வலைதள வியாபாரத்துறையில் பயிற்சி பெற விரும்பினர். தேசிய திறன் மேம்பாட்டுக் கழகத்தின் திறன் முரண்பாட்டு ஆய்வறிக்கையை இந்த நிலைமையோடு ஒப்பிட்டு பார்க்கும் போது தேவையான திறமைகளுக்கும், தற்போது பயிற்சி நிலையங்கள் அளிக்கும் திறன்களுக்கும் உள்ள இடைவெளி தெள்த்தெளிவாகப் புரியும். தேசிய திறன் மேம்பாட்டு கழகத்தின் ஆய்வறிக்கையின்படி மிகுந்த வேலைவாய்ப்பு உற்பத்தி செய்யும் துறைகளுக்கு திறமையான மனித வளம் கிடைப்பதில் பிரச்சினைகள் காணப்படும். தேசிய திறன் மேம்பாட்டு கழகத்தின் திறன் முரண்பாடு அறிக்கையில் காணப்படும் இளைஞர்களின் ஆர்வங்கள் தகவல் இணைப்பு-1இல் விளக்கியுள்ளது போல தேவையான திறன்களுக்கு ஏற்ப திறன் பயிற்சி அளிப்பதற்கு இளைஞர்களின் ஆர்வத்தை அளவிடுவது அவசியம் என்பதை அறிகிறோம். இளைஞர்களின் ஆர்வ அறிக்கையில் பல மாநிலங்களில் கட்டுமானத் தொழில், போக்குவரத்து, அதற்கான கட்டமைப்பு, விவசாயம் மற்றும் அதை சார்ந்த தொழில்களான உணவு பதனிடுதல் போன்ற துறைகளில் வேலைவாய்ப்புக்கள் மிகுந்து உள்ளன. ஆனால், பல மாநிலங்களில் இந்த வேலைகளுக்குச் செல்ல இளைஞர்களுக்கு ஆர்வம் இல்லை.

ஆகவே, பொருளாதாரத் தேவைகளுக்கு ஏற்ப பணியாளர்களின் தேவையும், அப்படிப்பட்டவர்களை உருவாக்குவதற்கு இளைஞர்களின் ஆர்வத்தை அளவெடுத்தல் அவசியமாகும். சிறப்பாக திறம் பெற்றவர்களுக்கு அங்கீகாரமும், விருதுகளும் வழங்கி இளைஞர்களுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளில் ஊக்கமளிக்க முடியும் என்று கருதப்படுகிறது. இளம் வயதிலேயே, எந்தத் தொழிலும் சிறந்த தொழில் என்ற எண்ணத்தை ஏற்படுத்தினால் கடுமையாக உழைக்க வேண்டிய தொழில்களுக்கு மதிப்பு ஏற்படும். ஆகவே, திறன் மேம்பாட்டுத் திட்டங்களைப் பிரபலப்படுத்தவும், இளைஞர்களின் ஆர்வத்தைத் தூண்டவும் பலவகையான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். அப்படிச் செய்தால் தேவையானவர்கள் உருவாவார்கள்.

**2. எண்ணிக்கை அதிகரிக்க இளைஞர்களை திரட்டுதல்:**

தேசிய திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவுக் கொள்கை 2015இன்படி 2022க்குள் 11 கோடி மக்களுக்கு திறன்களை அளிக்க வேண்டும். 21 கோடி பேரின் திறன்களை மேம்படுத்த வேண்டும். ஆகவே, இந்த திறன் மேம்பாட்டிற்காக நாடெங்கிலும் உள்ள இளைஞர்களைத் திரட்ட வேண்டும். எப்படி நாம் இளைஞர்களை திரட்ட முடிகிறதோ, அப்படித்தான் திறன் மேம்பாட்டுத் திட்டங்கள் வெற்றி பெறும். தற்போதுள்ள நிலைமைகளில் திறன் பெறுவோரைத் திரட்டுவது, திறன் அளிப்பவரிடம் விடப்பட்டுள்ளது. தொழில் சார்ந்த படிப்புகள் மற்றும் தொழில் சந்தை பற்றிய போதிய தகவல் இல்லாமை, தொழில் கல்வி பெறுவதற்கு வசதி இல்லாமை, ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு செல்ல விருப்பம் இல்லாதது, பழைய பாடத் திட்டங்கள் ஆகியவை மக்களைத் திரட்ட முடியாமைக்கு காரணமாகக் கூறப்படுகிறது. இப்போதுள்ள தேவை, பயிற்சி பெற வேண்டியவர்களை திரட்ட வழிவகைகளாகும். மஹாராஷ்டிரா அரசு துவக்கியுள்ள திறன் சக்தி மாதிரியில் ஒரு சமூகத்திலிருந்து இளம் பெண்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, பயிற்சி அளிக்கப்பட்டு அவர்கள் இந்த சமூகத்தில் உள்ளவர்களுக்கு எடுத்துச் சொல்லி திறன் பயிற்சி திட்டங்களில் சேர வைக்கிறார்கள். உள்ளாட்சி அமைப்புகளில் பணி செய்பவர்கள் அந்தந்த பகுதியில் உள்ள இளைஞர்களின் தேவைக்கு ஏற்ப பட்டியல் தயாரித்து அவர்களை ஊக்குவித்து, பணிக்குச் செல்வதற்காகவும், சுயமாக வேலை செய்யவும், பயிற்சி பெற வைக்க முடியும். இந்தத் தகவல்களை ஆதார் அட்டை, வாக்காளர் அட்டை, வங்கிக் கணக்கு ஆகியவற்றோடு இணைத்து வலைதளத்தில் தகவல்களாக அளிக்க முடியும். இந்த அலுவலர்கள், வீடுவீடாகச் சென்றும் மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்த முடியும். பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் பிற கல்வி நிறுவனங்களோடு நேரடித் தொடர்பு கொண்டு, ஒரு தேசிய விழிப்புணர்வு இயக்கத்தை நடத்தினால், பெருவாரியான மக்கள் பயிற்சிக்கு சேருவார்கள்.

**3. பலவகையான நிலைமைகளை சமாளிப்பது :**

இந்திய தொழில் சந்தையில் துறை, பாலினம் மற்றும் பகுதியை சார்ந்த வேற்றுமைகள் உள்ளன. இந்தியத் தொழில் சந்தையில் பெரும்பான்மையான மக்கள், முறைப்படுத்தப்படாத துறைகளில் உள்ளனர் (93%). முறைப்படுத்தப்பட்ட துறைகளில் 8% மக்கள் மட்டுமே உள்ளனர். இந்த இரண்டு துறைகளுக்குமான பயிற்சி வேறு வேறாகும். முறைப்படுத்தப்படாத துறையில் ஒருவரே பல வேலைகளை செய்ய வேண்டியுள்ளது. அவர்களுக்கு திறன் சார்ந்த சிறப்புப் பயிற்சி இல்லை. அவர்கள், ஒரு வேலையில் சேர்ந்து தொழிலை கற்கிறார்கள். இதனால், உற்பத்தித் திறனும் பாதிக்கப்படுகிறது. இந்தத் துறையில் அதிகமான கல்வியும், திறமையும் பெறாதவர்கள் பணி செய்கிறார்கள்[3]. தேசிய பணிப் பயிற்சி திட்டத்தைப் பயன்படுத்தி, சிறந்த திறன் படைத்த மனித வளத்தை நாம் உருவாக்க வேண்டும்.

3. இந்திய தொழில் சந்தையில் திறன் முரண்பாடுகள் : கொள்கை முக்கியத்துவங்கள் மற்றும் எதிர் கொள்ள வேண்டிய சவால்கள். ஸஹானா ராய் சவுத்திரி, தி இந்தியன் ஜர்னல் ஆஃப் இண்டஸ்ரியல் ரிலேஷன்ஸ், தொகுப்பு 49, எண் 3, ஜனவரி 2015.

மொத்த மக்கள் தொகையில், பெண்களின் பங்கு 48 சதவிகிதம் உள்ளது. ஆனாலும், தொழிலாளர் சந்தையில் அவர்களுடைய பங்கு 22 சதவிகிதம்தான். இந்திய பிரதமர் கூறியபடி "பெண்களுடைய திறன்களை வளர்த்து, மேம்பாட்டு இயக்கங்களோடு சேர்த்தால் ஒரு நாட்டின் வளர்ச்சி பெருமளவு உயரும்." இன்றைய தேவையாக பெண்களுக்கு திறன்கள் மற்றும் மறு திறன்களை அளித்து அவர்களை தொழில் சந்தையில் ஈடுபடுத்த வேண்டும். பெண்களின் பங்கேற்பை உயர்த்துவதற்கான சிறப்புக் கொள்கைகளாக தேவைப்படுபவை தேவையான கட்டமைப்பு வசதி, திறன் மற்றும் மறு திறன் அளிக்க வேண்டியதற்கான குறிக்கோள் மற்றும் தொழில் நிறுவனங்கள் பெண்களுக்கு வேலை வாய்ப்பு அளித்து, அவர்களையும் தொழிலாளர்களாக ஏற்றுக் கொள்ள வேண்டும். இது மட்டுமல்லாமல் இந்தத் தொழிலை ஒரு ஆண் அல்லது பெண் மட்டும் தான் செய்ய முடியும் என்பதைத் தவிர்த்து எல்லாப் பணிகளிலும் பெண்களுக்கு வாய்ப்பளிக்க வேண்டும். இந்த வகையில், ஜிந்தால் எஃகு ஆலையில் பெண்களுக்கு பணி செய்ய வாய்ப்பளித்த ஹரியானா அரசின் முயற்சியை முன்னோடியாக ஏற்கலாம்.

தெற்கு மற்றும் மேற்கு பகுதிகளைவிட வடக்கு மற்றும் வடகிழக்கு பகுதிகளில் துறை மற்றும் பாலியல் சாலீந்த மாறுபாடுகளும், உள் கட்டமைப்பு குறைபாடுகளும் உள்ளன. தெற்கு மற்றும் மேற்கு பகுதிகளில் தனியார் மற்றும் அரசு தொழில் பயிற்சிக் கூடங்களில் 67 சதவிகிதம் இருந்து 60 சதவிகித இருக்கைகளுடன் 51 சதவிகித மக்களுக்கு பயனளிக்கிறது. வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் உள்ள தொழில் பயிற்சி நிறுவனங்கள் 33 சதவிகிதம் மட்டுமே. அவை, 40 சதவிகித இருக்கைகளுடன் 49 சதவிகித மக்களுக்கு சேவை செய்கின்றன.[4] இது மட்டுமல்லாமல், ஒவ்வொரு பகுதிகளில் உள்ள மாநிலங்களுக்கிடையே வேற்றுமைகள் காணப்படுகின்றன. இது மட்டுமல்லாமல் ஒவ்வொரு பகுதிகளில் உள் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த வேண்டும். முடிந்த வகையில் மேற்கு மற்றும் தெற்கு பகுதிகளில் உள்ளவர்கள் பிறபகுதிகளுக்கு சென்று பணியாற்ற விரும்பினால் அவர்களுக்குத் திறன் பயிற்சி / மறு திறன் பயிற்சி அளிக்க வேண்டும். இதற்காக, இடம் விட்டு இடம் பெயர்வோர்களுக்கு இரு இடங்களிலும் ஆதரவு மையங்கள் அமைக்கப்பட வேண்டும். நிறுவன சமூகப் பொறுப்பு மூலமும் பிற வகைகளிலும் தனியார் துறையினர் உள் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், பணியில் பயிற்சி அளித்தல், பணிக்கான பயிற்சி அளித்தல். பயிற்சியாளர்களுக்குப் பயிற்சி அளித்தல் மற்றும் பயிற்சிப் பாடத்திட்டங்களை மறு சீரமைத்தல் ஆகியவைகளை மேற்கொண்டு, இனிவரும் பணியாளர்களுக்கான சிறப்பான வேலை வாய்ப்புக்களை உருவாக்க வேண்டும்.

**4. இரண்டாவது வாய்ப்பு : மறு திறன் அளிப்பு, மேம்பட்ட திறன் அளிப்பு மற்றும் ஏற்கனவே கற்றதை அங்கீகரித்தல்.**

பெரும்பான்மையான இளைஞர்கள் உயர்நிலை படிக்கும் முன்பே விட்டுவிடுகிறார்கள். 2012-17க்கான 12வது ஐந்தாண்டு திட்டத்தின்படி 47 சதவிகிதம் மாணவர்கள் உயர்நிலைப் பள்ளிப் படிப்புக்கு முன்பே நின்றுவிடுகிறார்கள். ஆகவே அவர்கள் வேலை தேடும் போது அவர்களுக்கு குறைந்த திறன்களே உள்ளதால் மிகக்குறைந்த ஊதிய வேலைகளே கிடைக்கின்றன. அவர்களுக்கு, புதிய திறன்களையும், மறு திறன்களையும், மேம்பட்ட திறன்களையும் வழங்கி வாய்ப்பளிக்க வேண்டும். மாநில மற்றும் மத்திய அரசு அளவில் இவர்களுக்கு வேலை வாய்ப்பளிக்க பல திட்டங்கள் இருந்தாலும், தேசியக் கொள்கைகளை அடைவதற்கு ஏற்ப திறனளிப்பு, மறு திறனளிப்பு மற்றும் திறன் மேம்பாடு ஆகியவற்றை தனித்தனியே தெள்ப் புரிந்து திட்டங்களை வகுக்க வேண்டும். ஒவ்வொன்றிற்குமான பணியாளர்களை தேர்ந்தெடுப்பது முக்கிய சவாலாகும். பணிக்கேற்ற திறன் இல்லாமையை தெளிவாகப் புரிந்து கொண்டு அதற்கேற்ப திறன் மேம்பாட்டு திட்டங்களை வகுக்க வேண்டும். ஒரு வேலைக்கு வேண்டிய மிக முக்கியமான திறன்கள், எவை என்று மதிப் பிடப்பட்டு அப்படி அளிக்கப்படும் திறன் பயிற்சிகளால் நல்ல வேலையும், சிறந்த ஊதியமும், மேம்பட்ட வாழ்க்கையும், உற்பத்தி திறன் மேம்படுதலும் ஏறபடுமா என்று தீவிரமாக ஆய்வு செய்ய வேண்டும்.

தொழிற்சந்தையில் சிறு வயதிலேயே சேர்ந்தவர்களும், பணி அனுபவம் இருந்தும் சான்றிதழ்கள் இல்லாதவர்களும், கைவினைஞர்கள் மற்றும் பிற தொழிலாளர்கள் பரம்பரை பரம்பரையாக கற்ற அறிவையும், திறன்களையும் அங்கீகரிக்க வேண்டும். இப்படிப்பட்டவர்களின் முன் அனுபவங்கள் மற்றும் திறன்களை அங்கீகரிப்பதன் மூலம் அவர்களை பணியமர்த்துவதிலும், பணி மாற்றத்திலும், மேற்கொண்டு வாழ்நாள் முழுவதும் திறன்களைக் கற்றுக்கொள்ளவும் எல்லோரையும் உள்ளடக்கிய சமூக நலன்களை வழங்கவும் அவர்களுடைய சுய மதிப்பை உயர்த்தவும் முடியும். இந்தியாவில், சுமார் 30 கோடி பணியாளர்களுக்கு மறு திறன்களும், திறன் மேம்பாடுகளும் அவர்களுடைய முன் அனுபவங்களும், அங்கீகரிக்கப்பட வேண்டிய அவசியம் உள்ளது. திறன் மேம்பாட்டு தேசியக் கொள்கை அமைச்சகம், இதற்கு கவனம் அளித்து வேண்டிய திட்டங்களை மேற்கொண்டாலும் இப்பணியாளர்களின் முன் அனுபவங்களும், திறன்களும் அங்கீகரிக்கப்பட வேண்டியது மிகப்பெரிய சவாலாகும். எல்லா தகுதிகளுக்கும், நிலைகளுக்கும் ஏற்ற முன் திறன் அங்கீகரிப்பு முறை ஒன்றும் இல்லை. ஒவ்வொரு

4. 12வது ஐந்தாவது திட்டம் 2012-2017.

துறைக்கும் ஒவ்வொரு முறையான அணுகுமுறை தேவை. ஒவ்வொரு அங்கீகார அணுகு முறைக்கும் புதிய கொள்கைகள் தேவை. மற்றொன்றைப் பின்பற்ற முடியாது. இந்த அங்கீகார முறை வெற்றியடைய வேண்டுமானால், அதற்குத் தேவையான தொழில்முறை வழிகாட்டுதல் இருக்க வேண்டும். அதற்கேற்ற பரிந்துரை முறைகள், கொள்கையோடு இணைக்கப்பட்ட அணுகுமுறை, கல்வி மற்றும் பயிற்சித் திட்டங்களுக்கு சட்ட மற்றும் ஒழுங்குமுறை அமைப்புகள், இதில் பங்கு பெறும் அனைவரும் உற்சாகமாக பங்கேற்பதற்குமாக இந்த அங்கீகார முறையை நடைமுறைப்படுத்த ஒரு அமைப்பு முறை தேவை. இது அல்லாமல், கல்வி, பயிற்சித் தகுதியையும் ஒரு தொழிலுக்கு வேண்டிய தரங்களையும் ஒருங்கிணைக்க வேண்டும். ஒவ்வொரு இலக்கு குழுவுக்கும் ஏற்ற மதிப்பீட்டு கருவிகள் மற்றும் செயல் முறைகள் தேவை. இந்த முன் அனுபவ அங்கீகார செயல்பாடு தொடர்ந்து நிலைத்து செயல்படத் தேவையான நிதியும் தேவை.[5]

**5. பள்ளியிலிருந்து வேலைக்கு செல்லும் பயணம் சார்ந்த ஆய்வுகள் :**

15 முதல் 29 வயதிலான இளைஞர்களுக்குத் தரமான அதிக அளவிலான தொழிற்சந்தைத் தகவல்களை அளிக்க வேண்டும். பணியாளர் படை ஆய்வுகள், வேலை வாய்ப்பு, வேலையின்மை, பணியாளர் படையிலிருந்து வெளியேற்றம் ஆகிய தகவல்கள் கிடைக்கின்றன. அது அல்லாமல், எத்தனை காலத்திற்கு வேலை இல்லாமல் இருக்கிறார்கள். எப்படிப்பட்ட வேலையில் இருக்கிறார்கள், எந்தெந்த துறையில் வேலையில் இருக்கிறார்கள் என்ற தகவல்கள் கிடைக்கின்றன. ஆனால் பள்ளி படிப்பு முடித்து பணிக்கு செல்வது எளிதா கடினமா போன்ற தகவல்கள் கிடைப்பதில்லை. ஆகவே, பள்ளியிலிருந்து வேலைக்குச் செல்லும் பயணம் சேர்ந்த ஆய்வுகள், இளம் பெண்களும், ஆண்களும், பள்ளி முடித்து வேலையில் திருப்தி, வேலை செய்வது எளிதா, கடினமா என்ற விபரம் இல்லை. பள்ளியிலிருந்து வேலைக்கு செல்லும் பயணம் சார்ந்த ஆய்வுகள், தகுந்த நேரத்தில் தேவையான தொழிற்சந்தைத் தகவல்களை அளித்து, இளம் பெண்கள் ஆண்களுக்கான குறிப்பிட்ட பணி சார்ந்த சவால்களை சமாளிக்க வேண்டிய தேசிய வேலைவாய்ப்புத் திட்டங்களை வகுத்து செயல்படுத்தப் பயனுள்ளதாக இருக்கும் மிகவும் பாதிக்கப்பட்டுள்ள பொருட்களை இதனால் கண்டறிந்து தேவையான மக்களுக்கான திட்டங்களை மேற்கொள்ள முடியும். இந்த ஆய்வுகளின் மூலம், தேசிய பணிச்சேவை அமைப்பு, இளைஞர்கள் விரும்புகின்ற பாதுகாப்பான பணிகளுக்குச் செல்ல உதவ முடியும். தொழிற்சந்தையில் உள்ள பலதரப்பட்ட நிலைமைகளை சமாளிக்கவும் இது உதவும். சாதாரணமாக, தொழிற் பயிற்சி பெற இயலாதவர்களுக்கு, தொழில் நிறுவனம் பயிற்சி அளிக்க அரசு ஊக்கங்களை அளிக்க வேண்டும்.[6] இதனால் தொழிற் புரட்சிகளால் ஏற்படும் வேலைவாய்ப்பு சார்ந்த சவால்களை நாம் எதிர்கொள்ள முடியும்.

முடிவாக, வேகமாக மாறிவரும் பொருளாதார நிலைமையில் இனிவரும் வேலைவாய்ப்பு நிலைமைகள் இளைஞர்களுக்கு ஒரு சவாலாகவும், வாய்ப்பாகவும் உள்ளன. இதனால், அவர்களுடைய வேலை வாய்ப்பும், வாழ்க்கைத்தரமும் உயர முடியும். பணியமர்வதில் ஏற்படும் மேம்பாட்டால் வேலையில் பாதுகாப்பும் பதவி உயர்வுகளும் கிடைத்து, இளைஞர்கள் பொருளாதார வளர்ச்சிக்கு பங்களித்து அவர்களும் பயன் பெறுவார்கள். பணி மேம்பாட்டுத் துறைகளில் சிறந்த நடைமுறைகளை ஏற்று பல்வேறு முயற்சிகளையும், திட்டங்களையும் எல்லா மாநிலங்களிலும் செயல்படுத்தினால் மாற்றத்திற்கு ஒரு முக்கிய கருவியாக இளைஞர்களை நாம் பயன்படுத்தலாம்.

**இணைப்பு-1**

**எதிர்பார்ப்பு நிலைமை**

| ஜனத்தொகைப்படி ஆதரவான மாநிலங்கள் | பணியாளர்கள் தேவைப்படும் துறைகள் | இளைஞர்களின் எதிர்பார்ப்பு | | |
|---|---|---|---|---|
| | | உயர்வான | சுமாரான | குறைந்த |
| உத்திரபிரதேசம் | கட்டிடங்கள், கட்டுமானப் பணிகள், முறைப்படுத்தப்பட்ட சில்லறை வியாபாரம், வங்கிகள், நிதிசார் சேவைகள் மற்றும் காப்புத்துறை | தகவல் தொழில்நுட்பம், முறைப்படுத்தப்பட்ட சில்லறை வியாபாரம், ஊடகங்கள், கேளிக்கைத் துறை | மருத்துவச் சேவை, விடுதிகள், உணவு பதனிடுதல் | கட்டிடங்கள், கட்டுமானங்கள், போக்குவரத்து, விவசாயம், ஜவுளி, பிற பொருள் உற்பத்திகள், மருந்து தயாரிப்பு |

5. ஏற்கனவே உள்ள கல்வித் திறன்களை அங்கீகரித்தல் ; வெற்றிக்கான காரணங்கள் மற்றும் திறமையான அமைப்பை உருவாக்கும் முறை, அஸ்வனி அகர்வால், பன்னாட்டுப் பணியாளர் நிறுவனம்.

6. பள்ளியிலிருந்து பணிக்கான பயணம்சார் ஆய்வுகள். பன்னாட்டு பணியாளர் நிறுவனம்.

| | | | | |
|---|---|---|---|---|
| டெல்லி | சில்லறை வியாபாரம், கட்டுமானம், போக்குவரத்து, வீட்டுப்பணி, தகவல் தொழில்நுட்பம், விடுதிகள், மருத்துவமனைகள், கல்வி, வங்கி மற்றும் நிதி சேவைகள், காப்புத்துறை | சில்லறை வியாபாரம், தகவல் தொழில்நுட்பம், கால் சென்டர்கள், கல்வி, வாகனம் மற்றும் உதிரி வாகனங்கள், பொது நிர்வாகம், மின் சாதனங்கள், ஜவுளி மற்றும் ஆடைகள், மின்னணு சாதனங்கள். | கட்டுமானத்துறை, போக்குவரத்து, விடுதிகள், வாகனங்கள் பழுது பார்த்தல், மருத்துவமனை, ஊடகங்கள், கேளிக்கை, உலோகப்பொருள்கள், உலோகம் அல்லாத பொருட்கள், அச்சு மற்றும் புத்தக வெளியீடு, உணவு பதனிடுதல், இரசாயனம் மற்றும் மருந்துகள் துறை | வீடுகளில் வேலை, காவல்பணி, மொத்த வியாபாரம், மரம் மற்றும் பர்னிச்சர்கள், வீடு, நிலம் வாங்க விற்கும் சேவைகள் |
| ஜார்கண்ட் | கட்டிடங்கள், கட்டுமானங்கள், சுற்றுலா விடுதிகள், உணவு பதனிடுதல், வீடு, நிலம் வாங்க விற்க, வங்கித்துறை, நிதி, பொறியியல் பொருட்கள், போக்குவரத்து | உணவு பதனிடுதல், வங்கி மற்றும் நிதி, பொறியியல் பொருட்கள், ஜவுளி, ஆடைகள், வாகனங்கள், மருத்துவ சிகிச்சை, கல்வி, திறன் மேம்பாடு மற்றும் தகவல் தொழில்நுட்பம் | சுற்றுலா, விடுதிகள், மனை, வீடு, வாங்க, விற்க, வியாபார சேவைகள், ஊடகங்கள், தொடர்பு சேவைகள், மின்சாரம், எரிவாயு மற்றும் நீர் வழங்குதல் | கட்டிடங்கள், கட்டுமானங்கள், சுரங்கங்கள், கைத்தறி, கைவினைப் பொருட்கள், முறைப்படுத்தப்பட்ட சில்லறை பொருட்கள், தோல் மற்றும் தோல் பொருட்கள், இரசாயனம் மற்றும் மருந்துகள் |
| மத்திய பிரதேசம் | கட்டுமானம், நிலம், மனை, வாங்க விற்க, விவசாயம், ஜவுளி, போக்குவரத்து, உலோகங்கள் பதனிடுதல் | தகவல் தொழில்நுட்பம், மருத்துவ வசதி, கல்வி, திறன் மேம்பாடு, வாகனம் மற்றும் உதிரி பாகங்கள், ஊடகங்கள் மற்றும் கேளிக்கைகள் | விடுதிகள், வங்கிகள், நிதி, ஜவுளி, போக்குவரத்து, உலோகங்கள் பதனிடுதல் | கட்டுமானம், சில்லறை வியாபாரம், விவசாயம், ஜவுளி, போக்குவரத்து மற்றும் உலோகங்கள் பதனிடுதல் |
| ராஜஸ்தான் | மின்சார சேவைகள், கணினிசார் கணக்கு பதிவு, தகவல் தொழில்நுட்பம், கைப்பேசி பழுது நீக்கல், வாகனங்கள் சீரமைப்பு, கொரியர் சேவை, வியாபாரம், ரத்தினக் கற்கள் மற்றும் நகைகள், கைவினைப்பொருட்கள், கைத்தறி | மின்சார வேலைகள் | கைவினைப் பொருட்கள், கைத்தறிகள் | கைப்பேசி பழுது நீக்கல், கணினிசார் கணக்கு பதிவு, தகவல் தொழில்நுட்பம், கொரியர், வியாபாரம், ரத்தின கற்கள் மற்றும் நகைகள். |
| மேற்கு வங்கம் | கட்டுமானம், சில்லறை வியாபாரம், விவசாயம், மத்திய, சிறு மற்றும் குறு தொழில்கள், சணல், ஜவுளி, உணவு பதனிடுதல் | தகவல் தொழில்நுட்பம், மருத்துவ சேவை, வங்கி நிதி, இயந்திரங்கள் பழுது பார்த்தல், வாகனம், கல்வி, பயிற்சி அளித்தல், ரத்தின கற்கள், மற்றும் நகைகள். | சுற்றுலா, போக்குவரத்து, விடுதிகள், செய்தி தொடர்பு, ரப்பர், பிளாஸ்டிக், மின் கருவிகள் உற்பத்தி | கட்டுமானம், சில்லறை வியாபாரம், விவசாயம், மத்திய சிறு மற்றும் குறு தொழில்கள், சணல் ஜவுளி, உணவு பதனிடுதல் |
| மகாராஷ்டிரம் | தகவல் தொழில்நுட்பம், முறைப்படுத்தப்பட்ட சில்லறை வியாபாரம், கட்டுமானம், விவசாயம், இரசாயனம் மற்றும் மருந்துகள், இரத்தின கற்கள் மற்றும் நகைகள் | தகவல் தொழில்நுட்பம், முறைப்படுத்தப்பட்ட சில்லறை வியாபாரம், போக்குவரத்து, விடுதிகள், சுற்றுலா, உணவு பதனிடுதல், வாகனம் மற்றும் வாகன உதிரிபாகங்கள். | ஊடகங்கள், கேளிக்கைகள், போக்குவரத்து, மருத்துவத்துறை, கல்வி, திறன் மேம்பாடு, ஜவுளி மற்றும் உடைகள். | கட்டிடங்கள், கட்டுமானம், பொருட்கள் உற்பத்தி, விவசாயம், இரசாயனம் மற்றும் மருந்துகள், ரத்தின கற்கள் மற்றும் நகைகள் |
| தமிழ்நாடு | கட்டுமானம், சில்லறை வியாபாரம், போக்குவரத்து, விடுதிகள், சுற்றுலா மற்றும் வாகனங்கள் | வாகனங்கள், தகவல் தொழில்நுட்பம், சுற்றுலா, விடுதிகள், சில்லறை வியாபாரம், மின்னணு சாதனங்கள், கல்வி | ஜவுளி, ஊடகங்கள் மற்றும் கேளிக்கைகள், போக்குவரத்து, மருத்துவ சேவை, வீடு, நிலம், வாங்க விற்க | தோல், கட்டுமானம், உணவு பதனிடுதல், இரத்தின கற்கள் மற்றும் நகைகள், இரசாயனம் மற்றும் மருந்துகள், பர்னிச்சர், விவசாயம், கைத்தறி மற்றும் கைவினைப் பொருட்கள். |

ஆதாரம் : தேசிய திறன் மேம்பாட்டுக் கவுன்சில், திறன் இடைவெளி அறிக்கைகள் 2012. தகவல் தயாரிப்பு. Dr. சாக்ஷி குரானா, இளைஞர்கள் திட்டங்கள், நிதி ஆயோக். •

# தொழில் முனைவை ஊக்குவிக்கும் 'தொடங்கிடு இந்தியா' திட்டம்

- சௌரவ் சன்யால், தலைமைச் செயலாளர்

- டாக்டர் ரஞ்சித் மேத்தா, இயக்குநர் PHD தொழில்வணிகக் கூட்டமைப்பு

இந்தியாவில் ஆண்டொன்றுக்கு சுமார் ஒரு கோடி பேருக்கு வேலை வாய்ப்பு வழங்கப்பட வேண்டியுள்ளது. இதனை பெரும் தொழில் நிறுவனங்கள் வழங்க இயலாதென்றும் புதியதாகத் தொடங்கப்படும் தொழில் முயற்சிகளால் மட்டுமே அது சாத்தியப்படும் என்றும் புள்ளி விவரங்கள் உறுதிப்படுத்துகின்றன. 2016 ஜனவரி 16 ஆம் தேதியன்று. இந்தியப்பிரதமர் நரேந்திர மோடி, 'தொடங்கிடு இந்தியா' திட்டத்தைத் தொடக்கி வைத்தார். புதிய தொழில் முயற்சிகளை மேற்கொள்வதற்கு உகந்த சூழலை ஏற்படுத்தும் விதமாக, தொழில் முனைவுகளையும், புத்தாக்க முயற்சிகளையும் ஊக்கப்படுத்தி ஆதரவு அளிப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். வேலைதேடி அலைபவர்களின் நாடாக அல்லாமல், வேலை தருபவர்களின் நாடாக இந்தியா திகழ வேண்டும் என்பதே இதன் முதன்மையான நோக்கம். இத்திட்டத்திற்கு இந்தியத் தொழில் முனைவோர்களிடையே ஏகோபித்த வரவேற்பு உள்ளது. உலக நாடுகளிடையே, புதிதாகத் தொழில் முயற்சிகளில் ஈடுபட்டுவோர்கள் வரிசையில் இந்தியா மூன்றமிடத்தில் உள்ளது. புத்தாக்க முயற்சி புதிய தொழில் வடிமைப்புகள், புதிய தொழில் முயற்சிகள் ஆகியவற்றை உலக அளவில் இந்தியாவை ஒருமையப் புள்ளியாக மாற்ற வேண்டும் என்ற மத்திய அரசின் நோக்கத்தை எட்டும் விதமாக இவை திகழ்கின்றன.

தொடக்கத் தொழில் (Start-up) என்பது, பிற்காலத்தில் விரிவான பெரிய தொழிலாக வளரக்கூடிய ஒன்றின் ஆரம்ப நிலை எனலாம். பெரும்பாலும் இத்தகைய தொடக்கத் தொழில்கள் சிறிய அளவில் இருப்பதோடு, ஒரு தனி நபர் அல்லது சிலருடைய கூட்டு முதலீட்டின் பேரில் தொடங்கப்பட்டிருக்கும். இத்தகைய தொடக்கத் தொழில் நிறுவனங்களின் தயாரிப்புகள் சந்தையில் வேறெங்கும் கிடைக்காதவையாக இருக்கும்; அல்லது, அவ்வாறு கிடைக்கக் கூடியவை தரம் குறைவான தயாரிப்புகள் என்று தொடக்கத் தொழில் முனைவோர் கூறுவார்கள். தொடக்கத் தொழில் நிறுவனங்களின் சந்தை விரிவாக்க முயற்சிகள், தயாரிப்புகளின் பரிசோதனை முயற்சிகள் போன்றவற்றால், வருவாயைவிட செலவுகள் ஆரம்பக்கட்டத்தில் அதிகமாகவே இருக்கும். எனவே அவர்களுக்கு அதிகப்படியான நிதி உதவி தேவைப்படும். வங்கிகள் வழக்கமாக வழங்கும் சிறுதொழில் கடன், மாநில அரசுகள் வழங்கும் நிதி உதவி, கடன் கூட்டமைப்புகளின் சிறுவணிகக்கடன், தன்னார்வ அமைப்புகளின் மானிய உதவி எனப் பல விதங்களின் ஏதாவது ஒன்று அல்லது ஒன்றுக்கும் மேற்பட்ட வழிகளில் தொடக்கத் தொழில் நிறுவனங்கள் கடன் உதவியைப் பெறுகின்றன.

பொதுவாகத் தொடக்கத் தொழில் நிறுவனங்கள் இருவகையானவை. முதலாவது, முற்றிலும் புதுவிதமான, இதுவரை எவரும் மேற்கொள்ளாத தயாரிப்பு முயற்சி. இதுமாதிரியான முயற்சியைத் தொடங்குவது மிகவும் சிரமம் என்றாலும், தொடங்கி விட்டால், எதிர்பார்க்காத அளவுக்கும் பிரமாதமாக வளர்ந்துவிடும் இன்னொரு வகை, புதியதாக எதையும் செய்வது அல்ல; மாறாக, ''புதிய மொந்தையில் பழைய கள்' என்பது போல, பழையதையே புதுவிதமாகச் செய்வதாகும்.

தொடக்கநிலைத் தொழில் முயற்சிகள் பற்றி அண்மைக்காலமாகத்தான் நாம் அதிகமாகப் பேசி வருகிறோம். பெரும்பாலான நாடுகளில் இது போன்ற முயற்சிகள் பெரும்பாலும் தோற்று விட்டிருக்கின்றன. பொதுவாகவே, புதிய தொழில் முனைவோர் தோல்வியை எதிர்கொள்ளவும், கடும் சிரமங்களை ஏற்கவும் தயாராக இருக்க வேண்டும். வெற்றிபெறாத முயற்சிகளையும் நாம் பாராட்ட வேண்டும். பாராட்ட முன்வராத சமூகத்தில், புத்தாக்க முயற்சிகள் முடக்கப்படுகின்றன. புதிய முயற்சிகள் வெற்றி பெறாவிடினும் பரவாயில்லை, ஏனெனில் அவை, தொழில் முனைவோருக்கு, எதைச் செய்ய வேண்டும், எதைச் செய்யக் கூடாது என்ற படிப்பினையைக் கற்றுத் தருகின்றன.

தொடக்கத் தொழில் முயற்சிகளுக்கு ஆரம்பகாலக் கூட்டு நிறுவனர்கள் கிடைக்கலாம்; ஆனால் வெற்றி பெறக் கூடிய வாணிக நுட்பம் அவர்களிடம் இல்லாமல் போகலாம். மிகச்சிறப்பான தொழில் திட்டம் என்ற ஒன்றை வைத்திருப்பது வேறு; அதை வெற்றிகரமான தொழிலாக மாற்றுவதென்பது வேறு. எனவே புதிய தொழில் முயற்சிகள் மேற்கொள்வோருக்கு தக்க வழி நடந்துநராக, அதேபோல் தொழில் தொடங்கி பல சிரமங்களை எதிர்கொண்டு சமாளித்து வந்த எவரேனும் கிடைத்தால் மிகவும் நன்றாக இருக்கும். அத்தகையவருடைய அனுபவங்களே நம்மைத் தோல்வியில் இருந்து மீட்டு வெற்றிப்பாதையில் வழிநடத்தும். ஆனால் அமைப்பு ரீதியான தொழில்துறை வழி நடத்துநர்கள் நம் நாட்டில் கிடையாது. வாய்ப்புள்ள சிலருக்கு இது போன்ற வழிகாட்டுதல்கள் கிடைக்காலாம். மற்றவர்களிடம் இருந்து நிதி திரட்டி தொடக்க தொழில் முயற்சிகளை மேற்கொள்பவர்கள் அவ்வாறு நிதி உதவி அளித்தவர்களிடம் இருந்து வழிகாட்டுதல்களைக் கோரிப் பெறலாம். எனினும் நேர்மையான, விருப்பு

வெறுப்போ, பாரபட்சமோ அற்ற தொழில்துறை வழிகாட்டுதல்கள் மிக அரிதாகவே கிடைக்கின்றன.

**தொடக்கத் தொழில்களுக்கு நிதியுதவி பெறுதல்**

நம் நாட்டில் புதிய தொழில் முயற்சிகளை மேற்கொள்கின்ற முதலாம் தலைமுறை தொழில் முனைவோர் பெரும்பாலோர், 'தொடங்கிடு இந்தியா' திட்டத்தின் கீழ் அரசு அளிக்கின்ற ஆதரவை வரவேற்றுப் பாராட்டுகின்றனர். எனினும் தொழிலை நடத்துவதற்குத் தேவைப்படும் நிதி உதவி, தயாரிப்புப் பொருள்களுக்கும் உற்பத்தி வழிமுறைகளுக்குமான காப்புரிமை பெறுதல் போன்றவற்றில் பல சவால்களை அவர்கள் எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. காப்புரிமையைப் பதிவு செய்வதற்கான நெடிய சம்பிரதாயங்களும், ஆராய்ச்சி-வளர்ச்சிப் பணிகளுக்குப் போதிய ஆதரவு இன்மையும் பெரும் தடைக்கற்களாக உள்ளன. எனவே, புதிய தொழில் முயற்சிகளை வெளி நாடுகளில் மேற்கொள்ளலாம் எனச்சிலர் எண்ணுகின்றனர். 2015 நவம்பர் முதல் தேதி நிலவரப்படி, காப்புரிமை வேண்டி விண்ணப்பித்த 2,46,495 விண்ணப்பங்களும், வாணிக இலச்சினை (Trade mark) வேண்டிய 5,32,682 விண்ணப்பங்களும் நிலுவையில் இருந்ததாக, அரசின் புள்ளிவிவரம் தெரிவிக்கிறது.

இன்னொரு ஆய்வுத்தகவல் என்னவென்றால், புதிய தொடக்கத் தொழில்களில் 94 சதவீதம், தொடங்கிய முதல் ஆண்டிலேயே தோல்வி அடைந்து விடுகின்றன என்பதாகும். ஒரு புதிய வணிகக் கருத்தை, வருவாய் ஈட்டும் தொழிலாக மாற்றி நடத்துகின்ற நீண்டதொரு சுவாரஸ்யமான பயணத்திற்கு ஆதார சுருதியாக இருப்பது நிதி. எந்த ஒரு வாணிக முயற்சியானாலும் அது துவண்டு வீழ்ந்து விடாமல் இருக்கப் பணம் என்ற ரத்தத்தைப் பாய்ச்சியாக வேண்டும் எனவே புதிய தொடக்கத் தொழில் முயற்சிகள் தோல்வி அடையக்காரணம் சீரான தொடர்ந்த நிதி உதவி கிடைக்காமல் போவதே ஆகும்.

நம் நாட்டில் தற்போது புதிய தொழில் முயற்சிகளுக்கு நிதி உதவி அளிக்கப் பல வழிகள் உள்ளன. அவை யாவன:

1. **முத்ரா (MUDRA):** குறுந்தொழில் வளர்ச்சிக்கான மறுநிதியுதவி முகமை என்ற அமைப்பினை ரூ 20 ஆயிரம் கோடி மூலதனத்துடன் மத்திய அரசு உருவாக்கியுள்ளது. இதன் மூலம் சுமார் பத்து லட்சம் குறு - சிறு - நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு நிதி உதவி அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. புதிய தொழில் முனைவோர் தனது தொழில் திட்டத்தை 'முத்ரா' அமைப்பிடம் சமர்ப்பித்து ஒப்புதல் பெற்றுவிட்டால், அவருக்கு முத்ரா அட்டை வழங்கப்படும். வங்கிகள் வழங்கும் கடன் அட்டை போன்றது இது. இதைக்கொண்டு தொழிலுக்கு தேவையான மூலப்பொருள்கள் வாங்கலாம்; தொழில் சம்பந்தப்பட்ட அனைத்துச் செலவுகளையும் செய்யலாம். சமர்ப்பிக்கப்படும் தொழில்திட்டத்தின் வெற்றி வாய்ப்பைப் பொறுத்து சிசு, கிஷோர், தருண் என்ற மூன்று விதமான முத்ராகடன் அட்டைகள் வழங்கப்படும்.
2. **சுயநிதி ஏற்பாடு:** புதிய தொழில் பற்றி தெளிவான திட்டத்தைத் தயாரிக்க இயலாதவர்கள் தமது சொந்தப் பணத்தில் தொழில் தொடங்கலாம் முதல் தலைமுறை தொழில்முனைவோர் பலரும் இந்த வழியையே பின்பற்றுகின்றனர்.
3. **பல்வகை நிதி உதவி (Crowd funding):** ஒரு சமயத்தில் பலரிடம் இருந்தும் கடன் உதவி பெறுவது அல்லது, தயாரிப்புப் பொருளுக்கு முன்கூட்டியே வாங்கிக் கொள்வதென்ற உறுதிப்படி பணம் பெற்றுக்கொள்வது. அல்லது வட்டியில்லாமல் கடன் பெறுவது போன்றவை பல்வகை நிதி உதவி எனப்படும். இவ்வாறு நிதி உதவி பெறவிரும்புகின்ற தொழில் முனைவோர், முன் கூட்டியே தனது தொழில் திட்டத்தின் இலக்குகள், தேவைப்படும் நிதி, லாபம் ஈட்டும் வழிகள், எந்தக் காரணத்திற்காக எவ்வளவு நிதி தேவைப்படுகிறது என்ற விவரம் போன்றவற்றை பகிரங்கப்படுத்த வேண்டும். அவருடைய திட்டத்தை நம்பி ஏற்கிறவர்கள், நிதி உதவி தர முன்வருவார்கள் தயாரிப்புகளை வாங்கிக் கொள்ள உறுதி அளித்து, அதற்காகப் பணத்தை முன்கூட்டியே தருவது, அல்லது நன்கொடையாகத் தருவது என எந்தவிதமாகவும் நிதி உதவி அளிப்பார்கள். ஒரு தொழில் வெற்றி பெறவேண்டும் என்று விரும்பி அதற்கு ஆதரவுக் கரம் நீட்டுவதுதான் இதன்நோக்கம் இந்தியாவில் பல்வகை நிதி உதவி பொறுவதற்கான சில பிரபல இணைய தளங்கள்: (Indeigogo, wish berry, kelto, fund lined போன்றவையாகும்.
4. **ஏஞ்சல் முதலீடுகள்:** ஏஞ்சல் முதலீட்டாளர்கள் என்போர், உபரியாகப் பெருமளவு பணத்தை கையில் வைத்துக் கொண்டு, தொடக்கத் தொழில் முயற்சிகளில் முதலீடு செய்ய ஆர்வமாக இருப்பவர்கள். இவர்கள் தம்மைப்போன்ற மற்ற முதலீட்டாளர்களுடன் குழுவாகச் சேர்ந்து, எந்த ஒரு முதலீட்டையும் மேற்கொள்ளும் முன்பாக, அந்தத் தொழில் பற்றி விரிவாக ஆராய்ச்சியும் செய்வார்கள். தமது பணத்தை முதலீட்டாகக் கொடுப்பதோடு மட்டுமின்றி, தொடக்கத் தொழில் முனைவோருக்கு அத்தொழில் சம்பந்தப்பட்ட நல்ல ஆலோசனைகளையும் வழங்கி, வழிநடத்து நராகவும் அவர்கள் விளங்குவார்கள். உலகப் புகழ்பெற்ற கூகுள், யாகூ, அலிபாபா போன்ற நிறுவனங்கள் தொடக்கத்தில் ஏஞ்சல் முதலீட்டாளார்களின் ஆதரவில்தான் வளர்ந்தன என்பது குறிப்பிடத்தக்கது. பொதுவாக இவ்வாறு முதலீடு செய்பவர்கள்,

தொடக்க நிலைத் தொழில் முயற்சிகளில் சுமார் 30 சதவீத பங்கு மூலதனத்தைப் பெறவும், ஆரம்பகால வளர்ச்சியில், அதீத லாபத்தைப் பெறவும் விரும்புவார்கள். அதற்கென, கூடுதலான அபாயங்களையும், இடர்களையும் எதிர் கொள்ளத் தயாராக இருப்பார்கள்.

5. **துணிகர மூலதனம் (Venture Capital):** துணிகர மூலதன நிதியங்கள் தொழில் முறை நிபுணர்களால் நிர்வகிக்கப்படுபவை. இவர்கள் பெரிய அளவில் வளர்வதற்கு சாத்தியமுள்ள தொழில்களில் துணிந்து முதலீடு செய்வார்கள். தொடக்கநிலைத் தொழில் முயற்சிகளில் பங்கு மூலதனம் செலுத்தி ஆதரவு தருகின்ற இவர்கள், பின்னர் அத்தொழில் விரிவடைந்து பொதுமக்களுக்கும் பங்குகளை விரியோகிக்கத் தலைப்படும் போது அல்லது, அந்த நிறுவனத்தின் மூதலீட்டின் ஒரு பகுதியை மற்ற நிறுவனங்கள் கையகப்படுத்தும் போது, தமது முதலீட்டை விலக்கிக் கொள்வார்கள். மேலும் துணிகர மூலதன நிதியங்கள் தமது நிபுணத்துவத்தையும், வழிகாட்டுதலையும் வழங்கி, வெற்றிக்கும் உற்ற துணையாக இருக்கும்.

6. **தொழில் அடைகாப்பு அமைப்புகள்:** தொடக்க நிலை தொழில் முயற்சிகளுக்கு நிதி உதவி பெறுவதற்கு தொழில் அடைகாப்பு அமைப்புகள் ஒரு மாற்று வழியாகத் திகழ்கின்றன. கிட்டத்தட்ட எல்லா முக்கிய நகரங்களிலும் இந்த அமைப்புகள் உள்ளன. ஆண்டுதோறும் நூற்றுக் கணக்கான தொடக்கத் தொழில் முயற்சிகளுக்கு இவை ஆதரவு தருகின்றன. குழந்தைக்கு வளரும் பருவத்தில் பெற்றோர் அரணாக நின்று காப்பதுபோல், தொடக்கத் தொழில் முயற்சிகளுக்கு வேண்டிய பயிற்சிகள், விற்பனை வசதிகள் போன்றவற்றைப் பெற உதவி செய்து, அவை நலிவடைந்து விடாமல் அடைகாப்பு அமைப்புகள் காப்பாற்றுகின்றன.

7. **வங்கிசாராத நிதி நிறுவனங்கள் (NBFC):** வங்கிகளிடம் இருந்து தொழில்துறைக்குக் கடன் பெற இயலாதவர்கள் அணுகுகின்ற இடமே வங்கிசாராத நிதி நிறுவனங்கள் வங்கிகள் விதிக்கின்ற ‘கடன் பெறு தகுதியை’ நிறைவேற்ற இயலாத தொழில் அமைப்புகளுக்கு இவை பேருதவியாக உள்ளன. நுண்வணிகக் கடன்கள் வழங்குகின்ற அமைப்புகளும் இந்த வரையரைக்குள் வருகின்றன. ஒரு வங்கி நிறைவேற்ற வேண்டிய சட்டப்பூர்வமான நிபந்தனைகள் இல்லாமல், இவை தொழில் அமைப்புகளுக்குக் கடன் வழங்குகின்றன என்பது மிகவும் முக்கியமனதாகும்.

8. **தொடக்கத் தொழில் நிறுவனங்களை ஊக்கப்படுத்த அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகள்:** மத்திய அரசு தொடக்கத் தொழில் நிறுவனங்களை ஊக்குவிப்பதற்காக கீழ்க்காணும் 19 அம்சங்களைக் கொண்ட செயல் திட்டத்தைக் கொண்டு வந்துள்ளது.

**1. சுய சான்றளிப்பு:** தொழில் தொடங்குவதற்கான அரசின் நெறிமுறைகள் பின்பற்றப்பட்டு விட்டதற்கு அதிகாரிகள் மூலம் சான்று பெறுவதற்குப் பதிலாக, தொழில் தொடங்குகின்ற நபரே, அந்த நெறிமுறைகள் பின்பற்றப்பட்டுவிட்டதாகச் சுயசான்று அளித்து விட்டு, அடுத்த நடவடிக்கையை மேற்கொள்ளலாம். தொழிலாளர்களுக்குப் பணிக்கொடை, வருங்கால வைப்பு நிதி வழங்குவது, தொழிலாளர்களுடனான ஒப்பந்தம், மாசுக்கட்டுப்பாடு நெறிமுறைகள், போன்ற இனங்களில் சுயசான்று அளிக்கலாம்.

**2. தொடக்கத் தொழிலுக்கான ஒற்றைப் புள்ளி:** இந்திய முழுமைக்குமான தொடக்கத் தொழில் நிறுவனங்களுக்கான ஒற்றை மையப்புள்ளியான ஒரு தொடர்பு மையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்தமையத்தில் தொழில் முனைவோர் தமக்கு வேண்டிய விவரங்கள் அனைத்தையும் பெறலாம். தொழில் சம்பந்தப்பட்ட மேலதிகத் தகவல்களும், நிதி வசதி பெறும் வழிகளும் கூட இங்கே கிடைக்கும்.

**3. கைபேசி செயலி (App) மூலம் பதிவு:** கைபேசி செயல் வடிவிலான ஆன்லைன் போர்ட்டல் மூலம் தொடக்கத் தொழில் முனைவோர் எளிதாகத் தமது தொழில் விவரங்களையும் பதிவு செய்து கொள்ளலாம்.

**4. காப்புரிமைப் பாதுகாப்பு:** தொடக்கத் தொழில் முனைவோரின் புத்தாக்கம் / புதியகண்டு பிடிப்புகளுக்குக் குறைந்த கட்டணத்தில் துரிதமாகக் காப்புரிமை பெறுவதற்கான ஏற்பாட்டினை மத்திய அரசு செய்து வருகிறது. அறிவுசார் சொத்துரிமை பற்றி தொழில் முனைவோரிடையே பரவலான விழிப்புணர்வை உண்டாக்க இந்த ஏற்பாடு உதவும்.

**5. பத்தாயிரம் கோடி ரூபாய் நிதியம்:** தொடக்கத் தொழில் முயற்சிகளுக்கு நிதி உதவி அளிக்க மத்திய அரசு முதல்கட்டமாக ரூ 2500 கோடி ஒதுக்கீடு செய்து ஒரு நிதியத்தை ஏற்படுத்தியுள்ளது. தொடர்ந்து அடுத்தடுத்து மூன்று ஆண்டுகளில் தலா ரூ 2500 கோடியை ஒதுக்கி, நான்காண்டுகளில் அது பத்தாயிரம் கோடி ரூபாய் நிதியமாக இது உருப்பெறும். இதை உருவாக்குவதில் இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகம் முக்கியப் பங்குவகிக்கும். தனியார் தொடக்கத் தொழில் முனைவோரிடம் இருந்து தெரிவாகும் நிபுணர்கள் இந்த நிதியத்தை நிர்வகிப்பார்கள்.

**6. தேசிய கடன் உத்தரவாதப் பொறுப்பு நிறுவனம்:** தொடக்கத் தொழில் நிறுவனங்களுக்கு நிதி உதவி தடையின்றிக் கிடைப்பதற்கு உத்தரவாதம் அளிக்கும் பொருட்டு, ரூ 500 கோடியில் ஓர் உத்தரவாதப்

பொறுப்பு நிறுவனத்தை ஏற்படுத்த அரசு உத்தேசித்துள்ளது. தொடர்ந்து நான்காண்டுகளுக்கு இந்த நிறுவனத்திற்கு ஆண்டுக்கு ரூ 500 கோடி வீதம் நிதி ஒதுக்கப்படும்.

**7. மூலதன ஆதாய வரி கிடையாது:** துணிகர முதலீட்டு நிதியங்களுக்கு மூலதன ஆதாயவரி தற்போது விதிக்கப்படுவதில்லை. இந்தச் சலுகை தொடக்கத் தொழில் நிறுவனங்களின் ஆரம்பநிலை முதலீட்டுகளுக்கும் நீட்டிக்கப்படுகிறது.

**8. மூன்றாண்டுகளுக்கு வருமான வரி விலக்கு:** தொடக்கத் தொழில் நிறுவனங்கள் மூன்றாண்டுகளுக்கு வருமானவரி செலுத்தத் தேவையில்லை. இதனால், இத்தகு தொழில் முயற்சிகள் பெருமளவு மேற்கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**9. அதிக மதிப்புடைய முதலீடுகளுக்கு வரிவிலக்கு:** பொதுவான சந்தை மதிப்பைவிட அதிக அளவு மதிப்பிற்கு ஏதேனும் ஓர் இனத்தில் தொடக்கத் தொழில் நிறுவனம் முதலீடு செய்திருந்தால் அதற்கு வரிச்சலுகை அளிக்கப்படுகிறது.

**10. தொழில் முனைவோரை உருவாக்குதல்:** ஐந்து லட்சத்திற்கும் மேற்பட்டபள்ளிகளில், புத்தாக்க முயற்சிகள் குறித்த பாடங்கள் பயிற்றுவிக்கப்படும். அடைகாப்புத் தொழில் அமைப்புகளை உலகத்தரம் உள்ளவையாக மாற்றும்விதமாக, ஆண்டு தோறும் அடைகாப்பு அமைப்புகளுக்கான சாம்பியன்ஷிப் போட்டியும் நடத்தப்படும்.

**11. அடல் புத்தாக்க இயக்கம்:** திறமையான இளைஞர்களையும், புத்தாக்க முயற்சிகளையும் ஊக்குவிக்க அடல் புத்தாக்க இயக்கம் தொடங்கப்படுகிறது.

**12. அடைகாப்பு அமைப்புகள்:** தேசிய அளவிலான தொழிற்கல்வி நிறுவனங்களில் புதிதாக 35 அடைகாப்பு அமைப்புகளையும், 31 புத்தாக்க மையங்களையும் ஏற்படுத்த தனியார்-அரசு கூட்டுத்திட்டம் செயல்படுத்தப்படும்.

**13. ஆராய்ச்சிப் பூங்கா:** ஆறு இந்தியத் தொழில் நுட்பக்கழகங்களில் (IIT) தலா ஒன்று என்ற எண்ணிக்கையிலும், இந்திய அறிவியல் கழகத்தில் (IISC) ஒன்றும் என மொத்தம் ஏழு ஆராய்ச்சிப் பூங்காக்கள் ஏற்படுத்தப்படும். இவை ஒவ்வொன்றுக்கும் ரூ 100 கோடி செலவிடப்படும்.

**14. உயிரித் தொழில் நுட்பத்துறைத் தொழில்கள்:** உயிரித் தொழில் நுட்பத் துறையில் புதிய தொழில்கள் வளர்வதை ஊக்கப்படுத்தும் விதமாக மேலும் ஐந்து புதிய உயிரித்தொழில் நுட்பத் தொகுப்பு மையங்கள் உருவாக்கப்படும்; 50 புதிய அடைகாப்பு அமைப்புகளும், தொழில் நுட்ப அறிவினைப் பகிர்ந்து கொள்ளவதற்காக 150 அலுவலகங்களும், 20 தொடர்பு அலுவலகங்கள் தொடங்கப்படும்.

**15. பள்ளிகளில் பாடத்திட்டம்:** பள்ளி மாணவர்களைத் தொழில் முயற்சிகளில் ஈடுபடுவதை ஊக்குவிக்கும் விதமாக நாடெங்கும் சுமார் ஐந்து லட்சம் பள்ளிகளில், புத்தாக்க முயற்சிகள் பற்றிய பாடத்திட்டங்கள் அறிமுகப்படுத்தப்படும்.

**16. சட்டநுணுக்க ஆதரவு:** தொடக்கத் தொழில் முனைவோர் சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள் குறித்தும், காப்புரிமைக்கான விண்ணப்பங்களை அனுப்புவதற்கான வழிமுறைகள் குறித்தும் சட்டப்பூர்வமான நுணுக்கங்களையும் ஆலோசனைகளையும் வழங்க சட்ட நிபுணர்களின் உதவி ஏற்பாடு செய்யப்படும்.

**17. தள்ளுபடி:** காப்புரிமை வேண்டி விண்ணப்பிக்கும்போது செலுத்த வேண்டிய கட்டணத்தில் 80 சதவீதம் தள்ளுபடி தரப்படும்.

**18. எளியவிதிகள்:** தொடக்கத் தொழில் நிறுவனங்களிடம் இருந்து அரசாங்கத் துறைகளுக்குப் பொருள்கள் வாங்கும்போது, எளிமையான விதிகள் பின்பற்றப்பட்டு ஆதரவுதரப்படும்.

**19. துரிதமான வெளியேற்றம்:** தொடக்கத் தொழில் முயற்சிகள் தோல்வி அடைந்தால், அதற்கான காரணங்களைக் கண்டறிந்து, தோல்வியில் இருந்து மீண்டு வர அரசு உதவி அளிக்கும் அப்போதும் வெற்றி இல்லை எனில், தொழில் முயற்சியில் இருந்து துரிதமாக வெளியேறிவிடவும் அரசு உதவும்

2016 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில், 815 தொடக்கத் தொழில்களில் சாகச முதலீட்டளர்களும், ஏஞ்சல் முதலீட்டாளர்களும் சுமார் 350 கோடி டாலர் முதலீடு செய்துள்ளனர். அதற்கு முந்தைய ஆண்டில் இதே காலத்தில் 639 தொழில் முயற்சிகளில் 730 கோடி டாலர் முதலீடு செய்யப்பட்டிருந்து. தொழில் முயற்சிகளின் எண்ணிக்கை 27 சதவீதம் உயர்ந்து இருந்தாலும், 2016 ஆம் ஆண்டில் முதலீட்டு நிதியின் அளவு குறைந்துள்ளது என்பதையும் கவனிக்க வேண்டும்.

எந்த ஒரு பொருளாதார அமைப்பானாலும், அதன் இயக்கத்தை முடுக்கி விடுவதில் தொடக்கத் தொழில்கள் பெரும் பங்காற்றுகின்றன. மாற்றத்தின் வினை ஊக்கியாகச் செயல்படும் அவற்றில் சங்கிலித் தொடர் போல் பல விளைவுகள் ஏற்படுகின்றன. ஒரு தொழில் தொடங்கப்பட்டு விட்டாலே தொழில் மயமும் தொடங்கி விடுகிறது. புதிய தொழில் கூடங்களின் வரவால், உற்பத்தி பெருகி, வேலைவாய்ப்பு அதிகரித்து, வருமானம் உயர்ந்து, நுகர்வுபெருகி, மக்களின் வாழ்க்கைத் தரம் மேம்படுகிறது. நாட்டின் முன்னேற்றம் துரிதகதியை எட்டுகிறது. ●

# ஆரோக்கியமான, சமநிலையான, மன அழுத்தமற்ற வாழ்க்கையை நடத்துவதற்கு இளைஞர்களுக்கு யோகா பயன் தரக்கூடியதாக எப்படி இருக்கிறது?

- டாக்டர். ஐஸ்வர்யா என்.ஆச்சார்யா. இயக்குநர்
- டாக்டர். ராஜிவ் ரஸ்தோகி, உதவி இயக்குநர் (இயற்கை மருத்துவம்)

**அறிமுகம்:**

உலகம் முழுவதும் யோகா இப்போது பிரபலமாகி இருக்கிறது. நிலப்பகுதிகள், மதம், சாதி, சம்பிரதாயங்கள், தேசம் ஆகிய எல்லைகளைக்கடந்து தனது தனித்தன்மை யினாலும், உடல் நலத்தை மேம்படுத்துவதற்கு குறிப்பிடத்தகுந்த பங்களிப்பை வழங்குவதன் மூலமும், வாழ்க்கைமுறை மாற்றங்களால் ஏற்படக்கூடிய குறைபாடுகளைத் திறம்பட நிர்வகிப்பதற்கு உதவக்கூடிய பிணிநீக்கப்பங்கின் காரணமாகவும் உலகம் முழுவதும் அறியப்படக்கூடியதாக யோகா இருக்கிறது. யோகா என்பது ஒரு ஆன்மிக ஒழுக்கம். உடலுக்கும் மனதிற்கும் இடையே பரிபூரணமான நல்லிணக்கத்தைக் கொண்டுவருவதில் யோகா கவனம் செலுத்துகிறது.

தற்போதைய காலம் தொழில்நுட்பம் மேம்பட்டிருக்கும் காலம். இதன் காரணமாக வாழ்க்கை வசதிகள் கூடி இருக்கின்றன. ஆயினும் பொருத்தமற்ற வாழ்க்கை முறைகள், சுற்றுச்சூழல் நிலைமைகள், மாசுக்கள், நவீன காலத்தின் பணிமுறைகள் போன்றவை வாழ்க்கையைக் கடினமாக்கி இருக்கின்றன. உடல், மனம், அறிவு, உணர்ச்சி, சமூகம், ஆன்மிகம் போன்ற வாழ்க்கையின் அனைத்துப் பரிமாணங்களிலும் இவை பிரச்னைகளை உருவாக்கி இருக்கின்றன. பாரம்பரிய மருத்துவ முறைகள் உட்பட பிற மருத்துவமுறைகளும் கூட யோக சிகிச்சையைப் பரிந்துரைப்பதற்கு இந்த நிலை வழி செய்கிறது..

செப்டம்பர் 27,2014 இல் ஐக்கிய நாடுகளின் 69வது பொதுச் சபையில் உரையாற்றியபோது, “நம்முடைய பெருமைமிகுந்த பாரம்பரியம் தந்திருக்கும் விலைமதிப்பற்ற பரிசு யோகாவாகும். மனதையும், உடலையும் சிந்தனையையும், செயலையும், நிதானம், திருப்தி, இயற்கைக்கும் மனிதனுக்குமான ஒத்திசைவு ஆகியவற்றையும் உள்ளடக்கியதாக யோகா இருக்கிறது. உடல்நலம், சிறக்கவாழ்தல் ஆகிய இரண்டிற்குமான பரிபூரண அணுகுமுறையாகவும் இது உள்ளது. யோகா என்பது உடற்பயிற்சி பற்றியது அல்ல. உலகிற்கும் இயற்கைக்குமான ஓர்மையை அறிவதற்கும், நமக்குள்ளேயே ஒரு ஓர்மை உணர்வைக் கண்டுபிடிப்பதற்குமானது. நம்முடைய வாழ்க்கை முறையை மாற்றிக்கொள்வதன் மூலமும், உணர்வு நிலையை உருவாக்கி கொள்வதன் மூலமும் பருவநிலை மாற்றங்களைச் சமாளிப்பதற்கு யோகா உதவி செய்யும். பன்னாட்டு யோகா தினத்தைத் தத்தெடுப்பதை நோக்கி நாம் உழைத்திடுவோம்” என்று மாண்புமிகு பிரதமர் நரேந்திர மோதி அவர்கள் குறிப்பிட்டார்.

யோகா பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்று என்பதையும், யோகாவின் பயன்பாட்டை சிறப்பான வழிகளில் பயன்படுத்திக் கொள்ளமுடியும் என்பதையும் மனதில் கொண்டு யோகாவை உலகம் முழுவதும் பிரபலமாக்க வேண்டியதன் தேவையையும் மாண்புமிகு பிரதமர் அவர்கள் வலியுறுத்தினார்.

இதன் பிறகு ஐக்கிய நாடுகள் சபை 177 நாடுகளின் ஆதரவுடன் ஜூன் 21ஆம் தேதியை சர்வதேச யோகா தினமாக அறிவித்த்து. தற்போது ஒட்டுமொத்த உலகமும் சர்வதேச யோகா தினத்தை முழுமையான உற்சாகத்துடனும், வைராக்கியத்துடனும் கொண்டாடிக் கொண்டிருக்கிறது. இந்தியாவில் சர்வதேச யோகா தினத்தைக்கொண்டாடும் பொறுப்பு ஆயுஷ் அமைச்சகத்திற்கு அளிக்கப்பட்டுள்ளது. மற்ற அமைச்சகங்களும் பொருத்தமான வகைகளில் ஆதரவு அளித்து வருகின்றன. இந்த ஆண்டு நாம் மூன்றாவது சர்வதேச யோகா தினத்தைக் கொண்டாடி வருகிறோம்.

**யோகா என்பது என்ன?**

பழங்கால இந்திய முனிவர்களால் உருவாக்கப்பட்ட ஆன்மிக அறிவியலே யோகாவாகும். யோகா என்பது ஒரு முழுமையான வாழ்க்கை முறையாகும். இதன் வேர்கள் இந்தியப்பண்பாட்டிலும், பாரம்பரியத்திலும் ஆழமாக வேரூன்றி இருக்கின்றன. ரிஷிகள், முனிவர்களால் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு இது வளர்த்தெடுக்கப்பட்டது. நம்முடைய பழமையான வேதங்கள் அனைத்திலும் யோகா பற்றிய பதிவுகள் காணக்கிடைக்கின்றன. இடைக்கால, நவீன கால, தற்கால இலக்கியங்களிலும் கூட யோகா காணப்படுகிறது. பதஞ்சலியின் யோக சூத்திரங்கள் (கி.மு.400) ஒழுங்குமுறைசார்ந்த மூல வாக்கியங்கள் என்று நம்பப்படுகின்றன. இவை பற்றி பல்வேறு உரைகளை உரையாசிரியர்கள்

எழுதிஉள்ளனர். அஷ்டாங்க யோகா என்று பிரபலமாக அறியப்படும் யோகாவின் எட்டு பாதைகளை பதஞ்சலி தந்துள்ளார். இந்த அஷ்டாங்க யோகா ஒரு தனி மனிதனின் அனைத்துக் கூறுகளையும் கவனத்தில் எடுத்துக்கொள்கிறது.

யோகா மருந்தில்லாத ஒரு சிகிச்சை முறை. உடல் நலம் பேணும் ஒரு முறை, ஆரோக்கியமாக வாழ உதவும் முறை. உடல்நலம், நோய், ஆகியவை பற்றி தனக்கே உரிய கருத்துக்களை யோகா கொண்டிருக்கிறது. உடல் நலம் தொடர்பான முழுமையான அணுகுமுறையின் மீது யோகா முக்கியத்துவம் தருகிறது. உடல், மனம், ஒழுக்கம், உணர்ச்சிநிலைகள், ஆன்மிகக்கூறுகள் ஆகியவற்றை உள்ளடக்கியது யோகா. மிகவும் எளிமையாகப் பின்பற்றக்கூடிய பல எளிய ஆரோக்கிய வாழ்வியல் நடைமுறைகளை யோகா பரிந்துரைக்கிறது. இவை நல்ல உடல் நலத்திற்கும், நோய்களைத் தவிர்ப்பதற்கும் உதவக்கூடியவை. அன்றாட நடைமுறையில் வழக்கமான ஒன்றாக ஒருங்கிணைத்துக் கொள்ளப்படக்கூடியவை. மற்ற சிகிச்சைமுறைகளுடன் சேர்த்தும், அதற்குத்துணையாகவும் யோகாவை நடைமுறைப்படுத்த இயலும். மனிதகுலத்தின் நலவாழ்வுத் தேவைகளைச் சந்திக்கும் விதமாக, புதிய யோகா பயிற்சி முறைகள் ஆராய்ச்சியாளர்களாலும், பயிற்சியாளர்களாலும் பரவலாகப் பயன்படுத்தப்பட்டுவருகின்றன. யோகா தற்போது உலகத்தின் கவனத்தை ஈர்த்துள்ளது. பல்வேறு விதமான வாழ்க்கைப் பாதைகளில் பயணிப்போருக்கும் யோகா பற்றிய விழிப்புணர்வு அதிகரித்துக்கொண்டே இருக்கிறது. நலத்தை மேம்படுத்தி அதனைப்பாதுகாப்பதற்கு மட்டுமில்லாமல் பல்வேறு விதமான நோய்களை நிர்வகிப்பதற்கும் கூட இந்த விழிப்புணர்வு உதவுகிறது. மன அழுத்ததால் தூண்டப்படும் குறைபாடுகள், உடலும் மனமும் சார்ந்த குறைபாடுகள் ஆகியவற்றைத் தவிர்ப்பதற்கான திட்டமாக குருமார்கள் பலரும், மருத்துவத் தொழில்முறையாளர்களும் யோகா வாழ்க்கை முறையை ஊக்குவித்துவருகின்றனர்.

யோகாப்பயிற்சிகள் நலவாழ்வு மேம்படவும், நோய்களைத்தவிர்க்கவும், உடல் மனம் சார்ந்த குறைபாடுகளை சிறப்பாக மேலாண்மை செய்வதற்கும், உயர்நிலை பிரக்ஞையை சிறப்புற புரிந்துகொள்வதற்கும் இட்டுச்செல்கின்றன. யோகா வழிமுறை ஒரு முழுமையான அணுகுமுறை உடையதாக, ஒருவரை முழுமையான நபராகக்கருதி அணுகும் முறையைக் கொண்டதாக உள்ளது.

யோகாவின் பிரபலமான பயிற்சி முறைகளில் கிரியா (தூய்மைப்படுத்தும் நடைமுறைகள்), சூரிய நமஸ்காரம், ஆசனங்கள், பிரணாயாமம் (மூச்சுப்பயிற்சிகள்), இறுக்கத்தளர்வு நுட்பங்கள், பந்தங்கள், முத்ராக்கள், தியானம் போன்றவை இடம்பெற்றுள்ளன.

**சூரிய நமஸ்காரம்:**

சூரியனை வணங்கும் இந்த முறை மிகுந்த பயன் தரக்கூடிய பிரபலமான யோகப்பயிற்சி வழிமுறையாகும். இதில் தொடர்ச்சியான 12 தோற்றப்பாங்குகள் உள்ளன. இவை அனைத்தும் அதிகாலை நேரத்தில் சூரிய உதயத்தைப்பார்த்தபடி செய்யப்படவேண்டியவை. இந்தப்பயிற்சி நம்முடைய நரம்பு, சுரப்பி மண்டலங்களையும், நரம்பு தசைமண்டலத்தையும் அதிக ஆற்றல் பெற செய்யக்கூடியவை. தொடர்ச்சியாக இந்தப்பயிற்சியை செய்துவரும்போது, நம் உடலில் உயிர்க்காற்று நிரம்பிய இரத்தஓட்டம் சீராக இருப்பதற்கு உதவுகிறது. உடலில் உள்ள அனைத்து இயக்க மண்டலங்களின் கச்சிதமான ஒத்திசைவுக்கும் இது துணை செய்கிறது. இதனால் மனித உடல், மனஅமைப்பு முழுமையும் வலுப்பெற்று உற்சாகம் பெறுகிறது.

**ஆசனங்கள்:**

உடல் அங்கங்களை நீட்டி மடக்கி ஆசனங்களைக் குறிப்பிட்ட நிலைகளில் குறிப்பிட்ட தோற்றப்பாங்குகளில் செய்வது உடலையும் மனதையும் நிலைபடுத்துவதற்கு உதவக்கூடியது. தசைநார்களின் பொதுவான தொனியை நிலை நிறுத்துவது ஆசனங்களின் நோக்கமாகும். அங்கஸ்திதிகளின் செயல்பாட்டை ஆளுகை செய்வது உடல் மட்டுமல்ல. மனம்நரம்புஆகியவற்றின் இயக்கமும் ஆகும். ஆசனங்களை மிகுந்த சிரமப்படாமல் சௌகரியமான முறையில் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குத் தொடர்ந்து செய்துவர வேண்டும்.

**பிரணாயாமம்:**

பிரணாயாமப்பயிற்சிகள் சுவாசத் தூண்டல்களில் கட்டுப்பாடுகளைக் கொண்டு வருவதற்கு உதவுகின்றன. மூச்சை வசதியாக நீண்ட நேரத்திற்கு அடக்குவது யோகா மூச்சுப்பயிற்சி முறையில் மிக அவசியமான ஒரு உத்தியாகும். இந்தப்பயிற்சியைக் கைகொள்ளுவதன் முக்கியமான நோக்கம் தன்னியக்க நரம்பு மண்டலத்தின் மீது கட்டுப்பாட்டைக் கொண்டு வந்து அதன் மூலம் மனம் சார்ந்த செயல்பாடுகளைக் கட்டுப்படுத்தி ஒழுங்கு படுத்துவது ஆகும். தியானம் போன்ற உயர் யோகாப்பயிற்சிகளில் இது பயன்படக் கூடியதாக உள்ளது.

**தியானம்:**

மனம் எதில் நிலைகொண்டுள்ளதோ அந்த திசை நோக்கி தொடர்ச்சியாகவும் இடையீடின்றியும் மனஓட்டம் இருக்கும்படி செய்வதே தியானம் எனப்படுகிறது. தியானத்தின் அடிப்படைக் கொள்கை

அக விழிப்புணர்வை வளர்ப்பது என்பதாகும். வெளி உலகப்பொருள்களில் இருந்து பொறி புலன்களை விலக்கிகொள்ளும் ஆரம்ப நிலையில் இருந்து தொடங்கி புறச்சூழலை முழுமையாக மறந்துவிடும் அளவுக்கு மனதின் செயல்பாடுகளைக் கட்டுப்பாட்டுக்குள் கொணர்வதை உள்ளடக்கியதாக இந்தப் பயிற்சி உள்ளது. ஒரு தனி நபரின் கவனம் என்பதிலிருந்து அனுபவம் என்பதை நோக்கி திரும்பக்கூடிய, முழு ஈடுபாட்டைப் பெறக்கூடிய வழிமுறையே தியானமாகும். முறையான தியானப்பயிற்சியின் மூலம் சிதறாத ஆழ்ந்த கவனத்தைச் செலுத்தும் சக்தியை ஒருவர் பெறுகிறார். இதன் மூலம் உடலாற்றல் பெருகுதல், மன உணர்வு சிறத்தல், திறன் கூடுவது, படைப்பாற்றல், அமைதி, நினைவாற்றல். அறிவாற்றல், மன ஆற்றல், உள்ளுணர்வுத்திறன் மிகுதல் போன்ற பலவிதமான பயன்களை ஒருவர் பெறுகிறார்.

**ஆரோக்கியம் என்பது என்ன?**

ஆரோக்கியம் என்பதற்குப் பலவிதமான வரையறைகள் சொல்லப்படுகின்றன. அதிகமாக மேற்கோள் காட்டப்பட்ட நவீன வரையறையாக உலக சுகாதார நிறுவனத்தின் வரையறை உள்ளது. நியூயார்க்கில் 1946ஆம் ஆண்டு ஜூன் 19 முதல் 21 வரை நடைபெற்ற சர்வதேச ஆரோக்கிய மாநாட்டில் இந்த வரையறை ஏற்றுக்கொள்ளப்பட்டது. 1946 ஜூலை 22ஆம் நாள் 61 நாடுகள் இதில் கையொப்பமிட்டன (உலக சுகாதார நிறுவனத்தின் அலுவல் பதிவுகள் எண்.2 பக்கம்.100). 1948ஆம் ஆண்டு ஏப்ரல் 7 முதல் இது நடைமுறைக்கு வந்தது. அந்த வரையறையாவது: 'நோய்களும் தளர்ச்சியும் இல்லாமல் இருப்பது மட்டுமே ஆரோக்கியம் என்று ஆகிவிடாது. உடல், மனம், சமூகநலம் இவை சார்ந்த ஒரு முழுமையான ஆரோக்கிய நிலையே ஆரோக்கியம் எனப்படும்'.

**யோகாவும் இளைஞர்களும்:**

ஆரோக்கியமான வாழ்க்கைக்கான ஒரு கலையாகவும், அறிவியலாகவும் யோகா பார்க்கப்படுகிறது. ஆரோக்கியமாக இருக்க விரும்பும் ஒவ்வொருவருக்குமானது யோகா. நோய்களில் இருந்து விலகி இருக்க விரும்பும் அனைவருக்குமானது யோகா. உள்ளார்ந்த திறன்களையும், தன்னம்பிக்கையையும் பெருக்கிக்கொள்வதற்கு யோகா ஒரு வழி. இதனை வாழ்க்கைமுறையில் செய்துகொள்ளப் படும் ஒரு மாற்றம் என்று சொல்லமுடியும்.

இளைய சமுதாயத்திற்கு யோகா அவசியமானதாக உள்ளது. இளைஞர்கள் கல்வியிலும், வேலைவாய்ப்பிலும் ஏராளமான சவால்களை எதிர்கொண்டு வருகின்றனர். யோகா நிச்சயமாக அவர்களுக்கு ஒரு மடைமாற்றாக இருக்கும். உண்மையான யோகி அன்றாடம் எழக்கூடிய சவால்களைத் திறம்படக் கையாளக்கூடியவராக இருப்பார். உடல், மனம், சமூகம், தார்மீகம், உணர்ச்சிகள், ஆன்மிகம் ஆகிய அதன் அனைத்துக்கூறுகளிலும் அளுமையை வளர்த்தெடுக்க யோகா முயல்கிறது. மனிதனை ஒரு புதிய ஆளுமையுடன் அது உருவாக்குகிறது. முழு அமைப்பிலும் மாற்றங்களை உருவாக்கி, கவனத்தை ஒருமுகப்படுத்தி, அமைதியை மிகுவித்து, யோகப்பயிற்சி செய்பவரை அமைதியாகவும் சலனமின்றியும் இருக்கச்செய்கிறது. தற்கால தினசரி வாழ்க்கைக்கு இது மிகவும் அவசியமானதாகும்.

இந்தியா 125 கோடிக்கும் மேல் மக்கள் வாழும் ஒரு பெரிய தேசம். இந்த தேசத்தின் வளர்ச்சி அதன் ஆரோக்கியத்தின் மீது தான் அமைந்திருக்கிறது. தேசத்தின் ஆரோக்கியம் தரித்திரமான நிலையில் இருந்தால் அதன் வளர்ச்சியும் மந்தமாகிவிடக்கூடும். ஆரோக்கியத்தைக் கையாளுவதற்கே ஏராளமான சக்தியும், பொருளும் செலவாகிவிடும். ஒரு தேசத்தில் உள்ள இளைஞர்கள் சிறப்பாகவும், வலுவாகவும் இருந்தால் தேசத்தின் ஆரோக்கியமும் நன்றாக இருக்கும். அந்த தேசம் நீண்ட தொலைவிற்கு சோர்வின்றிப் பயணிக்கவும் முடியும். எனவே இளைஞர்களின் ஆரோக்கியம் என்பது அதீதமான முக்கியத்துவம் உடையதாகிறது.

யோகா என்பது அடிப்படையில் ஆரோக்கிய வாழ்வு பற்றிய ஆன்மிக அறிவியலுமாகும். நோய்கள் வராமல் தவிர்ப்பதற்கும், ஆரோக்கியத்தை மேம்படுத்துவதற்குமான ஆற்றலை யோகா கொண்டிருக்கிறது. இதன் முழுமையான அணுகுமுறை அனைத்துவகையான வாழ்க்கைப்போக்குகளிலும் ஒத்திசைவை ஏற்படுத்தி நம்முடைய அன்றாட வாழ்வின் மீது செல்வாக்கை செலுத்துகிறது. யோகாவை தொடர்ந்துபயிற்சி செய்து வந்தால் நமது நடத்தையிலும், மனப்பாங்கிலும் சாதகமான மாற்றங்கள் ஏற்படுகின்றன. யோகா பயில்பவர் அவரது வீட்டிலும், சமூகத்திலும் மனித உறவுகளைமேம்படுத்திக்கொள்ள முடிகிறது. உலகம் முழுவதிலும் நடைபெற்ற பல்வேறு ஆராய்ச்சிகளின் மூலம் யோகாவிற்கு மருத்துவ ரீதியிலான குணங்களும் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. உடற்செயலியல், உடல்மனம் ஆகியவற்றோடு தொடர்புடைய குறைபாடுகள் உட்பட வாழ்க்கை முறையோடு தொடர்புடைய பல்வேறு குறைபாடுகளைத் தவிர்ப்பதற்கும், சமாளிப்பதற்கும் இருக்கும் இதன் வலிமை தான் யோகா இன்று பிரபலமாக இருப்பதற்கு காரணம்.


**யோகாவும் ஆராய்ச்சியும்:**

உடல், மனம் சார்ந்த குறைபாடுகள், வாழ்க்கைமுறையோடு தொடர்புடைய பல்வேறு குறைபாடுகள் ஆகியவற்றை சிறப்பாக மேலாண்மை

செய்யக்கூடிய வல்லமை யோகாவிற்கு இருக்கிறது என்பதை பிணி சார்ந்த பல்வேறு ஆய்வுகள் நிறுவி இருக்கின்றன. தொற்றாநோய்களை மேலாண்மை செய்வதில் ஊடுருவல் இல்லாத சிகிச்சையை அளிக்கக்கூடிய ஒன்றாக யோகா ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. ஆக்கப்பூர்வமான வழி முறைகளைக் கைக்கொள்வதன் மூலம் இத்தகைய நோய்கள் தவிர்க்கப்படலாம். இயற்கை சார்ந்த பயிற்சிகளான உண்ணாநோன்பு, உணவு மருத்துவம், சேறு மருத்துவம், நீர் மருத்துவம், மசாஜ் சிகிச்சை, காற்று சிகிச்சை போன்றவற்றுடன் ஷத்கர்மா, ஆசனங்கள், சூரியநமஸ்காரம், பிரணாயாமா, தியானம் போன்ற யோகப்பயிற்சிகள் இணைத்து செய்ய்யப்படும் போது நோய் இல்லாத ஆரோக்கியமான மகிழ்ச்சியான வாழ்க்கை அமைவது நிச்சயம்.

உயர் இரத்த அழுத்தம், இதயப்பிரச்னைகள், நீரிழிவு, மனஅழுத்தம், பதற்றம், தூக்கமின்மை போன்றவை இளைய சமுதாயத்தினரிடம் இப்போது காணப்படும் பிரச்னைகளில் சிலவாகும். இதயத்தமனிகளில் ஏற்படக்கூடிய நோய்களினால் ஏற்படக்கூடிய ஆபத்துக் கூறுகளைக் குறைப்பதில் யோகா ஆதாயம் தரக்கூடிய சில விளைவுகளைத்தருகிறது என்பது இது தொடர்பான ஆய்வுகள் மூலம் தெரியவந்திருக்கிறது. மன்சந்தாவும் மற்றவர்களும் 2000ஆம் ஆண்டில் செய்த ஆய்வில் இதயத்தமனி நோய் தீவிரமாக இருக்கும் நோயாளிகளின் வாழ்க்கை முறைகளில் யோகா மூலம் மாற்றத்தைக்கொண்டு வருவதில் மிக அதிக அளவிலான இணக்கம் தெரிகிறது என்பது கண்டறியப்பட்டது. இதயத்தசைகளுக்குப் போதுமான ஆக்சிஜன் கிடைக்காத போது ஏற்படும் அசௌகரியம், நெஞ்சுவலி, உடல் எடை, கொழுப்பு அளவுகள் ஆகியவற்றில் உடற்பயிற்சி தரக்கூடிய அழுத்தம் பற்றிய ஆய்வுகளில் யோகா சாதகமான பலன்களைக் காட்டுகிறது. இரத்த வெள்ளை அணுக்களின் படையெடுப்பினாலும், அவற்றின் திரட்சியினாலும் தமனிரத்தக்குழாய்களின் சுவர் தடிமனாகிபோகும் நிலையில் உள்ளவர்களுக்கு இதனை நிலைப்படுத்தி, இதய மாற்றுப்பாதை அறுவை சிகிச்சை, ஆஞ்சியோபிலாஸ்ட்டி போன்ற அறுவைசிகிச்சை முறைகளின் தேவையை யோகா குறைக்கிறது. எனவே செலவில்லாத சாத்தியமான இடையீடாக யோகா வாழ்க்கை முறை இருக்கிறது. ஆகவே, யோகாவை தினசரி வாழ்க்கையில் இணைத்துக்கொள்வதன் மூலம் இதயத்தமனி நோய்கள், இரத்த அழுத்தம் போன்ற தொற்றாத நோய்களைத் தவிர்க்கவும், நிர்வகிக்கவும் முடியும்.

இளைஞர்களின் ஆரோக்கியத்தில் உணவு முக்கியமான பங்கு ஆற்றுகிறது. ஆச்சார்யா, ரஸ்தோகி இருவரும் 2016இல் வெளியிட்டிருக்கும் 'ஆரோக்கியமான



வாழ்க்கையையும் மனஅழுத்த மில்லா வாழ்க்கையையும் சமநிலைப்படுத்துதல்' என்ற ஆய்வறிக்கை இளைஞர்களின் உணவுப் பழக்கங்கள் ஆரோக்கியமானதாக இல்லை என்று தெரிவிக்கிறது. பதப்படுத்தி வைக்கப்படும் உணவு, துரித உணவு, சத்தில்லாத உணவுகள், அதிக கலோரிகளைத்தரும் உணவுகள், புகைபிடித்தல், மது அருந்துதல், போதைப் பழக்கங்கள் போன்றவை இரத்த அழுத்தம், முடக்குவாதம், முதுகுவலி போன்ற பல நோய்களை உருவாக்கி நம்மை பொறுமை இழந்தவர்களாக ஆக்கி உடலும் மனமும் சார்ந்த பலவித நோய்கள் வருவதற்கு வழி செய்துவிடுகின்றன. இதனால், மனநோயாளிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துவருகிறது. மனஅழுத்தம், எண்ணமும் செயலும் மாறுபடும் மனக்கோளாறு, மது, போதைப்பொருள்கள் போன்றவற்றால் ஏற்படும் குறைபாடுகள் ஆகியவற்றை உடையவர்களாக ஏராளமானவர்கள் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. உடலுக்கும் மனதிற்கும் சிறப்பாக சிகிச்சை தரக்கூடியது யோகா. ஆசனங்கள், பிரணாயாமம், ஷத்கர்மா, சூரிய நமஸ்காரம், தியானம் ஆகியவற்றின் மூலம் யோகாவின் பயன்களைப் பெறமுடியும்.

ஆகவே உடல் நலப்பிரச்னைகளைத் தவிர்ப்பதற்கு இளைஞர்களுக்கான சரியான இடையீட்டுக்கருவி யோகாவாகும் என்ற முடிவுக்கு நாம் வரலாம். யோகா தேசத்தின் வளர்ச்சி வழிமுறையில் ஒரு பகுதியாக இருக்கிறது. யோகா உடல் ஆரோக்கியத்தை மேம்படுத்தி, சாதகமான மனப்போக்கையும் வளர்த்தெடுக்கிறது. உடலையும் மனதையும் மிகப்பொருத்தமான அளவில் ஒத்திசைவுடனும், நலத்துடனும் வைத்திருப்பதற்கு யோகப் பயிற்சிகளே சரியான வழியாகும்.

●

# இளைஞர்களுக்கு அதிகாரம் அளித்தலும் யோகாவும்

- ஈஸ்வர் வி. பசவரட்டி

இந்திய அரசின் ஆயுஷ் அமைச்சக மொரார்ஜி தேசாய் தேசிய யோகா நிறுவனத்தின் இயக்குநர்

இளைஞர்களுக்கு அதிகாரம் அளித்தல் என்பது சிறுவர்களையும் இளைய வயதினரையும் தங்கள் வாழ்க்கைக்கான பொறுப்பினை எடுத்துக் கொள்வதற்கு அவர்களை ஊக்கப்படுத்தும் ஒரு செயல்முறை ஆகும். இந்த அதிகாரம் அளித்தல் என்பது முதலில் அவர்களின் சூழ்நிலையைக் கணக்கில் எடுத்துக் கொள்கிறது. பிறகு அவர்களுக்கு மூலவளங்கள் கிடைப்பதை மேம்படுத்துகிறது. அடுத்த நிலையில் அவர்களின் நம்பிக்கைகள், மதிப்பீடுகள் மற்றும் மனப்போக்குகள் மூலமாக அவர்களது பிரக்ஞையில் மடைமாற்றத்தைச் செய்கிறது. இளைஞர்களுக்கு அதிகாரம் அளித்தல் என்பது வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. அதிகாரம் பெறுவதற்கான நிகழ்ச்சிகள் மற்றும் திட்டங்களில் பங்கேற்பதன் மூலம் இளைஞர்கள் அதிகாரம் பெற வாய்ப்பு ஏற்படுகிறது.

இளைஞர் மேம்பாடு என்ற கருத்தாக்கம் இளைஞருக்கு அதிகாரம் அளித்தல் என்பதில் இருந்து வேறுபட்டதாகும். ஏனெனில் மேம்பாடு என்பது தனிநபர்களின் வளர்ச்சியை மையமாகக் கொண்டதாகும். அதிகாரம் அளித்தல் என்பது இளைஞர்களிடமும் சமுதாயத்தினரிடமும் தனித்தியங்குதலின் சாத்தியங்களை அதிகரிக்கவும் தன்முனைப்பை அதிகரிக்கவும் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளைக் குறிக்கிறது. இளைஞர்கள் தாங்கள் வாழும் சமுதாயத்தில் தங்களின் நலன்களைப் பொறுப்புடனும் சுயநிர்ணய முறையிலும் முன்வைக்கும் நடவடிக்கைகளையும் குறிக்கிறது. தங்களின் சொந்த அதிகாரத்தின் மீது இளைஞர்கள் செயல்பட்டு இதனை முன்வைத்தாக வேண்டும்.

இளைஞருக்கு அதிகாரம் அளித்தல் என்ற கோட்பாடானது மேலும் மூன்று பிரிவுகளாகப் பிரித்துப் பார்க்கப்படுகிறது. அவை:

1. தனிநபருக்கு அதிகாரம் அளித்தல்
2. நிறுவனத்துக்கு அதிகாரம் அளித்தல், மற்றும்
3. சமுதாயத்திற்கு அதிகாரம் அளித்தல்

என்பவை ஆகும்.

**1. தனிநபருக்கு அதிகாரம் அளித்தல்:** கட்டுப்பாட்டை மேற்கொள்ளவும் தங்களின் திறனை அதிகரித்துக் கொள்ளவும் இளைஞர் அல்லது வயது வந்தோருக்கு மேம்பாட்டுத் திறன்கள் அதேபோன்று நிறுவனங்கள் மற்றும் சமுதாயத்தினருக்கு(வீ) நன்மைகள் கிடைப்பதை திறம்பட ஒருங்கிணைப்பதற்காக விமர்சன விழிப்புணர்வை மேம்படுத்துதல்.

**2. நிறுவனத்துக்கு அதிகாரம் அளித்தல்:** இளைஞர்களுக்கு அல்லது வயது வந்தோருக்கு வாய்ப்புகளை வழங்குகின்ற மற்றும் அவர்களிடம் இருந்து பலன்களைப் பெறுகின்ற அமைப்புகள் - தங்களது வாழ்க்கை மீது கட்டுப்பாடு செலுத்தத் தேவைப்படும் திறன்களை இளைஞர்கள் பெற இத்தகைய அமைப்புகள் உதவும். கொள்கை முடிவுகளை உருவாக்கும் மற்றும் அவற்றின் மீது தாக்கத்தை ஏற்படுத்தும் அமைப்புகளுக்கும் அவற்றின் சேவைகளுக்கும் பதிலீடுகளை வழங்குதல் (ii).

**3. சமுதாயத்திற்கு அதிகாரம் அளித்தல்:** சமுதாய மேம்பாட்டுக்காக எடுக்கப்படும் முயற்சிகள் வாழ்க்கைத் தரத்திற்குச் சவாலாக இருப்பவற்றை எதிர்கொள்ளுதல் மற்றும் உள்ளூர், மாநில, தேச அளவில் குடிமக்கள் பங்கேற்புக்கான வாய்ப்புகளை வழங்குதல் (iii)

**இளைஞர்களைப் பாதிக்கும் பொதுவான ஆரோக்கியப் பிரச்சினைகள்**

இளைஞர்கள் பற்றி கிடைக்கக் கூடிய சான்றாதாரங்கள் இளையோர் பலவிதமான ஆரோக்கிய பாதிப்பு நிலைமைக்கு ஆளாகும் வாய்ப்புகள் இருப்பதை எடுத்துக்காட்டுகின்றன. தனிப்பட ஒருவர் எடுக்கும் முடிவுகள், சுற்றுச்சூழல் தாக்கங்கள், வாழ்க்கை முறை மாற்றங்கள், தொற்றும் மற்றும் தொற்றாத நோய்கள், விபத்துக் காயங்கள் உள்ளிட்டவை இத்தகைய நிலைமைகளை உருவாக்குகின்றன. இளைஞர்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகள் சமூக மற்றும் பொருளாதாரம் சார்ந்தவை மட்டும் அன்று. அவர்களின் பல பிரச்சினைகள் உளவியல் சார்ந்தவையாகவும் இருக்கின்றன. உறவுகளால் பிணைக்கப்பட்டும் அதே சமயம் துயரம் நிரம்பிய தனிமையிலும் இளைஞர் மற்றும் வயது வந்தோர் போதைப்பழக்கத்திற்கும் மதுப்பழக்கத்திற்கும் தூண்டப்படுகிறார்கள். இதர முக்கியமான பிரச்சினைகள் எதுவெனில் ஒத்த வயதினரின் வற்புறுத்தல், குடும்பக் கடன்கள் மற்றும் பணிச்சுமை ஆகும். மேலும் முறையான ஆலோசனை/பராமரிப்பு சரிவர கிடைக்காததால்/இல்லாததால் இளைஞர்கள் தங்களது வாழ்க்கையைத் தற்கொலையில் முடித்துக் கொள்ள முயல்கிறார்கள்.

**இளைஞர்கள் எதிர்கொள்ளும் பொதுவான பிரச்சினைகள் கீழே தரப்படுகின்றன:**

- → அதிக உடல் எடை மற்றும் பருமன்
- → மன அழுத்தம்
- → பதற்றம் - மனச்சோர்வு
- → இளைஞர்களுக்கு இடையில் ஏற்படும் தனிப்பட்ட முறையிலான நேருக்கு நேர் வன்முறை
- → தற்கொலைச் சிந்தனைகள்
- → புகையிலைப் பயன்பாடு
- → மது மற்றும் போதைப்பொருள் பழக்கம்
- → தொற்றாத நோய்கள் (என்.சி.டி)

இளைஞர்களுக்கு அதிகாரம் அளிப்பதில் யோகா

ஆசனங்கள் மற்றும் பிராணாயாமங்கள் ஆகியன உடல் மற்றும் மன ஆரோக்கியத்தை மேம்படுத்துவதில் முக்கிய பங்காற்றுகின்றன. அவை உடல் வலிமையை அதிகப்படுத்துகின்றன. உடலில் இருந்து நச்சுப் பொருட்களை அகற்றுகின்றன. உடல் மற்றும் மனத்தை இறுக்கமின்றித் தளர்வாக வைத்துக் கொள்கின்றன. மனஅழுத்தத்தைக் குறைக்கின்றன. பிரிவு மற்றும் இணைப்பிரிவு நரம்பு மண்டலங்களுக்கு இடையில் சமநிலையைப் பேணுகின்றன.

அதனால் பலவகையான தொற்றாத நோய்கள் ஏற்படாமல் தடுக்கின்றன. எனவே, ஆசனங்களும் பிரணாயாமங்களும் கீழ்வருவனவற்றிற்கு உதவுகின்றன:

- மனஅழுத்தம் - பதற்றத்தில் இருந்து விடுவிக்கின்றன
- ஆக்கப்பூர்வமான ஆற்றல் மற்றும் மனோநிலையை மேம்படுத்துகின்றன
- ரத்த அழுத்தத்தை இயல்பாக வைத்துக் கொள்ள உதவுகிறது
- சுற்றி உள்ள தசைகளை மசாஜ் செய்வதன் மூலம் சீரற்ற மற்றும் தேக்கமான செறிமானத்தை விரைவுபடுத்துகிறது.
- அமைதி மற்றும் நல்வாழ்வு உணர்வுகளை அதிகப்படுத்துகின்றன. எனவே நெடுங்கால மனஅழுத்தப் பாதிப்புகளில் இருந்து தற்காப்பு அளிக்கிறது.
- இதயத் துடிப்பையும் மூச்சு விடுதலையும் மெதுவாக்குகிறது. ரத்த அழுத்தத்தை இயல்பாக்குகிறது.
- ஆக்சிஜன் மிகத் திறமையாகப் பயன்படுத்தப்பட ஏதுவாகிறது.
- அட்ரினல் சுரப்பிகள் மிகக் குறைவாகவே கார்ட்டிசாலைச் சுரக்கின்றன.
- நோய் எதிர்ப்புச் சக்தியையும் செயல்பாட்டையும் அதிகரிக்கிறது.

### மனஅழுத்தத்தைக் குறைப்பதற்கு யோகா

மனஅழுத்தமானது தன்னியக்க (தன்னிச்சையாக இயங்கும்) நரம்பு மண்டலத்தின் சமச்சீர் நிலையைக் குலைக்கிறது. இணைபிரிவு நரம்பு மண்டலச் செயல்பாடுகளைக் குறைப்பதாலும் பிரிவு நரம்பு மண்டல அமைப்பின் செயல்பாடுகளை அதிகப்படுத்துவதாலும் இந்தச் சமச்சீர் குலைவானது ஏற்படுகின்றது. புலன் உணரும் ஒரு தேவையும் அந்தத் தேவையை நிறைவு செய்வதற்கான ஒருவரின் தகவமைப்பு திறனும் பொருந்தாமல் போகும் போது மனஅழுத்தமானது ஏற்பட்டு அது உணரப்படுகிறது. வெளிப்புறச் சூழல் மீதான ஒருவரின் உணர்வுப்பூர்வமான மற்றும் உளவியல்ரீதியான எதிர்வினைகளும் இதில் உள்ளடங்கும். ஒருவர் தொடர்ந்து மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்டு இருந்தால், அந்த அழுத்தம் உண்மையானதாக அல்லது புலன் உணரப்படுவதாக இருந்தாலும், அவரது நரம்பு மண்டலம் பிரிவு நிலையைக் கட்டுப்படுத்தும் நிலைக்கு மாறும். இந்தப் புள்ளியில் பிரிவு நரம்பு மண்டலத்தின் இயல்பான நடவடிக்கைகள் குறையத் தொடங்குகின்றன. எபிநெஃப்ரின் விடுவிப்பு குறையத் தொடங்கும். ஆனால், அதே சமயம் கார்டிகோஸ்டீராய்டு விடுவிப்பு வழக்கமான அளவு நிலையைவிட கூடுதல் அளவு என்னும் நிலைக்கு முடுக்கிவிடப்படுவது தொடர்ந்து இருக்கும். அத்தகைய தருணத்தில், அந்தத் தனிநபர் தான் மனஅழுத்த நிலைமையில் இருக்கின்றோம் என்பதைக்கூட உணர முடியாமல் இருப்பார்.

யோகாவானது இணைப்பிரிவு நரம்பு மண்டலத்தைத் தூண்டுவதன் மூலம் தன்னியக்க நரம்பு மண்டலத்தை ஆரோக்கியமான சமச்சீர் நிலைமைக்கு மீண்டும் கொண்டு வருகிறது. நமது உடல் அல்லது மனம் அச்சுறுத்தலை உணர்ந்தால் அல்லது மன அழுத்தத்துக்கு ஆளாவது போல புலன் உணர்ந்தால், அந்த அழுத்தம் "நேர்மறையானதாக" அல்லது "எதிர்மறையானதாக" எப்படி இருந்தாலும் நமது பிரிவு நரம்பு மண்டலம் அல்லது "ஆபத்துக்கால எதிர்வினை அமைப்பு" செயல்படத் தூண்டப்படுகிறது. இந்தப் "பதுங்கு அல்லது போராடு" என்ற எதிர்வினையானது நரம்புச் சுருக்கத்திற்கு வழிவகுக்கிறது. இதனால் முனைப்புள்ளிகளுக்கு ரத்தம் பாய்வது குறைகிறது. அதேபோன்று செரிமான மண்டலத்துக்கு ரத்தம் பாய்வதும் குறைகிறது. உயிர்வாழத் தகவமைத்துக் கொள்ள முன்னேற்பாடு செய்வது போல இந்தச் செயல்கள் அமைகின்றன.

மற்றும் இதேபோன்று யோகாவானது வேறு வழிமுறைகளிலும் உடல் மற்றும் மன நலத்துக்குப் பலன்களைத் தருகிறது. ஹைப்போதாலமி பிட்யூட்டரி - அட்ரினல் அச்சு மற்றும் பிரிவு நரம்பு மண்டலத்தின் உணர்வுக் குறைப்பு வழியாக இப்பலன்கள் அடையப்படுகின்றன. யோகா மூலம் மனதிற்கு சாந்தியும் அமைதியும் தரப்படுவதானது ரத்த அழுத்தத்தைக் குறைக்கிறது, நாடித்துடிப்பு மற்றும் மூச்சு விடும் வேகத்தைக் குறைக்கிறது. கார்ட்டிசால் மற்றும் அசெட்டில்கோலைன் ஆகியவற்றின் அளவு நிலையைக் குறைப்பதன் மூலம் இது எட்டப்படுகிறது. பொதுவாக இந்த அழுத்தக் காரணிகளை உடல் எதிர்கொள்ளும் போது அதிகரிக்கச் செய்யும். வேதிப்பொருள் சுரப்பைக் குறைப்பதன் விளைவாக, உளவியல் முரண்பாடுகள், மன அழுக்கங்கள், மிகை உணர்வுத் திறன்கள் ஆகியவற்றைக் குறைக்கப்படுகின்றன. இவைதான் உடல்மன சிக்கல்களைத் தூண்டிவிடும் கூறுகள் எனப் பார்க்கப்படுகின்றன. யோகப் பயிற்சிகளின் விளைவாக, மெலாடோனின் அளவுநிலை, முன்னேற்றம் பெற்ற உளவியல் நிலை, இதயசுவாச நிலைகள் ஆகியன அதிகரித்துள்ளன என்பது கண்டறியப்பட்டுள்ளது.

### போதைப்பொருள் பழக்கத்தில் இருந்து மீள்வதற்கு யோகா

போதைப்பொருள் பழக்கத்தில் இருந்து மீள்வதற்கான முக்கிய சிகிச்சைக் கூறாக யோகா உள்ளது. உடல், மனம் மற்றும் ஆன்மா ஆகிய மூன்றையும் ஒருங்கிணைத்து முழு மனிதனாக ஒருவரை மாற்ற யோக சிகிச்சையானது உதவும். மேலும் உடலை வலுப்படுத்த, மனதைச் சாந்தப்படுத்த, உடல் மற்றும் ஆன்மீக விழிப்புணர்வை அதிகப்படுத்த, மனத்தின் பதற்றத்தைக் குறைக்க யோகா உதவுகிறது. அதுமட்டுமின்றி சரியான சுவாச முறைகளையும் மேம்படுத்துகிறது. உடல் தோற்றநிலை விழிப்புணர்வை அதிகரித்து தகவமைப்பு திறன்களை மேம்படுத்தி மன உறுதியையும் கவனக் குவிப்பையும் ஊக்குவிக்கிறது. கவனம் முழுவதும் செலுத்தி மேற்கொள்ளப்படும் யோகப் பயிற்சிகளில் உள்ள பல்வேறு வகையான உடல் இயக்கங்கள் இளைஞர்களின் கவனத்தை அந்தத் தருணத்தை நோக்கி செலுத்த உதவுகின்றன. உடல்மனம் தொடர்ச்சியில் உண்டாகும் உணர்வுகள் குறித்த தெளிவை அவர்கள் பெறவும் உதவும். பின்புறமாக வளைதல் போன்ற குறிப்பிட்ட தோற்ற நிலைகள் உந்தி நரம்பு முடிச்சுவலைப் (சோலார் பிளெக்சஸ்)[iv] பகுதியில் உணரக் கூடிய உணர்வுகள் குறித்த புரிதலை ஏற்படுத்துகின்றன.

### உடல் பருமனுக்கு யோகா

சமச்சீரான உணவும் முறையான பயிற்சியுடன் ஆசனங்களும் மூச்சுப் பயிற்சிகளும் இணைந்த யோகா உடல்பருமனுக்குச் சரியான தீர்வாகும். உடல் பருமனாக உள்ளவர்கள் மூட்டுவலியால் சிரமப்படுவார்கள்.

மூட்டுகளில் சிரமத்தையும் அழுத்தத்தையம் குறைக்கும் வகையில் உடல் அமைப்பை மேம்படுத்த யோகா உதவுகிறது. இதனை உடல்எடையத் தாங்கும் வகையில் சட்டகத்தை வலுப்படுத்துவதன் மூலம் யோகா சாத்தியமாக்குகிறது. வலிமை மற்றும் நெகிழ்ச்சித் தன்மையை மேம்படுத்துகிறது. உடல்சமநிலையை யோகா சீரமைக்கிறது. பொருத்தமான உடல்கட்டை மேம்படுத்துதல் மற்றும் நல்ல மனநிலையை ஏற்படுத்துதல் மூலம் ஒருவர் தன்னை சிறப்பாக உணர்ந்து கொள்ள யோகா உதவுகிறது. தொடர்ச்சியான யோகப் பயிற்சிகள் உடல் பருமனாக உள்ள நபர்மீது பலவிதமான தாக்கங்களை ஏற்படுத்துகின்றன. எடை குறைப்புக்காக மேற்கொள்ளப்படும் பல உத்திகளை ஒப்பிட்டுப் பார்த்தால் யோகாவால் ஏற்படும் நல்ல விளைவுகள் நிரந்தரமான ஒன்றாகும். உடல் பருமனுக்குச் சிசிச்சை அளிப்பதில் சூரிய நமஸ்காரம் மிக முக்கியமான பங்கை வகிக்கிறது. சூரிய நமஸ்காரம் ஒரு முழுமையான சிகிச்சை முறையாக இருப்பதற்குக் காரணம் இந்தப் பயிற்சியானது நாளமில்லா சுரப்பி மண்டலம் மற்றும் நரம்பு மண்டலத்தில் விசேஷமான தாக்கத்தை ஏற்படுத்துவதே ஆகும். இது உடல்பருமனை அதிகப்படுத்தும் வளர்சிதை மாற்ற சமநிலையின்மையை மீண்டும் சீர் செய்கிறது. உடல்பருமன் பிரச்சினைக்குப் பரிந்துரைக்கப்படும் பிராணாயாமங்களாக பாஸ்த்ரிகா, கபாலாபாதி, சூரியபேதனம் ஆகியவற்றைக் குறிப்பிடலாம். இவைகளை உடலைச் சமநிலையில் வைத்திருக்க உதவும் பயிற்சிகளோடு சேர்த்து செய்ய வேண்டும். மேலும் இவை வளர்சிதை மாற்றத்தைத் தூண்டி சமநிலையைப் பராமரிக்கவும் உதவுகின்றன.

**இளைஞர்களும் தொற்றாத நோய்களும்**

இளைஞர் என்ற பருவம் ஒருவரின் வாழ்நாளில் இளமையாக இருக்கும் போது ஏற்படுவது ஆகும். மேலும் தெளிவாகக் கூறுவதென்றால் குழந்தைப் பருவத்திற்கும் வயது வந்தோர் பருவத்திற்கும் இடைப்பட்ட காலகட்டமாகும். இந்தப் பருவம் மேலும் இவ்வாறு வரையறை செய்யப்படுகிறது: ஒருவர் இளமையாக இருக்கிறார் என்றால் அது தோற்றம், புத்துணர்ச்சி, வீரியம் மற்றும் சுறுசுறுப்பு முதலான குணங்களால் வெளிப்படும்.

தொற்றாத நோய்கள் (என்.சி.டி) என்பவற்றில் நடத்தை மற்றும் வாழ்க்கை முறை தொடர்புடைய பல்வேறு நிலைமைகள் உள்ளடங்கும். இந்தியாவில், குறிப்பாக இளம் வயதினர் ஊட்டச்சத்து உணவுகளை உட்கொள்ளும் முறையில் மாற்றத்தை அனுபவிக்கின்றனர். இவர்கள்தான் உயர்ரத்த அழுத்தம், மன அழுத்தம், நீரிழிவு மற்றும் நாட்பட்ட நுரையீரல் நோய்கள் போன்ற வயது வந்தோருக்கான தொற்றா நோய்களுக்கு அதிக எண்ணிக்கையில் ஆளாவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

**தொற்றா நோய்களுக்கு யோகா**

இன்றைய காலகட்டத்தில் தொற்றாத நோய்கள் ஏற்பட முதன்மைக் காரணமாக இருப்பது வாழ்க்கை முறையே ஆகும். புகையிலைப் பயன்பாடு, உடல் உழைப்பு இல்லாத சௌகரியமான வாழ்க்கை முறை, தொடர்ச்சியாக உடற்பயிற்சி செய்யாமல் இருத்தல், ஆரோக்கியமற்ற உணவுகள் மற்றும் நீண்ட கால உள சமுதாய மன அழுத்தம் ஆகியன இதில் உள்ளடங்கும். பல தொற்றாத நோய்களில் பொதுவான கூறுகளாக இருப்பது நாட்பட்ட அழற்சி மற்றும் மன அழுத்தம் ஆகும். இவற்றைக் குணப்படுத்துவதில்தான் யோகாவானது மிகச்சிறந்த பலனைத் தருகின்றது. யோகப் பயிற்சிகளையும் மன ஒருங்கிணைப்புப் பயிற்சிகளையும் தொடர்ந்து செய்து வருவது பல வழிகளில் உடலில் சாதகமான விளைவுகளை ஏற்படுத்துகின்றன என்று அண்மைக்கால ஆய்வுகள் தெரிவிக்கின்றன. ரத்தத்தில் சர்க்கரையின் அளவை சீராக வைத்திருத்தல், இருதயநாள அமைப்பை ஆரோக்கியமான வைத்திருத்தல் முதலானவை இதில் அடங்கும். யோகப் பயிற்சி என்பது சுறுசுறுப்பாக இருப்பதை மேம்படுத்த உதவுவதால், யோகா உளவியல் சார்ந்த முக்கியமான பலன்களை அளிப்பதும் நிரூபிக்கப்பட்டுள்ளது.

ஒருவர் தனது சுயத்துடன் மீண்டும் தொடர்பு கொள்வதற்கு யோகா உதவுகிறது. ஒருவருக்கு நோய் எதனால் ஏற்பட்டது, எப்படி ஏற்பட்டது என்று கண்டறியவும் இது உதவுகிறது. நோயில் இருந்து ஒருவரை மீட்டெடுக்க உடலோடு இணைந்து யோகாவும் உதவுகிறது.

ஒருவர் தன்னைச் சுற்றி உள்ள உலகத்தோடு எவ்வாறு செயலாற்றுகிறார் என்பதைத் தெரிந்துக் கொள்ள யோகப் பயிற்சிகள் உதவுகின்றன. வேறுபட்ட பார்வைக் கோணத்தில் உலகைப் பார்க்கவும் வாழ்க்கையின் சவால்களை வித்தியாசமாகப் பார்க்கவும் அவை உதவுகின்றன. நமது மனதை மெதுவாக இயங்கச் செய்து சாந்தப்படுத்தி நம் உள்ளே இருக்கும் சுயத்தோடு தொடர்புபடுத்த யோகா உதவுகிறது. இதனால் அந்த நபர் மாய உலகத்தில் இருந்து உண்மையான தற்போதைய யதார்த்த தருணத்தில் காலூன்ற முடியும். நவீன அவசர யுகத்தின் அழுத்தங்கள் மற்றும் அந்த அழுத்தங்கள் ஏற்படுத்தும் காரணிகளில் இருந்து விடுபட யோகா முதன்மையாக உதவுகிறது. இதனால் தொற்றாத நோய்களில் இருந்து தற்காத்துக் கொள்ள முடியும்.

**அடிக்குறிப்புகள்:**

I. ஜிம்மெர்மன், மார்க் ஏ.மற்றும் ஜூலியன் ராப்போர்ட் இருவரும் இணைந்து 1988ல் அமெரிக்கன் ஜர்னல் ஆஃப் கம்யூனிட்டி சைக்காலஜி இதழில் தொகுதி 16, எண் 5ல் எழுதி உள்ள ''குடிமக்கள் பங்கேற்பு, புலன் உணரும் கட்டுப்பாடு மற்றும் உளவியல் அதிகாரம் பெறுதல்'' என்ற கட்டுரையைப் பார்க்கவும்.

II. ஜிம்மெர்மன், கையேடு 2000

III. மெரிடித் மின்க்லெர் என்பார், ''ஆரோக்கிய நடத்தை மற்றும் ஆரோக்கியக் கல்வி: கோட்பாடு, அளவு மற்றும் கல்வி'' என்ற நூலில் எழுதி உள்ள ''சமுதாய அமைப்புகள் மூலம் ஆரோக்கியத்தை மேம்படுத்துதல்'' என்ற கட்டுரையைப் பார்க்கவும். இந்நூல் 1990ல் சான்ஃபிரான்சிஸ்கோவில் வெளியிடப்பட்டுள்ளது.

IV. உந்தி நரம்பு முடிச்சுவலை (சோலார் பிளெக்சஸ்) என்பது வயிற்றுப் பகுதியில் அமைந்துள்ளது. ஏழு சக்கரங்கள் அல்லது ஆற்றல் மையங்கள் உடலில் இருப்பதாக யோகா உடலியல் குறிப்பிடுகிறது. இவை பிரக்ஞையின் நிலைகளுக்கும் உணர்வுத் திறன்களுக்கும் சமமானதாக எடுத்துக் கொள்ளப்படுகிறது. ●

# இளைஞர்கள்: வளர்ச்சிக்கான மாற்று சக்தி!

- முனைவர் **இரா.வெங்கடேஷ்**
**உதவிப் பேராசிரியர்,**
**அண்ணா பொது வாழ்வியல் மையம்,**
**சென்னைப் பல்கலைக்கழகம்.**

பொதுவாக ஒரு நாட்டின் வளர்ச்சிக்கும் வளர்ச்சிக் கூறுகளின் நிலைத்த தன்மைக்கும் உந்து சக்திகளாக பல்வேறு காரணிகள் அறியப்பட்டாலும் அவற்றுள் முதன்மையானது மட்டுமல்ல தவிர்க்க முடியாத சக்தியாகவும் முன்நிற்பது அந்நாட்டின் இளைஞர்களே ஆவர். புதிய சிந்தனைகள், மேம்பட்ட திறன்கள், புதுமைகளை உள்வாங்கும் நிலை, தளராத முயற்சி, வளர்ச்சி நோக்கிய இலக்கு,நவீன உத்திகளைக் கையாளுதல் போன்ற எண்ணற்ற பரிமாணங்கள் இளைஞர்களின் தகுதியையும் தரத்தையும் உயர்த்திப் பிடிப்பதால் அவர்களை விலக்கி வைத்துவிட்டு வளர்ச்சியை முன்னெடுத்துச் செல்வது இயலாததாகும். எனவேதான் நூறு ஆண்டுகளுக்கு முன்பே இளைஞர்கள் தான் நாட்டின் எதிர்காலம் அவர்களின் கைகளில் தான் நாடு உள்ளது என்று இளைஞர்களின் சக்தியை உலகிற்கு உணர்த்தினார் சுவாமி விவேகானந்தர்.

இளைஞர்களின் பங்களிப்பும் மாறுபட்ட அணுகுமுறையும் நாட்டின் வளர்ச்சிப் போக்கினைத் தீர்மானிப்பதற்குப் பேருதவியாக இருந்ததால் இளைஞர்களின் முன்னேற்றத்திற்கேற்ப நாட்டின் வளர்ச்சி விரைவுபடுத்தப்பட்டது. அந்த வகையில் இளைஞர்கள் நாட்டின் வளர்ச்சியை முன்னெடுத்துச் செல்லும் வளர்ச்சித் தூதுவர்களாக கருதப்பட்டனர். எதிர்காலம் மட்டுமன்றி நிகழ்காலத் தேவைகளையும் கருத்தில் கொண்டு வளர்ச்சிச் சமத்துவத்தைப் பரவலாக்குவதற்கான செயல்களில் தங்களை ஈடுபடுத்திக் கொள்வதன் மூலம் வளர்ச்சிப் பங்காளிகளாகவும் செயல்பட்டு வருகின்றனர்.

அறிவு, ஆற்றல், அனுபவம், துணிவு போன்றவற்றின் அடிப்படையில் வளரும் நாடுகளில் மட்டுமல்ல அமெரிக்கா போன்ற வளர்ந்த நாடுகளிலும் கூட இளைஞர்களின் செயல்பாடுகள் மிகுந்த முக்கியத்துவம் பெறுவதால் மாற்றங்களுக்கு வித்திடும் இன்றைய உலகில் இளைஞர்கள் மாற்று சக்திகளாகவும் உருவாகி நிற்கின்றனர்.

உலகில் சில நாடுகள் தான் மக்கள்தொகையில் கணிசமான அளவு இளைஞர்களை வரப்பிரசாதமாகப் பெற்றுள்ளது. அந்த வகையில் இந்தியாவின் மக்கள்தொகையில் ஏறத்தாழ 50 சதவீதத்திற்கும் மேல் 25 வயதிற்குட்பட்ட இளைஞர்கள் உள்ளனர். வளர்ந்து வரும் பொருளாதார நாடுகளில் உலக அரங்கில் முக்கிய இடத்தைப் பெற்றுள்ள இந்தியாவின் வளர்ச்சிக்கும் வெற்றிக்கும் அடித்தளமாக இருப்பது வளர்ச்சி சார்ந்த நிகழ்வுகளில் இளைஞர்கள் ஈடுபடுவதும் அவர்களின் உறுதிமிக்க பங்களிப்பும் தான். இவர்களின் ஈடுஇணையற்ற, நேரடியான மற்றும் மறைமுகமான பங்களிப்பால் நவீன இந்தியா சவால்களையும் சறுக்கல்களையும் எதிர்கொண்டு அதற்கான சரியான தீர்வுகளைக் கண்டறிந்து சமூக, பொருளாதாரத் தளத்தில் வளமான பாதையில் பயணித்து வருகின்றது.

எனவே ஒவ்வொரு நாட்டிலும் அங்கு நிலவும் சூழ்நிலைக்கேற்ப அந்நாட்டின் வளர்ச்சிக்கு இளைஞர்களின் பங்களிப்பு இன்றியமையாததாக உள்ளது. பன்முகத் திறன் கொண்ட இவர்கள் அனைத்து துறைகளிலும் சாதித்து வருகின்றனர்.

தகவல் தொழில்நுட்பப் புரட்சியைத் தக்கவாறு பயன்படுத்திக்கொள்ளத் தவறிவிடும் நாடுகள் பின்தங்கிய நாடுகளாகவே இருக்கும் என்று ஒரு காலத்தில் கருதப்பட்டது. ஆனால், இன்று அந்நிலை மாறி எந்தவொரு நாடு இளைஞர்களின் ஆற்றலைப் பயன்படுத்தத் தவறுகின்றதோ அல்லது திட்டமிடாமல் தவறான வழிகளில் பயன்படுத்திட முயலுகின்றதோ அது வளர்ந்த நாடுகளின் பட்டியலை எட்டிப் பிடிக்க இயலாது என்பதும் தொடர்ந்து வளர்ச்சிப் பாதையில் பயணிக்க முடியாது என்பதும் வெட்ட வெளிச்சமாகிறது.

**யார் இளைஞர்கள்;?**

15 வயது முதல் 25 வயதிற்குட்பட்டவர்களை இளைஞர்கள் என ஐ.நா. சபை வரையறை செய்துள்ளது. உலக மககள்தொகையில் ஆறில் ஒரு பங்கினர் இளைஞர்களாவர். இதில் பெரும்பாலானோர் வளரும் நாடுகளில் உள்ளனர். இத்தகைய வலிமை படைத்த இளைஞர்களை அதிகாரப்படுத்துவதன் மூலம் எதிர்பார்ப்பிற்கேற்ற உறுதியான கட்டமைப்பை அனைத்து நிலைகளிலும் உருவாக்க முடியும் என்று ஐ.நா. சபை நம்பிக்கை தெரிவிக்கின்றது.

நாளைய சமுதாயத்தின் தூண்களாக, வருங்காலத் தலைவர்களாக அறியப்படும் இன்றைய இளைஞர்களின் செயல்பாடுகளை ஒழுங்குபடுத்துவதன் மூலம் மேம்பட்ட சமுதாயத்தை உலகத் தரத்தில் ஏற்படுத்த முடியும்.

**இளைஞர்கள் முன்னேற்றம்**

இளைஞர்கள் முன்னேற்றம் என்பது அடிப்படையில் இரண்டு முக்கிய இலக்குகளைக் கொண்டது. அவை,

- அக முன்னேற்றம்
- புற முன்னேற்றம் என்பதாகும்.

**அக முன்னேற்றம்**

இது இளைஞர்களின் தனித் திறமை சார்ந்தது. ஒரு செயலை மேற்கொள்வதற்கான தனி நபர் திறன்களை வளர்த்தல் மற்றும் முறையாகச் செயல்படுத்துதல்.

**புற முன்னேற்றம்**

இது பொது நிலையில் சமூக மேம்பாடு கருதி ஆக்கப்பூர்வமான செயல்பாடுகளில் ஈடுபடுதல் சார்ந்தது. குடும்பம், சமூகம், நாடு, மக்கள், வளர்ச்சி, மாற்றம் போன்றவற்றில் முழு ஈடுபாட்டுடன் பங்கேற்றல்.

மேலும் பிறரைப் புரிந்து கொள்ளுதல், சிக்கல்களுக்கு உரிய தீர்வு காணுதல், உறுதியான முடிவெடுத்தல், பாதிப்புகளை உள்வாங்குதல் போன்ற திறன்களையும் கருத்தில் கொள்ள வேண்டிள்ளது.

இன்றைய இளைஞர்கள் இந்தியாவை வல்லரசாக கட்டியெழுப்பும் திறமை படைத்தவர்கள் என்ற எதிர்பார்ப்பு உள்ளது. இதனை நிறைவேற்றுவது என்பது அவர்களின் எண்ணங்கள், பண்புகள், ஈடுபாடுகள், செயலாற்றும் முறைகள், மன உறுதி ஆகியவற்றைப் பொருத்ததாகும்.

குஜராத்தைச் சேர்ந்த மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி என்ற இளைஞன் மனதில் சத்தியத்திற்கு ஒரு பெரிய முக்கியத்துவம் இருந்தது. மெலிந்த தேகமுடன் உடல் பலமற்று அந்த இளைஞன் வழக்கறிஞர் படிப்பு படித்த போதும் பெரிய வழக்கறிஞர் ஆகும் திறமை ஒன்றும் அந்த இளைஞனுக்கில்லை. ஆனால் அந்த இளைஞனின் மனதில் இருந்த அசைக்கமுடியாத மன உறுதி இந்திய மண்ணிலிருந்து அந்நிய சக்திகளை வேரோடு அகற்றி சரித்திரம் படைத்தது. கத்தியின்றி, இரத்தமின்றி நடந்த விடுதலைப் போராட்டம் உலகச் சரித்திரத்தில் பதிவாகியது.

இளமை முதல் ஐன்ஸ்டீனுக்கு இருந்த அறிவியல் தாகம் அவனை விஞ்ஞானத் துறை நோக்கிப் பயணம் செய்ய வைத்துப் பின்னாளில் ஈடு இணையற்ற விஞ்ஞானியாக உலகிற்குத் தந்தது. எந்தத் துறையாயினும் இளைஞர்களின் சிந்தனைகள், உறுதிமிக்க உழைப்பு, புத்தாக்க முயற்சி ஆகியவை குறிப்பிடத் தகுந்த மாற்றங்களை உருவாக்கி இருக்கின்றது. இவ்வாறு இளைஞர் சக்தி எந்தச் சூழ்நிலையில் எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றது என்பதைப் பொறுத்து தனிநபர் மேம்பாடு மட்டுமன்றி நாட்டின் இலக்கு சார்ந்த முயற்சிகளும் தீர்மானிக்கப்படுகின்றன. அத்தகைய முயற்சிகள் வெற்றி பெறுவதற்கு அரசுகளும் தங்கள் பங்களிப்பைச் செலுத்துகின்றன.

**இளைஞர்களின் மேம்பாட்டிற்கு மத்திய அரசின் முயற்சிகள்**

நாட்டின் இளைஞர்களை மனதில் கொண்டு நம்பிக்கைக்கான புதிய சூழலை உருவாக்கிடவும் வளர்ச்சித் தளங்களில் நாடு புதிய உச்சத்தை எட்டுவதற்கும் பிரதமர் மோடி தலைமையிலான அரசு பல்வேறு சிறப்புத் திட்டங்களையும் ஊக்குவிப்பு நடவடிக்கைகளையும் செயல்படுத்தி வருகின்றது. அத்தகைய சிறப்புத் திட்டங்களுள் சில பின்வருமாறு:

**திறன்மிகு இந்தியா (Skill India)**

வேலைவாய்ப்பிற்கான சந்தையில் நுழையும் இந்திய இளைஞர்களில் பெரும்பாலானோர் போதிய திறன்களின்றி தவித்து வருகின்றனர். இந்நெருக்கடியைச் சரிசெய்து தகுதியுள்ளவர்களுக்கு முறையான திறன் பயிற்சி அளித்து தகுதியான வேலையைப் பெறுவதற்கு இத்திட்டம் வழிவகை செய்கின்றது. இத்திட்டம் 7 ஆண்டுகளில் அதாவது 2022க்குள் ஏறத்தாழ 40 கோடி இளைஞர்களைத் தொழில் திறன் மிக்கவர்களாக மாற்றும் இலக்குடன் வடிவமைக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இதன் மூலம் ஏராளமான இளைஞர்கள் விரைவாகவும் தரமாகவும் தேசிய தகுதி வாய்ந்த திறன் பயிற்சிகளைப் பெறுவதுடன் புதுமையான அணுகுமுறைகளில் தொழில்முனைவு அனுபவம் மற்றும் உயர் தொழில்நுட்பத் திறன் தேவைப்படும் வேலைவாய்ப்புகளைப் பெறுவதற்கான சூழல் உருவாகியுள்ளது.

**பிரதம மந்திரி திறன் மேம்பாட்டுத் திட்டம் (Pradhan Mantri Kaushal Vikas Yojana)**

மத்திய அரசின் திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவோர் அமைச்சகத்தால் ஏற்படுத்தப்பட்டுள்ள தேசிய திறன் மேம்பாட்டு கழகத்தின் மூலம் இளைஞர்களுக்குத் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் வழங்கும் முன்னோடித் திட்டம் இதுவாகும். தேசிய திறன் தகுதி கட்டமைப்பு மற்றும் தொழில்துறையினர் நிர்ணயித்துள்ள தரத்திற்கேற்ப திறன் பயிற்சி அளிக்கப்படும். இத்திட்டத்தின் கீழ் திறன் பயிற்சி பெறுவோரின் திறன்கள் மூன்றாம் தரப்பினர் மூலம் மதிப்பீடு செய்யப்பட்டு தகுந்த பரிசுகள் வழங்கப்படும்.

**இந்தியாவில் தயாரித்தல் (Make in India)**

உலக நாடுகளின் உற்பத்தி மையமாக இந்தியாவை மாற்றும் நோக்கில் இந்திய இளம் தொழில்முனைவோர்களை ஊக்கப்படுத்தி சாத்தியமுள்ள துறைகளில் இந்தியத் தயாரிப்புகளை அதிகரிக்கும் சூழலை இத்திட்டம் உருவாக்கியுள்ளது. அந்நிய முதலீடுகளுக்கான வாய்ப்பு, உள்நாட்டு நிறுவனங்களே பெருமளவு முதலீடு செய்து உற்பத்தியைப் பெருக்கி ஏற்றுமதி செய்தல், புதிய தொழில்நுட்பத்தினைக் கையாளுதல், பன்முகத் திறன் மேம்பாடு போன்றவை இத்திட்டத்தின் நோக்கங்களாக உள்ளன. மேலும் இத்திட்டம் நேரடியாகவும் மறைமுகமாகவும் தொழிற்சாலைகளைப் பெருக்கி வேலைவாய்ப்புகளைப் பெருக்கவும் வழிவகை செய்கின்றது.

**தொடங்கிடு இந்தியா மற்றும் எழுந்திடு இந்தியா (Startup India& Standup India)**

இந்தியாவின் உந்து சக்தியாகக் கருதப்படும் இளைஞர்களின் புதிய சிந்தனைகளை, புத்தாக்க முயற்சிகளை அங்கீகாரம் செய்யும் வகையில் தொழில் துறையில் இளைஞர்களுக்கு வாய்ப்பு,

தொழில்முனைவுகளுக்கான உதவிகள், புதிய தொழில் வாய்ப்புகளை உருவாக்கித் தருதல், அதற்கான நிதி வசதிகள், தொழில்நுட்ப ஆலோசனை வழங்குதல் ஆகியவற்றை இலக்காகக் கொண்டு இத்திட்டம் செயல்படுத்தப்படுகின்றது. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்களில் ஈடுபட்டுள்ள இளைஞர்கள் பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ரீதியாக வலுவடைவதோடு புதிய வேலைவாய்ப்புகளும் உருவாக்கப்படுகின்றன.

**பண்டிட் தீன்தயாள் உபாத்யாய் கிராமப்புற திறன் மேம்பாட்டுத் திட்டம்**

ஊரகப் பகுதிகளில் வாழும் இளைஞர்களிடையே திறன் பயிற்சி பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தி அவர்களின் ஒட்டுமொத்த ஆதரவுடன் திறமைக்கேற்ற வேலைவாய்ப்பை உருவாக்கித் தருவதற்கான முயற்சிகளை இத்திட்டம் மேற்கொள்கின்றது. இத்திட்டத்தின் கீழ் ஏறத்தாழ 10 இலட்சம் கிராமப்புற இளைஞர்கள் அதிலும் குறிப்பாக வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள ஏழைகள், விளிம்பு நிலை மக்கள், தாழ்த்தப்பட்டவர்களுக்குத் தேவையான பயிற்சிகளை வழங்கி வேலைவாய்ப்பைப் பெருக்கும் நடவடிக்கையும் மேற்கொள்ளப்படுகின்றது.

இவ்வாறு எண்ணற்ற திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வரும் சூழ்நிலையில் 2017 2018 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் இளைஞர்கள் மேம்பாட்டிற்காக பல்வேறு சிறப்பம்சங்கள் அறிவிக்கப்பட்டன. அவற்றுள் சில:

- ❖ 3 கோடி இளைஞர்களுக்குத் திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளித்தல்
- ❖ வெளிநாட்டு மொழிக் கல்வி கற்றுத் தர நடவடிக்கைகள்
- ❖ இளைஞர்களின் வருடாந்திரக் கற்றலை அளவிடப் புதிய முறை
- ❖ மாணவர்கள் புதுமை படைக்கும் வகையில் பாடத்திட்டம் மாற்றியமைத்தல்
- ❖ தேவைப்படும் துறைகளில் போதுமான வேலைவாய்ப்புகளை உருவாக்குதல்
- ❖ இளைஞர் நலன், வேலைவாய்ப்பிற்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்தல்
- ❖ திறன் சார் பணியாளர்களை தேவையான அளவில் உருவாக்குதல்
- ❖ புதிதாக திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவோர் அமைச்சகம் ஏற்படுத்துதல்
- ❖ நிலையான வாழ்வாதாரம் கிடைத்திடும் வகையில் திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவோருக்கான ஒருங்கிணைந்த தேசியக் கொள்கை உருவாக்குதல்
- ❖ திறன் நடவடிக்கைகளின் ஒருங்கிணைப் பிற்கான தேசியத் திறன் மேம்பாட்டு இயக்கம் ஏற்படுத்துதல்
- ❖ இளைஞர்களுக்கான தேசியத் திறன் தகுதிக் கட்டமைப்பு ஏற்படுத்துதல்
- ❖ உள்ளூர் அளவில் திறன் மேம்பாட்டு மையங்கள் அமைத்தல்
- ❖ தேசிய அளவில் வேலைவாய்ப்பு மையங்கள் அமைத்தல்
- ❖ தற்காலச் சூழலுக்கேற்ப இளைஞர் மேம்பாட்டிற்கான புதிய முயற்சிகள், புத்தாக்கச் செயல்களை வெளிப்படுத்துதல்

எதிர்காலத் தலைமுறையின் தூண்களாகக் கருதப்படும் இளைஞர்கள் சமூகம், மக்கள், நாடு ஆகியவற்றின் மீது அக்கறையுடனும் ஈடுபாட்டுடனும் செயல்பட்டால் சமூகச் சீர்கேடுகள் குறைந்து வளர்ச்சிக்கான நேர்மறைச் சூழல் உருவாகும். இளைஞர்கள் தங்களது தனித் திறன்களை தயக்கமின்றி வெளிப்படுத்தி வளர்ச்சிக்கான சூழலை உருவாக்கிடவும் அதனைத் தொடர்ந்து ஆக்கப்பூர்வமான வழிகளில் பாதுகாத்திடவும் சில மேம்பாட்டு நடவடிக்கைகள் அவசியமாகின்றன. அவை:

- ✓ இளைஞர்களை இலக்கு சார்ந்த செயல்பாடுகளில் ஈடுபட வைத்தல்
- ✓ வளர்ச்சியை முன்னெடுக்கும் சமூக நிகழ்வுகளில் பங்கேற்கச் செய்தல்
- ✓ மாற்றங்களை முன்னெடுக்கும் கல்வியை வழங்குதல்
- ✓ சரியான முடிவுகளைப் பின்பற்றிட வலியுறுத்துதல்
- ✓ பாரபட்சமின்றி செயல்பட அறிவுறுத்துதல்
- ✓ சுய கட்டுப்பாடு, ஒருங்கிணைந்த செயல்பாடு,புரிந்து செயல்படுதல் போன்ற திறன்களை வளர்த்தல்
- ✓ சமூகம் மற்றும் வளர்ச்சியின் பரிமாணங்கள் பற்றிய புரிதலை உருவாக்குதல்
- ✓ புத்தாக்க முயற்சிகளுக்குத் தேவையான களம் அமைத்துத் தருதல்

இன்றைய இளைஞர்களைப் பண்படுத்தும் பணியை குறிப்பிட்ட சிலருக்கு ஒதுக்கிவிட்டு மற்றவர்கள் வேடிக்கை பார்க்க இயலாது. நம் பங்கிற்கு ஏதாவது செய்ய வேண்டும் என்பதை நாம் ஒவ்வொருவரும் உணர்ந்து செயல்பட வேண்டும். உலக நாகரிகத்தின் சிகரத்தைத் தொட்ட ரோமானியப் பேரரசின் வீழ்ச்சிக்கான காரணங்களாக இளைஞர்கள் ஆடம்பரங்களிலும் கேளிக்கைகளிலும் மூழ்கி அறிவுசார் சிந்தனைகளையும் உழைப்பையும் இழந்ததுதான் என்று வரலாறு சுட்டுகின்றது. எனவே தற்காலச் சூழலில் இளைஞர் சக்தி எந்த நிலையில் இருக்கின்றது? எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றது? என்பதில் அனைவரும் கவனமாக இருக்க வேண்டும்.

நாட்டின் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு இளைஞர்கள் தங்களின் தனித் திறன்களை இழந்துவிடாமலும் அல்லது தவறான வழிகளில் பயன்படுத்தி விடாமலும் இருக்கும் வகையில் திறன் மேம்பாடு மற்றும் முறையான கண்காணிப்பு தொடரும் பட்சத்தில் அவர்கள் வளர்ச்சிக்கான மாற்று சக்திகளாக அடையாளம் காணப்பட்டு திறன்மிகு இந்தியா மட்டுமல்ல வல்லரசு இந்தியாவை, வளர்ந்த இந்தியாவை உருவாக்க முடியும். அதற்கு அரசுகள், மக்கள், சமூக அமைப்புகள் மற்றும் இளைஞர் மேம்பாட்டு இயக்கங்கள் ஆகியவை ஒருங்கிணைந்து செயல்படுவது அவசியமாகும்.

●

# உலகம் முழுவதும் பரவியுள்ள இந்திய இளைஞர்கள்

- டாக்டர் ஷீத்தல் சர்மா, தில்லி ஜவகர்லால் நேரு பல்கலைக்கழக ஐரோப்பிய ஆய்வு மையத்தின் உதவிபேராசிரியர்
- பாஸ்கர் ஜோதி, தில்லி ஜவகர்லால் நேரு பல்கலைக்கழக ஐரோப்பிய ஆய்வு மையத்தின் முனைவர் பட்ட ஆய்வாளர்

பன்னெடுங்காலமாகவே உலகம் முழுவதிலும் இந்திய ஞானம், நாகரிகம் மற்றும் கலாச்சாரத்திற்கு கொடியை உயர்த்திப் பிடிப்பவர்களாக இந்திய இளைஞர்கள் உள்ளனர். உலகம் முழுவதும் உள்ள மக்கள் தங்களது மதம் மற்றும் இனம் தான் உயர்ந்தது என்ற கோட்பாட்டில் மூழ்கி இருந்த போது இந்தியாவைச் சேர்ந்த இளம் துறவியான சுவாமி விவேகானந்தர் கடந்த 1893ஆம் ஆண்டு அமெரிக்கா சென்று அங்கு சிகாகோ நகரில் நடைபெற்ற சர்வ மத மாநாட்டிற்குச் சென்று அங்கு மத சகிப்புத்தன்மையின் முக்கியத்துவம் பற்றிப் பேசி பெரும் பாராட்டினைப் பெற்றார். ஒரு இளம் வழக்கறிஞராக தென் ஆப்பிரிக்காவுக்கு பயணம் மேற்கொண்ட மகாத்மா காந்தி, அங்கு முதல் முறையாக தனது சிந்தனைகளாக விளங்கிய உண்மை மற்றும் சகிப்புத் தன்மையை சோதித்துப் பார்க்க பின்னர் அவை உலகின் அமைதி மற்றும் நல்லிணக்கத்திற்கான வெல்ல முடியாத ஆயுதமாக மாறிவிட்டன. மனித குலத்தால் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்றை உலகத்திற்கு வெளிநாட்டுக்கே சென்று உணர்த்திய இந்தியாவின் முதலாவது மனிதர் காந்தி என நம்பப்படுகிறது. இந்தியச் சிந்தனைகள் மற்றும் மதிப்புகளை உலகம் முழுவதற்கும் சென்று பரப்பும் பாரம்பரியம் 2ஆம் நூற்றாண்டில் தொடங்கியது. மௌரியப் பேரரசாகத் திகழ்ந்த அசோகரின் இளம் மகன் மற்றும் மகள் இலங்கைக்குச் சென்று அங்கு முதன்முறையாக தெற்காசியாவில் புத்த மதத்தைத் தோற்றுவித்தார்கள். இத்தகைய உணர்வுகொண்ட இளைஞர்களின் மரபு இன்றளவும் தொடர்ந்து திறன் கொண்ட இலட்சக்கணக்கான இந்திய இளைஞர்களால் உலகின் மூலை முடுக்குகளில் எல்லாம் இருந்து வருகிறது.

**புலம்பெயர்ந்த இந்தியர்கள்: ஒரு இளம் படை**

சர்வதேச அளவில் புலம்பெயர்ந்தவர்களின் சராசரி வயது 39 ஆண்டுகளாக உள்ளது என்று ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச புலம்பெயர்வு அறிக்கை 2015 கூறுகிறது. இந்தியா உலகின் அதிகமான இளைஞர்கள் கொண்ட நாடாகத் திகழ்வதால் இந்தியாவில் இருந்து உலகம் முழுவதும் குடிபெயர்பவர்கள் இளம் வயதினராகவே உள்ளனர். இந்தியாவில் இருந்து வெளிநாடுகளுக்கு புலம்பெயர்ந் தவர்களின் எண்ணிக்கை 2.5 கோடியாக உள்ளது. 2015ஆம் ஆண்டு ஐ.நா.வின் பொருளாதார மற்றும் சமூக விவகாரங்கள் துறை நடத்திய ஓர் ஆய்வின்படி, இந்தியாவில் இருந்து புலம்பெயர்ந்தவர்களின் எண்ணிக்கை தான் உலகில் மிக அதிகமாக உள்ளது என்று தெரிகிறது. இந்தியப் புலம்பெயர்ந்தொர் குறிப்பிட்ட பூலோக நோக்குநிலையைக் கொண்டுள்ள போதிலும், உலகின் சில சிறிய நாடுகள் மற்றும் புதிய நாடுகளிலும் இந்தியர்கள் இருப்பதைக் காணமுடிகிறது. உதாரணத்திற்கு தெற்கு சூடானில் 100க்கும் குறைவான எண்ணிக்கையில் இந்தியர்கள் வசிக்கின்றனர். அமெரிக்காவில் மட்டும் வெவ்வேறு விதமான விசா மற்றும் குடியுரிமைகளுடன் சுமார் 32 இலட்சம் இந்தியர்கள் உள்ளனர். அமெரிக்காவுக்கு அடுத்தபடியாக வளைகுடா நாடுகள் இந்தியர்களால் அதிகம் விரும்பப்படும் இடமாக உள்ளது. வளைகுடா நாடுகள் மொத்தம் 70 இலட்சம் இந்தியர்களைக் கொண்டுள்ளது. உலகம் முழுவதும் புலம்பெயர்ந்துள்ள இந்தியர்களின் விரிவாக்கத்தில் ஒரு உள்ளார்ந்த காலனித்துவ மரபு உள்ளது, என்பதால் இந்தப் பரவலுக்கான வடிவமைப்பு அம்சங்கள் குறித்து சிறிய ஆய்வு மேற்கொள்ளப்படுவது அவசியமாகிறது. காலனித்துவ ஆட்சியில் வெளி உலகத்துடன் இந்தியாவின் உறவுகள் பெரிதும் பிரிட்டிஷ் ஆர்வத்துடன் வடிவமைக்கப்பட்டதால், பிரிட்டிஷ் அரசால் ஆட்சி செய்யப்பட்ட இத்தகைய நாடுகளில் இந்தியர்கள் குறிப்பிடத்தக்க அளவுக்கு உள்ளனர். எனவே ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, ஃபிஜி, மேற்கிந்தியா மற்றும் கிழக்கு ஆப்பிரிக்க ஆகிய நாடுகளில் இந்தியப் புலம்பெயர்ந்தோர் குறிப்பிடத்தக்க அளவு அதிக எண்ணிக்கையில் இருப்பதில் ஆச்சரியம் எதுவும் இல்லை பிரிட்டிஷ் ஆட்சியின்போது இந்தியர்கள் அதிக அளவில் குடிபெயர்ந்ததற்கு வாய்ப்புகளை விட தயக்கமே முக்கியமாக இருந்தது. அதன்படி புலம்பெயர்ந்தவர்களில் அடிமைத் தொழிலாளர்கள், படை வீரர்கள், மாலுமிகள், லஸ்கர்கள் மற்றும் ஆயாக்கள் அதிக அளவில் இருந்ததுடன் இளைஞர்களாகவும் இருந்தனர் என்பதால் அவர்களுக்கு தாங்கள் குடியேறிய நாடுகளில் உள்ள வாய்ப்புக்களைப் பயன்படுத்திக் கொண்டு தங்களது வாழ்க்கையை வடிவமைத்துக்கொள்ளும் சுதந்திரம் அளிக்கப்படவில்லை. அடுத்த கட்டத்தில் புலம்பெயர்ந்தவர்களில் இந்திய மாணவர்கள், சட்டம் படித்தவர்கள் மற்றும் வர்த்தகர்கள் இருந்தனர். அவர்கள் இலண்டனிலும் அதன் காலனியாதிக்கத்தில் இருந்த நாடுகளிலும் தங்கி சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு தங்களால் இயன்ற ஊக்கத்தை அளித்தனர். அந்த வகையில் ஷியாம் கிருஷ்ண வர்மா என்ற பாரிஸ்டர் பட்டம் பெற்றவர் பிரிட்டனில் குடியேறி, புகழ்பெற்ற ஆக்ஸ்ஃபோர்ட், பிரிட்ஜ் பல்கலைக்கழகங்களில் சேர்ந்து நவீன அறிவியல் பயில விரும்பிய ஆற்றல்மிக்க இளைஞர்களுக்கு உதவும் வகையில் இந்திய ஹவுஸ் என்ற இல்லத்தைத் திறந்தார். திறமைமிக்க

இளைஞர்களுக்கு அவர் கல்வி பயில ஊக்கத்தொகையும் அளித்தார். சாவர்க்கர், மதன் பிகாஜி காமா, மதன்லால் திங்ரா போன்ற துடிப்பான இளைஞர்கள் மற்றும் புரட்சியாளர்கள் லண்டனில் உள்ள இந்தியா ஹவுஸ் உடன் நெருக்கமான தொடர்பு கொண்ட சில பிரபலமானவர்கள் ஆவர். அவ்வாறு இளம் மாணவர்கள் அடங்கிய படை பிரிட்டிஷ் கொடுங்கோள் ஆட்சியின் கொடுமைகள் பற்றி பிரிட்டனின் பல்வேறு இடங்களில் எடுத்துக்கூறினார்கள். இந்திய இளைஞர்களின் நரம்பு மண்டலமாகவே இலண்டன் மாறியது. பின்னர் பாரிசில் குடியேறிய மேடம் காமா இந்தியர்களின் இருப்பைப் பரவலாக்கினார். இதேபோல் இளம் புரட்சியாளர்கள் சிலர் அமெரிக்காவிலும் கனடாவிலும் கடர் இயக்கத்தைத் தொடங்கி, இந்த நாடுகளையும் தொடர்பு மற்றும் வழக்கமான பரிவர்த்தனை களுக்கான முக்கிய மையங்களாக மாற்றினார்கள்.

காலனியாதிக்கம் முடிவுக்கு வந்த பிறகு தான் இந்தியப் புலம் பெயர்வின் மிகவும் குறிப்பிடத்தக்க கட்டத்தைத் தொடங்கியது. இந்தியாவில் ஐ.ஐ.டிக்கள் போன்ற உயர் கல்விக்கான தரமான பயிற்சி நிறுவனங்கள் திறக்கப்பட்டது வளர்ந்த நாடுகளான மேற்கு ஐரோப்பியா மற்றும் வடக்கு அமெரிக்காவில் வாய்ப்புக்களைப் பெறுவதற்கான வாய்ப்புகளை திறமை கொண்ட இளம் தொழில்நுட்பப் பட்டதாரிகளுக்கு அளித்தது. அவர்களது திறமைகளை அங்கீகரித்த இந்த நாடுகள் அவர்களுக்கு வெளிநாட்டு கரன்சியில் ஊதியம் அளித்தது. இதன் காரணமாக அவர்களில் சிலர் பிரிட்டன் மற்றும் அமெரிக்காவில் நிரந்தரமாகவே குடியேறி விட்டனர்.


**உலகமயமாக்கல்: அதிகப் புலம்பெயர்தலுக்கு பின்னணியில் உள்ள ஈர்ப்பு சக்தி**

இந்தியாவில் தாராளமயமாக்கலின் இறுதிக் கட்டத்தில் திறன் பெற்ற இளம் இந்தியர்களுக்கு பெரும் வாய்ப்புக்களை உருவாக்கிக் கொடுத்தது. வளர்ந்த நாடுகளில் அதிகரித்து வரும் உற்பத்தி மற்றும் தொழிலாளர் செலவுகள் அந்த நாடுகள் மலிவான மாற்று ஏற்பாடுகளைத் தேடும் நிலைக்குத் தள்ளிய போது, இந்திய நிலங்கள் மற்றும் தொழிலாளர்கள் அவர்களின் தேவைகளுக்குக் கை கொடுத்தது. பெரும் அமெரிக்கத் தொழில் நிறுவனங்கள் அமெரிக்க தொழில்நுட்பவாதிகளுக்கு இணையான ஆனால் அதே நேரத்தில் மலிவான திறன்பெற்ற இந்திய தொழில்நுட்பவாதிகளைப் பணியமர்த்தியது. இது அமெரிக்க நிறுவனங்கள் தங்களது செலவுகளைக் குறைத்து லாபத்தை அதிகரித்துக் கொள்ள உதவியதுடன் வேலையற்ற இளம் தொழில்நுட்பப் பட்டதாரிகளுக்கு மரியாதை அளிக்கக்கூடிய வேலைவாய்ப்பை அளித்து இரு நாடுகளுக்கும் நன்மை தரும் பயன்களை அளித்தது.

**சிலிகான் வேலி: வெற்றிகரமான இந்தியத் தொழில்முனைவோரின் கதை**

1960இல் அமெரிக்காவில் 12,000 இந்தியப் புலம்பெயர்ந்தோர் மட்டுமே இருந்தனர். அவர்களில் பெரும்பாலானவர்கள் திறன் அற்ற தொழிலாளர்கள், அல்லது குறைவான திறன் கொண்ட படிப்பறிவற்ற விவசாயத் தொழிலாளர்களாக இருந்தனர். எனினும் அமெரிக்கக் குடியேற்ற சட்டம் 1990இல் செய்யப்பட்ட நேர்மறையான மாற்றங்கள், உயர் திறன் கொண்ட இளைஞர்கள் மற்றும் படித்த இந்தியர்களை அமெரிக்கவுக்குள் ஈர்த்தது. 19802013 காலக்கட்டத்தில் திறன்பெற்ற இந்தியர்களின் எண்ணிக்கை 2,06,000 என்ற அளவில் இருந்து 20,04,000 ஆக அதிகரித்து, ஒவ்வொரு பத்தாண்டுகளிலும் இந்த எண்ணிக்கை இரட்டிப்பாகியது. இன்று தற்காலிக உயர் திறன் பணியாளர்ஹெச் 1பி விசாவை அதிக எண்ணிக்கையில் பெறுபவர்கள் இந்தியக் குடிமக்களாக உள்ளனர். 2014ஆம் நிதியாண்டில் அமெரிக்க குடியுரிமை மற்றும் குடியேற்ற சேவைகள் ஒப்புதல் அளித்த 3,16,000 ஹெச் 1பி மனுக்களில் 70 சதவிகிதம் இந்தியர்களுடையது. 2013-14 பள்ளி ஆண்டில் 1,03,000 இந்தியாவில் பிறந்த மாணவர்கள் அமெரிக்க கல்வி நிலையங்களில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளன. அமெரிக்க மக்கள்தொகை அலுவலகத்தின் வருடாந்திர அறிக்கையின்படி அமெரிக்காவில் வசிக்கும் இந்தியர்களின் சராசரி வயது 39 ஆக உள்ளது என்றும் அமெரிக்காவில் உள்ள இந்தியர்களில் 83% பேர் ஏதேனும் ஒரு அறிவுசார் அடிப்படையிலான துறைகளில் ஈடுபட்டிருப்பதாகவும் தெரிகிறது. மொத்தம் குடியேறியவர்களில் 11% மட்டுமே 65 மற்றும் அதற்கு மேல் வயதுடையர்களாவர்.

இந்தியாவில் இருந்து குடியேறியவர்கள் அமெரிக்கர்களின் கல்வித் தரத்தை விஞ்சி உயர் மட்ட கல்வி பெற்றவர்களாக உள்ளனர். 2015ஆம் ஆண்டில் பட்டம் மற்றும் அதற்கு மேல் படிதத்வர்களின் எண்ணிக்கை உள்நாட்டில் பிறந்தவர்களிடையே 30% ஆக இருக்கையில் இந்தியாவில் இருந்து குடியேறியவர்களில் (25 மற்றும் அதற்கு கூடுதலான வயதுடையோர்) 82% பேர் பட்டம் அல்லது அதற்கு மேல் படித்தவர்களாக உள்ளனர்.




Source:- Report US Census Bureau 2013.

மென்பொருள் மற்றும் தொழில்நுட்பங்கள் மற்றும் புதிய நிறுவனங்களுக்கான பெரும் உலகளாவிய தொகுப்பாகத் திகழும் அமெரிக்காவின் சிலிகான் வேலி கடந்த பல ஆண்டுகளாகவே இந்திய முகங்களையே விரும்பித் தேர்வு செய்கிறது. கூகுள், மைக்ரோசாஃப்ட், ஏ.எம்.டி., அடோப் போன்ற சிலிகான் வேலியில் உள்ள பெரும் மென்பொருள் நிறுவனங்களில் சில அதன் முதன்மைச் செயல் அதிகாரிகளாக இந்தியர்களையே நியமித்துள்ளது. ஃபேஸ்புக், மோடோரோலா, ரெகிட் பென்கைசர், மாஸ்டர் கார்டு போன்ற இதர பெரிய நிறுவனங்கள் முக்கிய உலகளாவிய வர்த்தக விவகாரங்களைக் கையாள இந்திய நிர்வாகிகளையே கொண்டுள்ளன. இந்தியப் பொறியாளர்களின் ஈடிணையற்ற திறன் மற்றும் மானோபலம் அவர்களுக்கு அமெரிக்கா முழுவதும் பாராட்டுக்களைப் பெற்றுத் தந்துள்ளது.

**ஆக்ஸ் பிரிட்ஜ் மற்றும் லண்டன்: எப்போதும் இருக்கும் இந்தியக் கனவு**

பிரிட்டனுடனான இந்தியாவின் உறவுகளோ எப்போதுமே அதற்கு முன் இல்லாததாகவே இருந்துள்ளது. காலனியாதிக்கத்தின் கசப்பான பழைய நினைவுகளைப் புறந்தள்ளிவிட்டுப் பார்க்கையில் இந்தியா, பிரிட்டன் இரண்டுமே ஒன்றையொன்று கட்டித்தழுவி, ஒருவருக்கொருவர் அதன் வளர்ச்சிக்கான பங்குதாரர்களாகத் திகழ்கின்றனர். பிரிட்டனில் சுமார் 20 இலட்சம் பிரிட்டிஷ் இந்தியக் குடிமக்கள் பிரிட்டனின் பல்வேறு பகுதிகளில் குடியேறி வசித்து வருகின்றனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் இளைஞர்களாகவும் மூன்றாவது தலைமுறை குடியேறிகளாகவும் இருப்பதுடன், தொழில்முனைவோராக, வர்த்தகர்களாக, தொழில்நுட்ப நிணர்ற்களாக, நிர்வாகிகளாக, மருத்துவர்களாக உயர் மதிப்புள்ளவர்களாகத் திகழ்கின்றனர். இளம் இந்தியர்கள் பலர் தங்களை பிரிட்டிஷ் அரசியல் சமூக கலாச்சாரத்தில் இணைத்துக்கொண்டு, தேர்தல்களில் போட்டியிடுவதுடன், அந்த நாட்டின் அரசியல் நடைமுறைகளில் தீவிர பங்களிப்பைக் கொண்டு இருக்கின்றனர். சாதனை எண்ணிக்கையாக 10 இந்திய வம்சாவளி போட்டியாளர்கள் 2015ஆம் ஆண்டு பிரிட்டன் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றுள்ளனர் என்பதுடன் இவர்களில் பெரும்பாலானவர்கள் இளைஞர்களாவர். கன்சர்வேடிவ் கட்சியைச் சேர்ந்த 45 வயதான பிரீத்தி படேல் கேமரூன் அரசில் அமைச்சராக ஆக்கப்பட்ட முதல் பிரிட்டிஷ் இந்தியப் பெண்மணியாவார்.

**வளைகுடா நாடுகள் மற்றும் மலேசியா**

இந்தியாவில் இருந்து சமகால புலம்பெயர்வு பிரதானமாக இரண்டு வகையாக உள்ளது. அதிகத் திறன் பெற்ற தொழில் நிபுணர்கள், பணியாளர்கள் மற்றும் மாணவர்கள் அதாவது கௌரவமான பணிகளை நாடி புலம்பெயர்வோர் வழக்கமாக அமெரிக்கா, பிரிட்டன், ஆஸ்திரேலியா, கனடா மற்றும் நியூசிலாந்து ஆகிய நாடுகளுக்கு புலம்பெயர்வது முதல் வகை. எனினும் திறன் குறைந்த மற்றும் திறனற்ற தொழிலாளர்கள் வளைகுடா நாடுகள் மற்றும் மலேசியா போன்ற நாடுகளுக்குப் புலம்பெயர்வதையே வழக்கமாகக் கொண்டுள்ளனர். ஐரோப்பா மற்றும் வடக்கு அமெரிக்காவுக்கு புலம் பெயரும் நடுத்தர வயதினரைவிட இந்த நாடுகளுக்கு புலம்பெயரும் நடுத்தர வயதினரின் எண்ணிக்கை குறைவாகவே உள்ளது. மேற்காசிய நாடுகளில் எண்ணெய் வளம் அதிகரிக்கத் தொடங்கிய பின்னரே இந்த நாடுகளுக்கு அதிக எண்ணிக்கையிலான புலம் பெயர்வுகள் தொடங்கியது. வளைகுடா நாடுகளில் இந்தியர்களின் எண்ணிக்கை 60 இலட்சமாக உள்ளது. இவ்வாறு புலம்பெயர்ந்தவர்களில் 90% பேர் வெளிநாடு வாழ் இந்தியர்களாகவே உள்ளனர் (என்.ஆர்.ஐ.). அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் கனடாவைப் போல் இன்றி, வளைகுடா நாடுகள் மிக அரிதாகவே இந்தியாவில் இருந்து வருபவர்களுக்கு நிரந்தரப் பணி விசாக்களை அளிக்கிறது. இங்கு பணிகள் பிரதானமாக கட்டுமானம் அல்லது உடல் உழைப்பாக இருப்பதால், குறிப்பிட்ட வயதுக்குப் பிறகு வேலை செய்யும் திறன் குறைந்து விடுவதால், இத்தகைய நாடுகளில் வயதானவர்கள் மிகக் குறைவான எண்ணிக்கையில்தான் விரும்பப்படுகிறார்கள். சவூதி அரேபியா, ஐக்கிய அரபு எமீரகம் மற்றும் கத்தார் போன்ற நாடுகளில் சில ரியல் எஸ்டேட் தொழில்முனைவோர் வெற்றியை ருசித்துள்ள போதிலும், பெரும்பாலான இந்தியத் தொழில்முனைவோருக்கு இந்த நாடுகளில் பிரகாசமான வாய்ப்புகள் கிட்டவில்லை. தென்னிந்திய மாநிலமான கேரளாவைச் சேர்ந்தவர்கள் வளைகுடா நாடுகளில் அதிக எண்ணிக்கையில் பணியாற்றி வருகின்றனர். வளைகுடா நாடுகளில் உள்ள சிறப்பு மருத்துவமனைகளில் கேரள இளம் பெண்கள் செவிலியர்கள் மற்றும் மருத்துவமனை உதவியாளர்களாக பணியாற்றுகின்றனர். இந்த நாடுகளில் குடியேறியுள்ள இந்தியர்கள் பலர் இந்தியக் கலாச்சாரத்தையும் பாலிவுட் படங்களையும் பிரபலமடையச் செய்துள்ளனர்.

**அறிவாற்றல் பற்றாக்குறை அல்லது கலாச்சாரத் தூதுவர்:**

உலகின் பல்வேறு பகுதிகளில் வாழும் புலம்பெயர்ந்த இந்தியர்களிடம் இருந்து இந்தியா சுமார் 70 பில்லியன் டாலர் பெறுகிறது. உலகின் எந்தவொரு நாடும் பெறும் அதிகமான தொகை இதுதான் என்பதுடன் கேரளா பெறும் தொகையைக் கொண்டே இதன் மதிப்பைப் புரிந்து கொள்ள முடியும். கேரளாவில் இருந்து வளைகுடா நாடுகளுக்குச் சென்றவர்கள் தங்கள் குடும்பத்தினருக்காக அங்கு செலுத்தும் தொகை கேரளாவின் நிகர உள்நாட்டு உற்பத்தில் 36% ஆக உள்ளது. கடந்த பல ஆண்டுகளாக இந்தியாவில் இருந்து வெளிநாடுகளுக்குச் சென்றவர்கள் இந்தியாவின் ஞானம், கலாச்சாரம் மற்றும் மத்புகள் மற்றும் நாகரிகம் ஆகியவற்றை உலகம் முழுவதும் பறைசாற்றி

உள்ளனர். தாங்கள் சார்ந்திருக்கும் துறைகளில் கூர்மையான அறிவாற்றலுக்கு சொந்தக்காரர்கள் என்ற பெருமையை அவர்கள் பெற்றது மட்டுமின்றி, இந்திய இளம் திறனாளின் புகழையும் உயர்த்தியுள்ளனர். இந்தியாவுக்கு முன்பு இருந்த பாம்பாட்டிகளின் நிலம் என்ற எண்ணத்தை இந்தியாவை ஒரு மாற்று மற்றும் வலிமையான நாடு என்ற எண்ணத்தை உருவாக்க உதவியுள்ளனர். இதன் மூலம் வெளிநாடுகளுக்குப் புலம்பெயர்ந்தவர்கள் மூலம் இந்தியா கலாச்சார ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் பயனடைந்தது.

எனினும் அதிக எண்ணிக்கையிலான நன்கு பயிற்சி பெற்ற இந்தியர்கள் வெளிநாடுகளுக்குப் புலம் பெயர்ந்ததால், இயல்பாகவே இந்தியாவில் அறிவாற்றல் பற்றாக்குறையை ஏற்படுத்தியது. 2010ஆம் ஆண்டில் இந்தியா மற்ற நாடுகளுக்கு 60,000 பயிற்சிபெற்ற இளம் மருத்துவர்களை அனுப்பி வைத்து முதலிடம் பெற்றது. அதிகம் பயிற்சி பெற்ற மருத்துவர்களை ஆங்கிலம் பேசும் ஓ.இ.சி.டி. நாடுகளுக்கு அனுப்பி வைத்தது இந்தியா. சுகாதார நிபுணர்களில் அதிக எண்ணிக்கையில் புலம் பெயர்ந்தது காரணமாக ஏற்கனவே மருத்துவர்கள் பற்றாக்குறை நிலவும் இந்திய கிராமப்புறங்களில் எதிர்மறைத் தாக்கம் ஏற்பட்டது. இந்தியாவில் இருந்து வெளிநாடுகளுக்கு சென்ற மருத்துவர்களின் விகிதம் 10% ஆக உள்ள நிலையில் சீனாவில் இருந்து வெளிநாடுகளுக்கு சென்றவர்களின் விகிதம் 1% ஆக மட்டுமே உள்ளது. 90% மரபணு பொறியியல் மற்றும் உயிரி தொழில்நுட்பம் ஆகியவற்றில் பயிற்சி பெற்ற நிபுணர்கள் தங்கள் படிப்பு நிறைவடைந்த உடனேயே அமெரிக்காவுக்கு சென்று விடுவதால், இந்திய ஆய்வகங்களும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி மையங்களும் தரமான ஆராய்ச்சியாளர்கள் இன்றி அவதிப்படும் நிலை உள்ளது.

**அதிக மக்கள்தொகை கொண்ட நாடு அதிக புலம்பெயர்ந்தவர்கள் நாடாகிறது**

பெரும்பாலான ஆசிய, ஐரோப்பிய மற்றும் வட அமெரிக்க நாடுகளின் மக்கள் விரைவில் வயது முதிர்ந்தோராக உள்ள நிலையில், இந்தியா மட்டும் 2025ஆம் ஆண்டில் உலகின் மிக இளமையான நாடாகத் திகழவுள்ளது. இந்தியர்களின் சராசரி வயது 25 ஆண்டுகளாக மட்டும் இருக்கும். 2020ஆம் ஆண்டில் உலகின் ஒட்டுமொத்த பணியாற்றும் மக்கள் தொகையில் இருபது சதவீதம் இந்தியாவைச் சார்ந்ததாகவே இருக்கும். ஏற்கனவே உலகின் அதிக புலம்பெயர்ந்தவர்கள் மக்கள் தொகையைக் கொண்டுள்ள இந்தியா, இந்தியப் புலம்பெயர்ந்தவர்களின் பணிபுரியும் கரங்களும் அதிகரிக்கும். இதன்படி அதிக மக்கள் தொகை கொண்ட நாடாக உள்நாட்டிலும், சர்வதேச அளவில் அதிக புலம்பெயர்ந்தோர் எண்ணிக்கையுடனும் இரட்டைப் பயன்களை இந்தியா பெறும். அனைத்து பெரிய நாடுகளிலும் இளம் இந்தியப் புலம்பெயர்ந்தோர் பரவி இருப்பது, இந்திய மென் ஆற்றலுக்கான ஒரு கருவியாக இருக்கும். வெளிநாடுகளுக்கு சென்ற இந்தியர்கள் அதிக அளவு தாய்நாட்டுக்காக பணம் அனுப்புவதால் மட்டுமின்றி, வெளிநாடுகளில் உள்ள இந்தியர்கள் மேற்கொள்ளும் வளர்ச்சி மற்றும் ஆராய்ச்சிப் பணிகள் மூலமாகவும் இந்தியா பயனடையும். எனினும் இந்தியப் புலம்பெயர்ந்தவர்கள் மேற்கொண்ட வளர்ச்சி மற்றும் ஆராய்ச்சிப் பணிகளை மீண்டும் தாய்நாட்டுக்குக் கொண்டு வருவதற்கான அர்ப்பணிக்கப்பட்ட முயற்சிகளை இந்திய அரசு எடுக்க வேண்டும். உலகம் முழுவதும் சென்ற சீனர்கள் பெரும்பாலானவர்கள் ஒரு கட்டத்தில் அதிக அளவில் இருந்த போதும், வெற்றிகரமான சீன தொழில்முனைவோர் தங்கள் தாய்நாட்டுக்குத் திரும்பி, உள்நாட்டு புதிய தொழில்கள், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி ஆகியவற்றுக்குத் தேவையான ஊக்கத்தை அளித்தனர். ஆனால் இந்தப் போக்கு இந்திய புலம்பெயர்ந்தோரிடையே காணப்படவில்லை. அறிவாற்றல் இலாபத்திற்காக அர்ப்பணிக்கப்பட்ட சில திட்டங்கள் பற்றிப் பார்ப்போம்:

**1) பிரவாசி பாரதிய திவஸ் (வெளிநாடு வாழ் இந்தியர் தினம்)**

வெளிநாடுகளில் வாழும் இந்தியர்களின் சாதனைகளைக்கொண்டாடவும் அவர்கள் வசிக்கும் நாடுகள் மற்றும் இந்தியா இடையிலான இணைப்பை ஏற்படுத்திக் கொள்ளும் அவர்களது முயற்சிகளுக்கு உதவவும் வசதி ஏற்படுத்திக் கொடுக்கவும் ஆண்டுதோறும் நடத்தப்படும் வருடாந்திர சந்திப்பு நிகழ்ச்சி. வெளிநாடு வாழ் இந்தியர்கள் இந்தியாவில் முதலீடு செய்யும் வகையில் அவர்களது நம்பிக்கையை அதிகரிக்கும் வகையில் இந்தியாவின் வளர்ச்சி மற்றும் மேம்பாட்டு அம்சங்களை எடுத்துரைக்கும் மேடையாகவும் வெளிநாடு வாழ் இந்தியர்கள் தினம் பயன்படுத்தப்படுகிறது.

**2) பி.ஐ.ஓ மற்றும் ஓ.சி.ஐ. அட்டைகள் இணைப்பு**

இந்திய வம்சாவளியினர் (பி.ஐ.ஓ.) மற்றும் வெளிநாட்டில் குடியேறிய இந்தியர்கள் (ஓ.சி.ஐ.) அட்டைகள் இணைப்பு நடவடிக்கை இந்திய வம்சாவளியினர் சிக்கல் எதுவும் இன்றி இந்தியாவுக்கு வருகை புரியவும், அடிக்கடி காவல் நிலையத்திற்கு செல்ல வேண்டியதைத் தவிர்த்து அவர்கள் நீண்ட காலம் இந்தியாவில் தங்கியிருப்பதை உறுதிப்படுத்தவும் மேற்கொள்ளப்படுகிறது.

**3) இளம் வெளிநாடு வாழ் இந்தியர் தினம்**

இளம் இந்திய புலம் பெயர்ந்தோரின் முக்கியத்துவத்தை அங்கீகரித்து, இந்தியாவின் வளர்ச்சியுடன் அவர்கள் இணைப்பை ஏற்படுத்திக் கொள்ளவதன் அவசியம் காரணமாகவும், அரசு உலகின் பல பகுதிகளிலும் அதிகரித்து வரும் புதிய தலைமுறை இளைஞர்களுடன் இணைப்பை ஏற்படுத்திக் கொள்ளும் இந்தத் திட்டத்தைத் தொடங்கியுள்ளது.

**4) வெளிநாடு வாழ் இந்தியர் மையம்**

150க்கும் மேற்பட்ட நாடுகளில் வாழ்ந்து கொண்டிருக்கும் இந்தியப் புலம்பெயர்ந்தோர், இனி, வெளிநாடு வாழ் இந்தியர் மையம் என்றழைக்கப்படும் புதுதில்லியில் அமைந்துள்ள புதிய இல்லத்திற்கு வருகை தந்து அங்கே தங்க முடியும். அவர்கள் இங்கு தங்களது வேர்களைத் தேடுவது, முதலீட்டுக்கான ஆலோசனைகளைப் பெறுவது, உள்நாட்டு பயண முன்பதிவு, பெரும் அரங்கங்களில் நடக்கும் நிகழ்ச்சிகளில் பங்கேற்பது மற்றும் வர்த்தக சந்திப்புக்களை நடத்துவது ஆகியவற்றை மேற்கொள்ளலாம்.


**5) வஜ்ரா - இணைந்த கூட்டு ஆராய்ச்சி வசதியைப் பார்வையிடுவது**

அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தில் நாட்டின் வளர்ச்சிக்குப் பங்களிப்பதே இந்தத் திட்டத்தின் நோக்கம்.

**6) இந்தியாவை தெரிந்து கொள்ளுங்கள் திட்டம் (கே.ஐ.பி.)**

18 முதல் முதல் 26 வயது வரையிலான புலம்பெயர்ந்த இளம் இந்தியர்களுக்கு இந்தியாவைப் பற்றியும் அவர்களது முன்னோர்கள் குறித்தும் எடுத்துக்கூறி, அவர்கள் தங்களது கருத்துக்கள், எதிர்பார்ப்புக்கள், அனுபவங்கள் ஆகியவற்றைப் பகிர்ந்து கொண்டு, நவீன இந்தியாவுடன் தங்களது நெருக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள உதவுவதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.

அறிவாற்றல் இலாபம் மற்றும் மேக் இன் இந்தியா ஆகியவற்றுக்காக விடுக்கப்பட்ட அழைப்பு, உலகம் முழுவதும் தங்கி விட்ட இந்திய இளைஞர்களிடையே குறிப்பிடத்தக்க அளவுக்கு அதிர்வை ஏற்படுத்தியுள்ளது. அவர்கள் தாயகம் திரும்பி தங்களது மன, உடல் மற்றும் பொருளாதார நிபுணத்துவத்தை இந்தியாவில் முதலீடு செய்யத் திட்டமிட்டு வருகின்றனர். 2000 மாவது ஆண்டில் மும்பை மற்றும் தில்லி ஐ.ஐ.டி.யில் படித்த இளம் பட்டதாரிகளுக்கு சர்வதேச அளவில் வேலை பெறுவதற்கான வாய்ப்புகள் 100 சதவீதம் இருந்தது.




Source:- Times of India

இது இன்றளவும் தொடருகின்ற போதிலும், முன்னணி கல்வி நிறுவனங்களில் பயின்ற மாணவர்கள் வெளிநாடுகளுக்கு செல்வது தற்போது வெகுவாகக் குறைந்துள்ளது.

2016ஆம் ஆண்டில் வெளிநாட்டு வேலைகளுக்காக சென்ற மாணவர்களின் எண்ணிக்கையை மேலே உள்ள படம் காட்டுகிறது. 2012ம் ஆண்டு மும்பை ஐ.ஐ.டி.யிலிருந்து வெளிநாடு சென்றவர்களின் எண்ணிக்கை தனியாக கொடுக்கப்பட்டுள்ளது.

**நிறைவாக**

வெளிநாடுகளில் வாழும் இளம் இந்தியர்கள் இந்தியாவுக்கு குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் அளித்து வருகின்றனர். உயர் திறன் கொண்ட இந்தியர்களுக்கு பணி விசாக்கள் அளிக்கப்படுவதைக் குறைக்கப் போவதாக அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில் உள்ள அரசுகள் அறிவித்துள்ளன. இத்தகைய விசாக்களின் மூலம் அதிகம் பயனடைபவர்கள் இந்தியர்களாகவே உள்ளனர் என்பதால், இத்தகைய நடவடிக்கைகள் அவர்களது தொழில் வாய்ப்புகளில் தாக்கத்தை ஏற்படுத்துவது மட்டுமின்றி, இந்தியப் புலம்பெயர்ந்தோரின் தங்கும் மற்றும் குடியிருக்கும் அம்சங்களிலும் பாதிப்பை ஏற்படுத்தும். சவூதி அரேபியாவும் வெளிநாட்டினரிடம் இருந்து தங்களது உள்நாட்டுப் பணி வெளியைப் பாதுகாக்கும் நிடாகட் திட்டத்தை அறிமுகம் செய்துள்ளது. ஏமன், சூடான், கென்யா, அல்லது ஈராக் போன்ற நாடுகளில் போர் போன்ற பாதிப்புகள் ஏற்படும் போது இந்தியர்கள் சிக்கித் தவிக்கின்றனர். அவ்வாறு சிக்கிய தனது நாட்டு குடிமக்களை மீட்க இந்திய அரசு தனித்துவமான நிபுணத்துவத்தையும் திறனையும் காட்டிய போதிலும், பிரிவினைவாதிகளிடம் இருந்து தனது இளம் பணியாளர்களைப் பாதுகாக்க அர்ப்பணிக்கப்பட்ட மீட்புக் கொள்கை ஒன்று உருவாக்கப்பட வேண்டியது அவசியமாகிறது. குழப்பம் நிறைந்த ஜி.ஏ.ஏ.ஆர். நடைமுறைகள் வெளிநாடு வாழ் இந்திய முதலீட்டாளர்கள் இந்தியாவில் புதிய தொழில்களில் முதலீடு செய்வதைத் த்டுக்கிறது என்பதால், இந்த விதிகள் உரிய முறையில் விளக்கப்பட்டு எளிமைப்படுத்தப்பட வேண்டும். சர்வதேச அளவில் இருப்பது போலவே உள்நாட்டிலும் இளைஞர்கள் சொத்தாக உள்ளனர் என்பதால், நாடுகளின் தேவைக்கேற்ப அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுவதற்கு, பிரவாசி கவுசல் விகாஸ் திட்டம் போன்ற திட்டங்கள் அதிக அளவில் உருவாக்கப்பட வேண்டும்.

(டாக்டர் ஷீத்தல் சர்மா, ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில், ஐரோப்பிய கல்வி மையத்தின் உதவிப் பேராசிரியர். பாஸ்கர் ஜோதி இந்த மையத்தில் ஆராய்ச்சி மேற்கொள்பவர். பிரிட்டனில் இந்தியப் புலம்பெயர்ந்தோரின் அரசியல் பங்களிப்பு என்ற தலைப்பில் எம்.ஃபில் பட்டம் பெற்றவர்.)

●

# தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் இளைஞர்களுக்கான முயற்சிகள்

- ரவி போகர்ணா

ஆராய்ச்சி நிறுவனமான ராம்பாவ் மால்கி பிரபோதினியின் புதுதில்லி அலுவலகப் பொறுப்பாளர்

கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு முன், 1967ம் ஆண்டு மே மாதம் 18ம் தேதி ஒரு துரதிருஷ்டமான நாள் ஆனது. அன்றைய தினம் தான் நக்சல்பாரி என்ற கிராமத்தைச் சேர்ந்த சில தனி நபர்கள் நிலமற்ற மக்களுக்கு நிலங்களை மீட்டுக் கொடுக்க ஆயுதமேந்திய போராட்டம் நடத்தப்போவதாக வெளியிட்ட அறிவிப்புக்கு மேற்கு வங்க மாநிலத்தைச் சேர்ந்த சிலிகுரி கிஷன் சபா தனது ஆதரவைத் தெரிவித்தது. இப்படித்தான் நக்சல் இயக்கம் என கடந்த அழைக்கப்படும் இந்த இயக்கம் நாட்டில் உள்ள இதர மாநிலங்களுக்கும் பரவி ஆயுதமேந்தி வன்முறை மற்றும் கொடுஞ்செயல்களில் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது.

இத்தகைய வன்முறையால் பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சேர்ந்த இளைஞர்கள் பலர் பாதிப்புக்குள்ளான பகுதிகளில் ஒன்றும் புரியாத நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இதனை உணர்ந்து கொண்ட மத்திய அரசு இத்தகைய பகுதிகளில் வளர்ச்சித் திட்டங்களை சிறப்புக் கவனத்துடன் திட்டமிட்டு நடைமுறைப்படுத்தி வருகிறது. 34 மாவட்டங்களில் பாதிப்புக்களை ஏற்படுத்தும் சி.பி.ஐ.(எம்) இடதுசாரி தீவிரவாதம் தவிர வட கிழக்கு இந்தியாவின் சில பகுதிகள் மற்றும் ஜம்மு காஷ்மீர் ஆகிய இடங்களிலும் இந்த பிரிவினைவாத, தீவிரவாத நடவடிக்கை பாதிப்புக்களை ஏற்படுத்தி வருகிறது. தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்ட மூன்று மாநிலங்களிலும் இளைஞர்களுக்காக நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் அரசுத் திட்டங்களைப் பற்றி இந்தக் கட்டுரையில் விரிவாகப் பார்க்கலாம்.

அ. சி.பி.ஐ. (மாவோயிஸ்ட்) தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்ட சிவப்பு வழித்தடத்தில் உள்ள இளைஞர்களுக்கான அரசுத் திட்டங்கள்:

நக்சல் பிரச்சனையின் தாக்கம் நெடுங்காலம் முன்பே அரசால் உணரப்பட்ட போதிலும், 2009ஆம் ஆண்டில் தான், இடதுசாரி தீவிரவாதத்தின் வன்முறையை முழுமையான முறையில் எதிர்கொள்வதற்காக உள்துறை அமைச்சகத்தில் இடதுசாரி தீவிரவாத பிரிவு உருவாக்கப்பட்டது. மத்திய, மாநில அரசுகளின் பல்வேறு துறைகளுடன் ஒருங்கிணைத்து வளர்ச்சிப் பணிகள் மற்றும் முயற்சிகளை இந்தப் பகுதிகளில் மேற்கொள்ள வேண்டிய பொறுப்பும் இந்தப் பிரிவுக்கு உள்ளது. இதனைத் தொடர்ந்து கடந்த சில ஆண்டுகளில் அதிக ஒருங்கிணந்த, உறுதியான யுக்திகள் இந்தப் பிரச்சனைக்குத் தீர்வு காணும் வகையில் உருவாகியுள்ளது. இந்தப் புதிய ஒருங்கிணைந்த செயல் திட்டத்தின்படி ஆதிவாசிகளை பிரதான நீரோட்டத்தற்கு கொண்டு வரும் அதே நேரத்தில் வன்முறையை கடுமையாக எதிர்க்கவும் அரசு திட்டமிடுகிறது. இடதுசாரி தீவிரவாதத்துக்கு எதிராக குறுகிய கால இலக்குகளை எட்டவும் அரசு முடிவு செய்துள்ளது. இதனைத் தொடர்ந்து மாவட்ட அளவிலான வளர்ச்சி அணுகுமுறைக்கு மாறாக வட்ட அளவிலான வளர்ச்சி திட்டமிடுதல் கடைப்பிடிக்கப்படுகிறது. மோசமாக பாதிக்கப்பட்ட மாவட்டங்கள் அனைத்திலும் வளர்ச்சித் தொகுப்புகளை அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. நக்சல் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வளர்ச்சியை ஊக்குவிக்கும் திட்டத்தின் ஒரு பகுதியாக மாவோயிஸ்ட்கள் அதிக உள்ளதாக கருதப்படும் தண்டேவாடாவுக்கு பிரதமர் பயணம் மேற்கொண்டார். 24,000 கோடி மதிப்பிலான வளர்ச்சித் திட்டங்களைத் தொடங்கிவைத்துப் பேசிய திரு. மோடி, "தோள்பட்டைகளில் சுமக்கப்படும் துப்பாக்கிகளுக்கு பதிலாக சுமக்கப்படும் ஏர் தான் வளர்ச்சியைக் கொண்டு வரும். இது அனைவரையும் தேசிய நீரோட்டத்திற்குக் கொண்டு வரும். வன்முறைக்கு இனி எதிர்காலம் இல்லை. அமைதியில் தான் எதிர்காலம் உள்ளது" என்றார். இதன்படி அரசு இடதுசாரி தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வசிக்கும் இளைஞர்களுக்காக பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

இடதுசாரி தீவிரவாதம் பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சேர்ந்த இளைஞர்களின் முன்னேற்றத்திற்காக அரசு கல்வி மற்றும் திறன் மேம்பாட்டுத் துறைகளில் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. ஒருபுறம் ஏற்கனவே உள்ள திட்டங்களை நடைமுறைப்படுத்தும் பணிகளை இந்தப் பகுதிகளில் முன்னுரிமை அடிப்படையில் விரைவுபடுத்தியுள்ள அரசு, மறுபுறம் குறிப்பிட்ட தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் பல்வேறு புதுமையான திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளது. தீவிரவாதிகள் தங்கள் இயக்கத்திற்கு ஆட்களைச் சேர்க்க இந்தப் பகுதிகளில் உள்ள படிப்பறிவற்ற மற்றும் வேலையில்லா இளைஞர்களைக் குறிவைப்பதால், இந்தப் பகுதிகளில் உள்ள இளைஞர்களுக்கு கல்வி புகட்ட ஓர் ஒருங்கிணைந்த முயற்சியை அரசு மேற்கொண்டு வருகிறது. அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் கீழ் அனைத்துக் குழந்தைகளுக்கும் உறைவிடப் பள்ளி வசதி அளிக்கப்படுகிறது. பெண் குழந்தைகளுக்கு கஸ்தூரிபா காந்தி பாலிகா வித்யாலயாக்கள் குறைந்த கட்டணத்தில் தரமான ஆரம்பக் கல்வியை அளிக்கின்றன. ராஷ்ட்ரீய மத்யாமிக்

நடுத்தரக் கல்வி இயக்கத்தின் மூலம் உயர்நிலைக் கல்வி உறுதிசெய்யப்படுகிறது. ஏராளமான கேந்திரிய வித்யாலயாக்கள் மற்றும் நவோதயா பள்ளிகளும் திறக்கப்பட்டு வருகின்றன.

பிரதம மந்திரி கவுசல் விகாஸ் திட்டத்தின் கீழ் இடது சாரி தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்ட 54 மாவட்டங்களிலும் தலா 120 இளைஞர்களுக்கு திறன் மேம்பாட்டு அமைச்சகம் பயிற்சி அளித்து வருகிறது. இளைஞர்களுக்கு நேர்மறையான சூழலை உருவாக்குவதிலும் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பதிலும் மாநில அரசுகளும் முக்கியப் பங்காற்றி வருகின்றன. இந்தப் பிராந்தியங்களில் வாழ்வாதாரக் கல்லூரிகளை சத்தீஸ்கர் அரசு உருவாக்கியுள்ளது. கூடுதலாக தனது 'ப்ராயாஸ்' நிறுவனத்தின் மூலமாக அரசு மாணவர்களைப் போட்டித் தேர்வுகளுக்கும் தயார்படுத்தி வருகிறது. பஸ்டார் பகுதியில் உள்ள ஐந்து மாவட்டங்களும் இடது சாரி தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்டதாக உள்ள நிலையிலும் அந்தப் பகுதி 2016ஆம் ஆண்டில் 27 மாணவர்களை ஐ.ஐ.டி.க்களுக்கு அனுப்பி வைத்துள்ளது. இடதுசாரி தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்ட 34 மாவட்டங்களிலும் திறன் மேம்பாடு என்ற திட்டத்தின் கீழ் மத்திய திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவு அமைச்சகம், 9 மாநிலங்களை உள்ளடக்கிய இந்த 34 மாவட்டங்களிலும் தலா ஒரு ஐ.டி.ஐ. மற்றும் இரண்டு திறன் மேம்பாட்டு மையங்களைத் திறக்கும் பணிகளில் ஈடுபட்டுள்ளது.

ஜார்க்கண்ட் மாநிலத்தில் உள்ள காவல்துறை இடதுசாரி தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்ட பலமு பிராந்தியத்தில் உள்ள குழந்தைகளுக்காக ஒரு மிகப் பிரத்யேகமான முயற்சியை மேற்கொண்டுள்ளது. 'டாரே ஜமீன் பர்' என்று அழைக்கப்படும் இந்த முயற்சியின் கீழ் காவலர்கள் பலமு மாவட்டதின் தலைநகரமான டல்கோன்கனியில் வசிப்போரிடம் இருந்து புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள், ஆடைகள், பைகள், காலணிகள் உள்ளிட்டவற்றை சேகரிக்கின்றனர். பின்தங்கிய பகுதிகளில் இருந்து வரும் குழந்தைகளுக்கு அவற்றை காவலர்கள் மறு விநியோகம் செய்கின்றனர்.

கல்வி அளிப்பதுடன் அதன் தொடர்ச்சியாக, இந்தப் பகுதியைச் சேர்ந்த இளைஞர்களுக்கு வேலை மற்றும் வாழ்வாதார வாய்ப்புகளைத் தரும் திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளித்தால் மட்டும்தான் இந்தப் பகுதியில் உள்ள இளைஞர்களை வன்முறை இயக்கங்களில் இருந்து விலக்கி வைக்க உதவும் என்பதை மத்திய மாநில அரசுகள் உணர்ந்து கொண்டுள்ளன. அந்த வகையில் இந்தத் திட்டம் சரியான முறையில் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

அ. வடகிழக்கு தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்ட இளைஞர்களுக்கான அரசுத் திட்டங்கள்

வட கிழக்கு இந்தியா என்பது இந்தியாவின் மிகவும் யுக்திபூர்வமான நிலப்பரப்பாகும். ஆனால் துரதிருஷ்டவசமாக இந்தப் பகுதி சுதந்திரம் பெற்றது முதலாகவே தீவிரவாதம், நிலையற்ற தன்மை மற்றும் சமூக அமைதியின்மை ஆகியவற்றால் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பின்னணியில் வடகிழக்கில் ஏராளமான முயற்சிகளை குறிப்பாக வடகிழக்கு பிராந்திய இளைஞர்களுக்காக அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. வட கிழக்கு பிராந்திய மேம்பாட்டுக்கான அமைச்சகம் வடகிழக்கில் மத்திய அரசுத் துறைகளின் முயற்சிகளை ஒருங்கிணைத்து வருகிறது.

சில வட கிழக்கு மாநிலங்களில் மாநில முதலமைச்சர் தலைமையில்தொழில்துறை பிரதிநிதிகள் அடங்கிய வழிகாட்டும் குழுவுடன் மாநில திறன் மேம்பாட்டு இயக்கத்தை அமைக்க திறன் அமைச்சகம் திட்டமிட்டுள்ளது. அரசு ஐ.டி.ஐ.கள் மற்றும் தனியார் முகமைகளின் உதவியுடன் இளைஞர்களுக்கு பயிற்சி அளிக்க இந்த இயக்கம் திட்டமிட்டு வருகிறது. கூடுதலாக மாநில வாழ்வாதார இயக்கம் மற்றும் என்.யு.எல்.எம். ஆகியவையும் இளைஞர்களுக்குத் திறன் அளிக்கும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

**அடையாளம் காணப்பட்ட பயிற்சிக்கான பகுதிகள் வருமாறு:**

- விருந்தோம்பல் - சமையல் வகைகள், உணவு மற்றும் பானங்கள், பேஸ்ட்ரி மற்றும் பேக்கரி
- சுற்றுலா - சுற்றுலா இயக்குபவர்கள், விடுதிகள், வீடுகளில் தங்குதல், கவர்ச்சிகரமான இடங்களுக்கான டாக்ஸிகள்
- செவிலியம், துணை மருத்துவம்
- ஆரோக்கியம் மற்றும் அழகியல்
- ஃபேஷன் டிசைனிங் மற்றும் ஆயத்த ஆடைகள், கைத்தறி நெசவு
- அத்தியாவசிய தொழில்நுட்பக் கலைஞர்கள் - எலக்ட்ரீஷியன், பிளம்பிங், ஏ.சி. ரிப்பேர், ஃப்ரிட்ஜ், மொபை ரிப்பேர் உள்ளிட்டவை
- ஆட்டோமொபைல் - ஃபிட்டர், டர்னர், மெக்கானிக்குகள், வெல்டிங்
- எந்தத் துறையிலும் வேலைவாய்ப்பு அளிக்கும் மென் திறன்கள்
- சில்லறை விற்பனை
- விமானப் போக்குவரத்து கேபின் குழு, விமானப் பணிப்பெண், விமான நிலைய தரைக்குழு

மேலும் வட கிழக்கு மாநிலங்களில் புதிய சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் தொடங்குவதை ஊக்குவிக்க வட கிழக்குப் பிராந்தியத் துறை, வட கிழக்கு வளர்ச்சி நிதிக் கழகத்துடன் இணைந்து ரூ. 100 கோடிக்கான நிறுவன மூலதன நிதியை உருவாக்கியுள்ளது. தகவல் தொழில்நுட்பம், தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவைகள், உணவு பதப்படுத்துதல், சுகாதாரம், சுற்றுலா, சில்லறை வர்த்தகம், ஒருங்கிணைந்த சேவைகள் உள்ளிட்ட துறைகளில் உள்ள புதிய மற்றும்

வளரும் நிலையில் உள்ள புதிய நிறுவனங்கள் இந்த நிதியின் மூலம் ஊக்கம் பெறும்.

அனைவருக்கும் கல்வி மற்றும் ஆர்.யு.எஸ்.ஏ. மூலம் பல்வேறு கல்வி சீர்திருத்தங்களும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

வடகிழக்கு பிராந்திய வளர்ச்சிக்கான அமைச்சகம் பணியிடங்களை உருவாக்கும் தொழில்துறை மற்றும் இதர துறை அலகுகளுக்கு மானிய ஊக்கத்தொகைகளை அளித்து வருகிறது. இதனை நடைமுறைப்படுத்த வடகிழக்கு வளர்ச்சி நிதிக் கழகத்திற்கு இந்தத் துறையில் உதவி அளித்து, அதிக பணியிடங்கள் உருவாக்கும் அலகுகளுக்கு வட்டி மானியத்தை அளிக்கிறது.

இ. ஜம்மு - காஷ்மீரில் பயங்கரவாதம் மற்றும் பிரிவினைகளால் பாதிக்கப்பட்ட இளைஞர்களுக்கான அரசுத் திட்டங்கள்

முப்பது ஆண்டு காலமாக ஜம்மு காஷ்மீரில் நிலவி வரும் பிரிவினைவாதம் இந்தியச் சுதந்திரத்தின் போது தோன்றியது. தற்போது மத்திய அரசும், மாநில அரசும் அங்குள்ள இளைஞர்களுக்கு திறன் அளித்து அவர்களுக்கு வாழ்வாதார வாய்ப்புகளை உருவாக்க இணைந்து செயல்பட்டு வருகிறது.

**புகழத்தக்க சில முயற்சிகள் கீழே பட்டி அலிடப்பட்டுள்ளன:-**

உதான்: ஜம்மு காஷ்மிருக்கான குறிப்பிடப்பட்ட தொழில்துறை முயற்சிக்கு மத்திய உள்துறை அமைச்சகம் நிதியுதவி அளிப்பதுடன், தேசிய திறன் மேம்பாட்டு கழகத்தால் நடைமுறைப்படுத்தப்படுகிறது. இது இளைஞர்களுக்கு நிறுவன வாய்ப்புக்களை அளிப்பதுடன், இந்திய வர்த்தக நிறுவனங்களுக்கு இந்த மாநிலத்தில் உள்ள திறன்களை அறிமுகப்படுத்தவும் விரும்புகிறது. இந்தத் திட்டங்களுக்கு ஆச்சரியமளிக்கும் வகையில் அதிக அளவு வரவேற்பு கிடைத்து வருவதுடன், அடித்தளத்தில் குறிப்பிடத்தக்க தாக்கத்தையும் ஏற்படுத்தி வருகின்றன.

சத்பாவனா - ராணுவத்தால் செயல்படுத்தப்பட்டு வரும் மிகுந்த வெற்றியை ஈட்டித் தரும் இன்னொரு முயற்சி சத்பாவனா ஆகும். சத்பாவனா திட்டத்தின் கீழ் ஜம்மு காஷ்மீர் மாநில இளைஞர்களுக்காக ராணுவம் பல்வேறு முக்கிய திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. ராணுவ நல்லெண்ணப் பள்ளிகள் ஒரு இலட்சத்திற்கும் அதிகமான மாணவர்களுக்கு நடுநிலை மற்றும் உயர்நிலைக் கல்வியை அளிப்பதற்கான கல்வி முயற்சிப் பணிகளை மேற்கொண்டு வருகிறது. தற்போது 14,000க்கும் மேற்பட்ட மாணவர்கள் ராணுவம் நடத்தும் பல்வேறு பள்ளிகளில் பயின்று வருவதுடன், மாநிலத்தைச் சேர்ந்த 1,000 குழந்தைகள் ராணுவ கல்வி ஊக்கத்தொகை உதவியுடன் வேறு மாநில பள்ளிகளில் பயின்று வருகின்றனர்.

சத்பாவனாவின் கீழ் இராணுவம் தேசிய ஒருங்கிணைப்புச் சுற்றுலாவை நடத்துகிறது. இதில் காஷ்மீரைச் சேர்ந்த மாணவர்கள் நாட்டில் உள்ள இதர மாநிலங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டு அவர்களுக்கு சக மக்களின் கலாச்சாரம் பற்றி முதல் தரமான தகவல்களைப் பெற முடியும். அவர்கள் ஊக்கம் பெற்றவர்களாகத் திரும்பி, நாட்டிற்கு வளர்ச்சியைத் தரக்கூடிய குடிமக்களாக ஆகி, தனிப்பட்ட வளர்ச்சியில் தீவிரமாக ஈடுபாடு செலுத்துகின்றனர். இந்தத் திட்டத்தின் கீழ் இதுவரை 200 சுற்றுலா பயணங்களில் 5000 பேர் பயனடைந்துள்ளனர்.

விருப்பமுள்ள மற்றும் தகுதியான நபர்களுக்கு செயல்முறை திறன் பயிற்சிகளை அளிக்கும் வகையில் இராணுவம் மாநிலம் முழுவதும் தொழில் பயிற்சி மையங்கள் மற்றும் பெண்களுக்கு அதிகாரம் அளிக்கும் மையங்களை ராணுவம் நடத்தி வருகிறது. மாநிலத்தின் தொலைதூரப் பகுதிகளில் வசிக்கும் மக்களின் வாழ்வை சீர்படுத்துவதற்காக இராணுவம் தனது சொந்த நிதியில் இருந்து ஆண்டுதோறும் மக்கள் நட்புத் திட்டங்களை நடத்தி வருகிறது.

ஜம்மு காஷ்மீரில் முக்கியத்துவம் வாய்ந்த மற்றும் அதிக பயன் தரக்கூடிய இன்னொரு முயற்சியும் இராணுவத்தால் தான் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இராணுவம் தனது பயிற்சி பங்குதாரர் ஆன சமூகப் பொறுப்பு மற்றும் கற்றல் மையம் மற்றும் பெட்ரோநெட் எல்.ஜி. உடன் இணைந்து காஷ்மீர் சூப்பர் 40 முயற்சியை மேற்கொண்டு, ஜம்மு காஷ்மீர் இளைஞர்களுக்கு பொறியியல் நுழைவுத் தேர்வுக்கான பயிற்சியை அளிக்கிறது. இந்த ஆண்டு சூப்பர் 40 முயற்சியானது முந்தைய ஆண்டுகளின் சாதனைகளை முறியடிக்கும் வகையில் 26 மாணவர்கள் மற்றும் 2 மாணவிகளை ஐ.ஐ.டி.ஜே.இ.இ. தேரிவில் வெற்றி பெறச் செய்துள்ளது. 78 சதவீத வெற்றி விகிதத்துடன் ராணுவத்தின் காஷ்மீர் சூப்பர் 40 நாட்டின் சிறந்த ஐ.ஐ.டி. பயிற்சி நிறுவனங்களுக்கு இணையாக உருவெடுத்துள்ளது.

ஹிமாயத் - இந்திய அரசின் ஊரக மேம்பாட்டு அமைச்சகத்தின் கீழ் நடத்தப்படும் தீனதயாள் உபாத்யாய கிராமின் கவுசல் திட்டம் வேலை வாய்ப்புக்களை அளிக்கக்கூடிய தொழில் பயிற்சிகளை ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் 1.22 இலட்சம் இளைஞர்களுக்கு அளிக்க விருப்பம் தெரிவித்துள்ளது.

இதன்படி மத்திய மற்றும் மாநில அரசு ஒன்றாக வந்து தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்ட இளைஞர்களுக்கு அதிகாரம் அளித்து அவர்கள் தங்கள் பகுதியின் வளர்ச்சிக்கு பங்களிக்க ஊக்குவித்து அதன் மூலம் நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு ஊக்கமளிக்கப்படும். ●

# இந்திய இளைஞர்களுக்கு அதிகாரம் அளிக்க அடிப்படை அறிவியல் மற்றும் மானிடவியல் துறைகளில் தரமான கல்வி

- டாக்டர் ராகேஷ் கே.வாட்ஸ், தொழில்நுட்ப ஆசிரியர் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவன தொடர்கல்வி மையத்தின் தலைவர்

டாக்டர் மீனு வாட்ஸ், சண்டிகரில் பல்கலைக்கழக டி.ஏ.வி. கல்லூரி உதவிப்பேராசிரியர்

உலகில் மக்கள் தொகை அதிகம் உள்ள இரண்டாவது நாடான இந்தியாவில், தடுமாற்றம் ஏற்படுத்தும் வயதுப் பிரிவில் 600 மில்லியன் பேர் உள்ளனர். அதாவது இந்தியாவின் மொத்த மக்கள் தொகையில் 50%க்கும் அதிகமான மக்கள் 25 வயதிற்குக் கீழ் உள்ளனர். இன்னும் இரண்டு ஆண்டுகளில் மொத்த மக்கள்தொகையில் நான்கில் மூன்று பங்கினர் 25 வயதிற்குக் கீழ் உள்ளவர்களாக இருக்கும் நிலையை நம் நாடு எட்டிப் பிடித்து உலகின் இளமையான நாடு (இளைஞர்கள் அதிகம் நிறைந்த நாடு) என்ற பெயரைப் பெற உள்ளது.

தங்கச்சுரங்கம் போன்ற இந்த மக்கள்தொகை பிரிவினர் இந்தியாவின் மொத்த தேசிய வருமானத்தில் 34%க்குப் பொறுப்பானவர்களாக உள்ளனர். இவர்கள் தங்களின் கல்விக்கான சரியான உள்கட்டமைப்பு வசதிகள், தேவையான தொழில்திறன்களை வளர்த்துக் கொள்ளுதல், வேலை கிடைப்பதற்கு ஏற்ற போதுமான வாய்ப்புகள் அல்லது தொழில் தொடங்குவதற்கான வாய்ப்புகள் போன்ற கோரிக்கைகளை கட்டாயமாக முன் வைப்பார்கள். இந்தக் கோரிக்கைகளை இவர்கள் தங்களது சொந்த வாழ்க்கை முன்னேற்றத்துக்கும் சமூக, தேசிய வளர்ச்சியை முன்வைத்தும் எழுப்புவார்கள்.

மக்கள் தொகைப் பங்கீடு (உழைக்கும் வயதுடையோரின் கூடுதல் சதவிகிதம்) எந்த ஒரு நாட்டுக்கும் சுமையாக இருப்பதில்லை. மாறாக இது வாய்ப்புகளுக்கான ஒரு ஜன்னலாகவே இருக்கிறது. அத்தகைய மக்கள்தொகை பிரிவினரின் திடீர் அதிகரிப்பே மக்கள் தொகைப் பங்கீடு எனப்படுகிறது. அண்மைக்காலங்களில் கொரியக் குடியரசு போன்ற கிழக்கு ஆசிய நாடுகள் பலவற்றில் இந்த மக்கள்தொகைப் பங்கீடு பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கிறது. ஆனால் இந்த இளையோர் பிரிவு வலுப்படுத்தப்பட வேண்டும்; அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட வேண்டும். கல்வி கற்கும் ஒருவருக்கு அவரது வாழ்வை அவரே முன்னெடுக்கக் கூடிய வகையில் மதிப்புகளை அவருக்குள் உருவாக்கும் வழிமுறையே அதிகாரம் அளித்தல் என்பதாகும். இத்தகைய வாழ்வு தனிநபர் என்ற முறையில் அவருக்குத் திருப்தி அளிப்பதோடு, சமூகத்தின் மதிப்புகள் மற்றும் லட்சியங்களுக்கு இணைந்த வகையிலும் இருக்க வேண்டும். இளைஞர்களுக்கு அதிகாரம் அளித்தல் என்பது அதிலும் குறிப்பாக இந்தியப் பின்புலத்தில், தேசிய வளர்ச்சிக்கு என்று மட்டும் இல்லாமல் தனிநபர் மேம்பாட்டுக்கும் முக்கியமானதாகும். இளையோர் உரிமைகள், இளையோரின் ஈடுபாடு மற்றும் சமுதாயம் சார்ந்த முடிவுகளை எடுப்பதில் ஆக்கப்பூர்வமாகப் பங்காற்றுதல் ஆகியவற்றை மேம்படுத்துவதன் மூலமே மேலே கூறியவை சாத்தியமாகும்.

இளைஞர்களுக்கு அதிகாரம் அளித்தலின் முக்கிய கூறு என்பது அவர்களுக்கு கல்வி அளிப்பதும் வேலை பெறத் தகுதியானவர்களாக அவர்களை மாற்றுவதுமே ஆகும். தம் நாட்டு இளைஞர்களின் ஆக்கப்பூர்வமான பங்கேற்பு இல்லாமல் ஒரு நாடு நீடித்த நிலையான வளர்ச்சி குறித்துப் பேச முடியாது. இதற்கு இளைஞர்களின் உழைப்பும் சிந்தனையும் மிக முக்கியமான பங்கு வகிக்கின்றன என்பது கண்கூடாகும். வாய்ப்புகள் கிடைக்காமல் இருப்பது என்பது அவர்களை சமுதாயத்தில் ஒன்றும் செய்யாமல் பயனற்றவர்களாக உட்கார்ந்து இருக்கச் செய்வதற்கு ஒப்பானதாகும். இது ரெயிலே வராத ரெயில் நிலையத்தில் ரெயில் பாதை ஓரம் ரெயிலுக்காக காத்திருப்பது போன்றதாகும்.

### இளைஞர்களுக்கு அதிகாரம் அளித்தலின் அடிப்படைத் தூண்கள்

இந்தியாவில் இளைஞர்களுக்கு நீடித்த அதிகாரம் அளித்தலைச் செய்வதற்கு கீழ்வரும் நான்கு அடிப்படைத் தூண்கள் வலுவாக இருக்க வேண்டும்:

1. கல்வி
2. தொழில் திறன்கள் மற்றும் வேலைவாய்ப்பு
3. முழுமையான மனநிலை மாற்றங்கள்
4. அரசாங்கக் கொள்கைகள் மற்றும் முன்னோடிச் செயல்பாடுகள்

மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தின் (எம்.ஹெச்.ஆர்.டி) செயல் முழக்கமான **''அனைவருக்கும் கல்வி, தரமான கல்வி''** என்பதால் மட்டுமே **''இந்தியாவை உருமாற்றுதல்''** என்ற தொலைநோக்குப் பார்வையை அடைய முடியும். எந்த ஒரு கல்வி அமைப்பிலும் இருக்க வேண்டிய அடிப்படை குணாம்சங்களை பொருத்தமான முறையில் நமது கல்வி அமைப்பு கொண்டிருந்தால் மட்டுமே வளர்ந்து வரும் நமது நாட்டை உண்மையான புதுத்தோற்றத்திற்கு மாற்ற முடியும். அணுகுதல், சமநிலைத்தன்மை, தரம்

போன்ற குணாம்சங்களே அவையாகும். இவற்றைத் தொடர்ந்து தனிநபர் திறம் மற்றும் தொழில்திறன் மேம்பாடு ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

இந்தியாவில் உயர்கல்விக்காக மாணவர் சேரும் விகிதம் தற்போதைய சூழலில் 22%ஆக உள்ளது. உலக சராசரியான 2.8% என்பதோடு ஒப்பிட இது குறைவாகவே உள்ளது. வளர்ந்த நாடுகளான சீனா (28%), பிரேசில் (36%) மற்றும் யு.கே (59%) போன்ற நாடுகளுடன் ஒப்பிட்டாலும் நமது நாடு பின்தங்கியே உள்ளது. அடுத்து வரும் சில ஆண்டுகளில் (அதாவது 2020ஆம் ஆண்டில்) உலகிலேயே 25 வயதிற்குட்பட்டவர்களின் எண்ணிக்கையில் முதலாவதாக இருக்கும் நாம் நமது மாணவர் பொது சேர்க்கை விகிதத்தை (ஜி.இ.ஆர்) 30% என்ற அளவுக்கு மட்டுமே குறிக்கோளாக வைத்துள்ளோம். உயர்கல்வியில் சேர்வதற்கு அடிப்படையாக இருக்கின்ற மூன்றாம் நிலை கல்வி நிலையங்களை குறைந்தபட்சம் இரண்டு மடங்காக்கினால்தான், மேலே கூறிய குறிக்கோள் அளவை அடைய முடியும். குறிக்கோளுக்கும் உண்மைக்கும் இடையிலான இடைவெளியானது கனவை நனவாக்க விடாமல் தடுத்துக் கொண்டு இருக்கிறது. காளான்கள் போல பொறியியல் கல்லூரிகளும், பல்கலைக்கழகங்களும் பெருகினாலும்கூட, இந்தியாவில் விஞ்ஞானிகள் மற்றும் பொறியியலாளர்களின் எண்ணிக்கையானது உலக நாடுகளோடு ஒப்பிட குறைவாகவே உள்ளது. **“தரமான கல்வி”** என்பது **“அனைவருக்குமான கல்வி”** என்பதன் வழியாகத்தான் அடையப்பட வேண்டும்.

மதச்சார்பற்ற மற்றும் ஜனநாயக நாடாக இருக்கும் அதே வேளையில் ஜாதி, பாலினம், இடவியல்பு, வயது போன்றவற்றால் இந்தியா சிதறுண்டு இருக்கிறது. இதுவே நாட்டு குடிமக்கள் அனைவருக்கும் ஒரே மாதிரியான கல்வி கிடைப்பதைத் தடுக்கிறது. எனவே விரும்புகின்ற விளைவுகளை நம் நாடு பெற முடியாமல் போகிறது. தரமான கல்வி என்று நாம் விவாதிக்கத் தொடங்குவதற்கு முன்பு இந்த ஓட்டைகள் அடைக்கப்பட வேண்டும். உயர்கல்வியில் மாணவர்கள் பாடங்களைத் தேர்ந்தெடுக்கும் போது சமநிலை இன்மை மறுபக்கத்தில் இருந்தும் உருவாகிறது. அதிகம் விரும்பித் தேர்ந்தெடுக்கப்படும் பாடங்களின் தரவரிசையானது கீழ்வருமாறு உள்ளது:

- கலை மற்றும் மானிடவியல் பாடங்கள் (தோராயமாக 3540%)
- வணிகவியல் மற்றும் மேலாண்மை (தோராயமாக 2025%)
- அடிப்படை மற்றும் பயன்பாட்டு அறிவியல்கள் (தோராயமாக முறையே 1925% மற்றும் 1516%).


அறிவியல் பாடங்களுக்கான விருப்பம் என்பது கடைசியாகவே உள்ளது. மாணவர்களின் பாடத் தேர்ந்தெடுப்பில் ஏன் இத்தகைய பாகுபாடு எனக் காரணங்களை ஆராய்ந்தால், அவை ஆச்சரியம் அளிப்பவையாக உள்ளன. இந்தக் காரணங்களைத் தெரிந்து கொள்வது அரசாங்கத்துக்கும் கொள்கை வகுப்பவர்களுக்கும் உண்மையை வெளிப்படுத்துவதாக அமையும். பாடங்களுக்கு முன்னுரிமை கொடுப்பது என்பது பல கூறுகளைக் கொண்டதாகும். பாடத்திட்ட நெகிழ்வுத் தன்மை, திறன் மேம்பாட்டுக்கான வாய்ப்பு, கல்வி வளாகத்துக்குள் மற்றும் வளாகங்களுக்கு இடையில் மாணவர்களின் நடவடிக்கை, பணிசார்ந்த உலகில் பொருத்தப்பாடு மற்றும் இவை அனைத்திற்கு மேலாக வேலைவாய்ப்பு போன்ற கூறுகள் முக்கியமானதாக விளங்குகின்றன.

கடந்த இருபதாண்டுகளில் தொழிற்கல்வி பட்டம் பெறுவது அதிகரித்து உள்ளது கண்கூடாகும். ஏ.ஐ.சி.டி.இ; யு.ஜி.சி. மற்றும் பிற நெறிமுறைப்படுத்தும் அமைப்புகள் ஆகியவற்றால் மோசமான தரமற்ற தொழில்கல்வியை வழங்கிய மிகப்பெரிய கட்டிடங்களின் வாயில்கள் வலுக்கட்டாயமாக மூடப்பட்டன. தொழில்கல்வி நிலையங்களின் அதிகரிப்பு, அரசின் முன்னோடி நடவடிக்கைகளால்தான் நிகழ்ந்தது. அதாவது தொழில்நுட்ப மற்றும் தொழில்நிபுணத்துவ புத்தாக்கம் மற்றும் படைப்பாக்கத்தால் நாட்டின் வளர்ச்சி முன்னெடுக்கப்பட வேண்டும் என்ற இலக்கை அடைய அரசு இப்பெருக்கத்துக்கு ஆதரவாக இருந்தது. ஆனால் விரும்பிய இலக்கை நாடு அடைய முடியாமல் போகக் காரணம் தரமற்ற கல்விநிலையே ஆகும். இன்று நாட்டின் பொருளாதார வளர்ச்சியானது சேவைப் பிரிவுகளின் அடிப்படையிலேயே (66.1%) முதன்மையாக அமைந்துள்ளது. இதற்குத் தனிநபர் வெளிப்பாட்டுத் திறன்கள் அதிக அளவில் தேவைப்படுகின்றன. பொருளாதார வளர்ச்சிக்கு உறுதுணையாக இப்போது மேலெழுந்து வரும் தொழில்நுட்பப் பிரிவுக்கு(9.2%) இந்தத் தனிநபர் வெளிப்பாட்டுத் திறன்கள் மற்றும் தொழில் திறன்கள் இரண்டும் தேவைப்படுகின்றன. ஆனால் இப்போதுள்ள இளைஞர்கள் தங்களுக்கு வேலை அளிப்பவர்களை முழுவதுமாகத் திருப்திபடுத்தும் அளவிற்குத் தங்களைத் தகுதிப்படுத்திக் கொண்டு இருக்கவில்லை. இந்தியப் பொறியியல் பட்டதாரிகளில் மூன்றில் ஒரு பங்குக்கும் குறைவானவர்கள் மற்றும் அடிப்படை விஞ்ஞானம், இதர பாடங்கள் படித்தவர்களில் சுமார் 5%பேர் மட்டுமே வேலைக்கான தகுதி பெற்றவர்களாக உள்ளனர். இதுதான் நமது கல்வியின் மதிப்பு மிகுந்த இரு பாடப்பிரிவுகள் தங்கள் மதிப்பை இழந்து வருவதற்கான காரணமாகும்.

அணுகுதல் மற்றும் சமநிலை என்ற இரண்டு முக்கிய அளவு குறித்த காரணிகளுக்குப் பிறகு மூன்றாவதாக வருவது தரம் குறித்த காரணியாகும். நமது நாட்டின் தர மதிப்பீடுகள் குறைவாக இருக்கின்ற கல்வி அமைப்பில் நிலவும் சூழலை வளர்ந்த நாடுகள் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு தங்கள் நாடுகளில் மேற்படிப்பு படிக்கின்ற வாய்ப்பை இந்திய மாணவர்களுக்கு வழங்குகின்றன. வளர்ந்த நாடுகள் இந்தியாவின் பொருளாதாரத்தைச் சுரண்டுவதோடு

அறிவையும் சுரண்டுகின்றன. ஒவ்வொரு ஆண்டும் தரமான கல்வியைத் தேடி வெளிநாடுகளுக்குச் செல்கின்ற இந்திய மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. தற்போது உள்ள கல்வி அமைப்பில் சில திருத்தங்களை மேற்கொள்வதன் மூலம் இந்நிலைமையை எளிதில் சரி செய்து விடலாம். பழமையான அதே சமயம் மிகப்பெரிய கல்வி அமைப்பினை மறுஅமைப்பாக்கம் செய்வதற்கு என்றே கூடுதலான புத்தாக்கமும் படைப்பாக்கமும் தேவைப்படுகின்றன. இதன் மூலம் காலத்துக்கேற்ற தரமான கல்வியை எந்த நாட்டுக்கும் இணையாக நம்மால் தர முடியும்.

இந்தியாவில் தற்போது இருக்கும் கல்வி அமைப்பானது எண்ணற்ற தடைகளைத் தாண்டி தடையேட்டம் போடுகின்றது. அவை:




**நெருக்கடிகள்**

- தரமான மற்றும் ஊக்கமான ஆசிரியர்கள் மற்றும் புரவலர்களின் பற்றாக்குறை எதிர்கால வளமை இல்லாமை, குறைவான ஊதியம் மற்றும் நாட்டில் ஆசிரியர் தொழில் மதிப்புக் குறைவான தொழிலாகக் கருதப்படுதல்
- ஆசிரியர்களுக்கு ஏற்படும் நெருக்கடி அல்லது தற்காலிக நியமனப் போக்கு நாட்டில் மிக உயரிய கல்வி நிறுவனங்கள் பலவற்றிலும் நிரந்தரப் பேராசிரியர் பதவிகள் காலியாக இருத்தல், தேவை ஏற்படும் போது ஆசிரியர்களை மற்றும் அனுபவம் வாய்ந்த ஆராய்ச்சியாளர்களை நியமதித்தல், ஆசிரியர் பணியிடங்களில் 3ல் 1 பங்கு இடம் காலியாக இருத்தல்.
- நிதிப் பற்றாக்குறை, குறிப்பாக மாநில அரசு நடத்தும் கல்வி நிலையங்களில் நிதிப் பற்றாக்குறை இதுதான் மிகப்பெரிய இடைவெளியாகவும் குறைபாடாகவும் உள்ளது. மத்திய அரசு நிறுவனங்கள் அனைத்திலும் உள்ள மாணவர்களின் மொத்த எண்ணிக்கையைவிட மாநில அரசு கல்வி நிலையங்களில் அதிக எண்ணிக்கையில் மாணவர்கள் சேர்கின்றார்கள்.
- நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மிகக் குறைவான அளவே கல்விக்கான முன்னுரிமைக்கு நிதி ஒதுக்கீடு(3.3%) உலகின் மிகப்பெரிய கல்வி அமைப்பான இங்கு காலிபாத்திரத்தில் அதிக ஒலி எழுப்புவது போன்று எவ்விதமான உள்ளீடற்று உள்ளது.
- அரசியல் மற்றும் அதிகார வர்க்கத்தினரின் தலையீடு மற்றும் அளவுக்கு அதிகமான அதிகாரம் செலுத்துதல்
- மூத்த கல்வியாளர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் காலத்துக்கு ஏற்ப தங்களது பார்வையை செயல்படுத்த முடியாது இருத்தல்.

**காலத்துக்கு ஒவ்வாத பழமை**

- காலத்திற்கு ஒவ்வாத பழமையான, இறுக்கமான மற்றும் ஒரே சீராக இல்லாத பாடத்திட்டங்கள். இன்றைய இளைஞர்களுக்குத் தேவையான நவீன தொழில்நுட்ப முறையில் கற்பித்தலை மேற்கொள்ள முடியாமல் உள்ள பாரம்பரியமான கற்பித்தல் முறையின் போதாமை. ஆய்வுக்கூடம் சார்ந்த கல்வி சுருக்கப்படுதல், அதிலும் குறிப்பாக அடிப்படை விஞ்ஞானப் படிப்புகள் சுருக்கப்படுதல். இவையெல்லாம் சேர்ந்து கல்வி முறையை பழங்காலம் சாரந்ததாக மாற்றி விடுகின்றன. இத்தகைய நவீனத்துவம் இல்லாத கல்வி முறையை முன்னெடுக்கும் போது இளைஞர்கள் தமக்குள் பொதிந்துள்ள ஆர்வத்தை இழக்கின்றனர். உயர்கல்வியில் அடிப்படை அறிவியல் படிப்புகளில் பொதுச்சேர்க்கை விகிதம் (ஜி.இ.ஆர்) மிக வேகமாகக் குறைந்து வருவதற்கான முதன்மைக் காணரங்களில் இதுவும் ஒன்றாக இருக்கிறது.
- குறுகிய வட்ட அணுகுமுறையுடன் வடிவமைக்கப்பட்ட பாடத்திட்டமானது இன்றைய இளைஞர்களைக் கற்றவர்களாக மாற்றுகிறது. ஆனால் முழுமையான மாற்றத்துக்கான வளர்ச்சியை இக்கற்பித்தல் முறையானது அவர்களிடம் ஏற்படுத்துவதில்லை. கல்வி கற்பித்தலில் பல்துறை இணைந்த அணுகுமுறை இல்லாததால், இளைஞர்கள் நடைமுறையில் தங்களது அறிவை செயல்வடிவில் பிரயோகிக்க இயலாமல் தடுமாறுகின்றனர்.
- மத்திய அரசின் நிதி உதவியுடன் நடைபெறும் கல்வி நிலையங்கள் தவிர மற்ற கல்வி நிறுவனங்கள் போதுமான வசதிகளுடன் இல்லாமல் இருத்தல்

**ஈடுபாடின்மை**

- பாடத்திட்டத்தை உருவாக்குவதில் வேலை அளிப்பவரின் பங்கேற்பு ஏதும் இல்லை. அதாவது வேலை அளிப்பவர் தங்கள் தேவைக்கு ஏற்ப

பாடத்திட்டத்தை உருவாக்கும் முறை இந்தியாவில் இல்லை. பாடத்திட்டம் என்பது மூத்த கல்வியாளர்களால் உருவாக்கப்படுகிறது. சில சமயங்களில் அதிகாரிகளேகூட பாடத்திட்டத்தை உருவாக்குகின்றனர். இதுவே பல ஆண்டுகளாக இங்கு தொடர்ந்து வரும் நடைமுறை ஆகும். இவர்கள் படித்து முடித்தவர்களை வேலைக்கு எடுத்துக் கொள்பவர்கள் இல்லை. பாடத்திட்டத்தை வகுப்பதில் தொழிற்சாலையினர், ஆய்வுக்கூடத்தினர், வர்த்தகப்பிரிவினர், வணிகப் பிரிவினர் அல்லது வேலை சார்ந்த இதர பங்குதாரர்கள் என எவரையுமே கலந்து ஆலோசிப்பதில்லை. இதுவே கல்வி கற்ற இளைஞர்கள் அதிக எண்ணிக்கையில் வேலையில்லாமல் இருப்பதற்கு வழிவகை செய்கிறது. இதன் விளைவாக இளைஞர்கள் நாட்டின் சொத்தாக இல்லாமல் சுமையாக மாறுகிறார்கள்.

இத்தகைய பின்னடைவுகள் பல இருந்தபோதிலும் அறிவியல் மற்றும் தொழில்நுட்பம், கலைகள் மற்றும் மானிடவியல் கற்கும் நமது இளைய சமுதாயத்தினர் முன்னேற்றம் அடைந்தே வருகின்றார்கள். ஐ.ஐ.டி., ஏ.ஐ.ஐ.எம்., ஐ.ஐ.எஸ்.இ.ஆர்., ஐ.எம்.டெக்., ஐ.ஐ.எஸ்சி, ஐ.ஐ.எம் முதலான உச்சநிலை கல்வி நிலையங்கள் உலகத்தரம் வாய்ந்த கல்விநிலையங்களின் தர வரிசைப் பட்டியலில் இடம் பெறாமல் இருப்பதற்குக் காரணம் இங்கு பணிபுரியம் ஆசிரியர்களே; மாணவர்கள் இல்லை. 2002-2016ஆம் ஆண்டுகளின் காலகட்டத்தில் நம் நாட்டில் விஞ்ஞான ஆய்வுக் கட்டுரைகளின் வெளியீடு ஐந்து மடங்கு அதிகரித்து உள்ளது. வலிமையான அடித்தளத்துடன் உள்நாட்டு தொழில்நுட்பங்களை நாம் உருவாக்கி நிறுவியுள்ளோம். உதாரணமாக விண்வெளித் தொடர்பியல், ஐ.டி.பிரிவு, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கம், மருந்தியல், நோய் அறிதல் முதலான துறைகளில் இவ்வாறு உருவாக்கி உள்ளோம். இவற்றில் அடிப்படை அறிவியலின் ஆதாரக் கருத்துகள் முக்கிய பங்கினை வகிக்கின்றன. இளைஞர்களுக்கு அதிகாரம் அளிப்பதற்காக பழமையான அமைப்பை புதுப்பிக்கும் சட்டகத்தை உருவாக்குவதில் அரசு ஆக்கப்பூர்வமான பங்கினை செய்து வருகிறது. மிகச் சிறந்த கொள்கைகள், சீர்திருத்தங்கள், புதிய திட்டங்களுக்கான தொடக்க நடவடிக்கைகள், திட்டங்கள், தொலைநோக்கு இலக்குகள் ஆகியவற்றை அரசு முன்னெடுத்து வருகிறது. பரந்துபட்ட நமது நாட்டின் அனைத்து மூலைகளிலும் உள்ள இளைஞர்களுக்கு தரமான கல்வி கிடைக்க கல்வி நிலையத்துக்குள் மற்றும் கல்வி நிலையங்களுக்கு வெளியில் என அரசு முயற்சிகள் எடுத்து வருகிறது. பல்வேறு வகையிலான தொடக்க நடவடிக்கைகள் மூன்று முதன்மைக் காரணிகளின் அடிப்படையில் அமைகின்றன. அவை அணுகுதல், சமநிலை மற்றும் தரம் ஆகும். இவற்றில் பெரும்பாலானவை அடிப்படை அறிவியல் மற்றும் மானிடவியல் மாணவர்களுக்குச் சமமான பலன்களைத் தருகின்றன நாட்டில் உயர்கல்விக்கான உயிர்ச்சூழலில் இந்தச் சமநிலைதான் முதன்மைக் காரணமாகும்.

ஒவ்வொரு நிலையிலும் இளைஞர்களுக்கான கல்வியை விரிவாக்கம் செய்ய அரசு முயற்சிகள் எடுத்து வருகிறது. ஐ.ஐ.டி, ஐ.ஐ.எம், ஐ.ஐ.எஸ்.இ.ஆர்., ஏ.ஐ.ஐ.எம்.எஸ், மத்தியப் பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் முதலானவற்றை அரசு புதிய இடங்களில் திறந்து வருகின்றது. மேலும் கல்வி நிலையத்தின் வசதிகளை மேம்படுத்தவும் முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**குளோபல் இனிஷியேட்டிவ் ஆஃப் அகாடெமிக் நெட்வொர்க்ஸ் (ஜி.ஐ.ஏ.என்)** - சர்வதேச அளவில் விஞ்ஞானிகள் மற்றும் தொழில்முனைவோர்களை நமது நாட்டில் உள்ள உயர்கல்விக்கான நிலையங்களில் ஆய்வுப் பணியிலும் கல்விப்பணியிலும் ஈடுபட வைக்கச் செய்வதை நோக்கமாகக் கொண்டு ஜியாந் எனப்படும் குளோபல் இனிஷியேட்டிவ் ஆஃப் அகாடெமிக் நெட்வொர்க்ஸ் (ஜி.ஐ.ஏ.என்) செயல்படுகிறது. சர்வதேச தகுதிக்கு ஏற்றாற்போல இந்தியாவின் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப திறமையை மேம்படுத்துவதற்காகத் தற்போது இருக்கின்ற கல்விப்புல மூலவளங்களைப் பெருக்குவதே இதன் உள்நோக்கமாகும்.

**இம்பிரிண்ட் எனப்படும் இம்பாக்டிங் ரிசர்ச் இன்னோவேஷன் அன்ட் டெக்னாலஜி, இந்தியா** - என்ற அமைப்பு சமூகத்துக்குப் பயன்படக்கூடிய, அல்லது பொருத்தமான பிரிவுகளில் முதன்மைக் கல்வி நிறுவனங்களில் நேரடி ஆராய்ச்சி மேற்கொள்ளச் செய்வதை நோக்கமாகக் கொண்டு இயங்கி வருகிறது.

**உச்தார் ஆவிஷ்கர் அபியான் (யு.ஏ.ஒய்)** - தொழிற்சாலைக்குத் தேவைப்படும் குறிப்பிட்ட தேவையை நிறைவு செய்யக்கூடிய ஆராய்ச்சியை அபிவிருத்தி செய்வதற்காக உச்தார் ஆவிஷ்கர் அபியான் (யு.ஏ.ஒய்) தொடங்கப்பட்டுள்ளது. அதாவது சர்வதேசச் சந்தையில் இந்தியத் தொழிற்சாலைகள் போட்டியைச் சமாளித்து நிலை நிற்பதற்கு இது உதவும்.

**தேசிய கல்விநிலையங்களைத் தரவரிசைப்படுத்துதல் முறைச்சட்டகம் (என்.ஐ.ஆர்.எஃப்)** - என்பது ஆண்டுதோறும் உயர்கல்வி அளிக்கும் கல்வி நிலையங்களைத் தரவரிசைப்படுத்துகிறது. தரத்தை மேம்படுத்த உதவும் தற்சார்பில்லாத மற்றும் சோதித்துப் பார்க்கக் கூடிய காரணிகளின் அடிப்படையில் இந்தத் தரவரிசை மேற்கொள்ளப்படுகிறது.

**உயர்கல்விக்கான நிதி ஏஜென்சியை (ஹெச்.இ.எஃப்.ஏ) நிறுவுதல்** - வசதிகள் நிறைந்த உயர்கல்வி நிறுவனங்களை உருவாக்குவதில் உந்துதல் தரும் வகையில் மூலதனச் சொத்துகளை ஏற்படுத்துவதற்காக இது நிறுவப்பட்டுள்ளது.

**நேஷனல் அகாடெமிக் டெபாசிட்டரி (என்.ஏ.டி)**- டிஜிட்டல் பாதுகாப்பு பெட்டக முறையில் கல்விச் சான்றிதழ்களைப் பராமரிக்கும் வகையில் இது தொடங்கப்பட்டு உள்ளது. சான்றிதழ்களை ஆன்லைன் மூலம் அணுக, தேவையான போது பெற மற்றும் நீக்க இந்த அமைப்பு உதவும். மேலும் போலிச் சான்றிதழ்கள் மற்றும் போலி மதிப்பெண் பட்டியல் தயாரித்தல் போன்ற மோசடி நடைமுறைகளை இதனால் நீக்கிவிட முடியும். மேலும் உத்திரவாதத்தைப் பரிசீலிக்கும் நடைமுறைக்கும் உதவும்.

**ஸ்வயம் பிரபா** - 24X7 அடிப்படையில் 32 டீ.டி.எச் சானல்கள் மூலம் தரமான கல்விக்கான தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை ஒலிபரப்பும் ஒரு திட்டமாக இது செயல்படுகிறது.

**ஸ்வயம்** - பெருவாரியான மாணவர்களுக்கு திறந்தநிலை ஆன்லைன் படிப்புகளை (எம்.ஓ.ஓ.சி) முன்வைப்பதற்கான உள்நாட்டு ஐ.டி.பிளாட்ஃபாரம் இதுவாகும். நாட்டின் தொலைதூரங்களில் உள்ள கிராமங்களில் இருக்கும் மாணவர்களுக்காக அனைத்துப் பாடங்கள் மற்றும் படிப்புகளை உள்ளடக்கிய தரமான கல்வி இதன் மூலம் வழங்கப்படும்.

**தேசிய டிஜிட்டல் நூலகம்** - தேசிய சொத்தாக அறிவுப் பொக்கிஷத்தைத் தொகுத்து அனைவரும் அணுகிப் பயன்படுத்தும் வகையில் இது கட்டமைக்கப்பட்டு உள்ளது. இந்த நூலகத்தில் அறிவு சேகரிப்பானது புத்தகங்கள், இகற்றல், கலைக்களஞ் சியங்கள், பருவ இதழ்கள், தனிப்பொருளுக்கான ஆய்வுக்கட்டுரைகள், விமர்சனங்கள், ஆராய்ச்சி நூல்கள், கட்டுரைகள் போன்ற வடிவங்களில் இந்த நூலகம் இருக்கும். இது கற்பவர்கள் / தொழில் நிபுணர்கள் / ஆய்வாளர்கள் மற்றும் பிற ஆர்வமுள்ள நபர்களுக்கு உதவும்.

**வளாக இணைப்பு** - கல்வி வளாகத்துக்குள் வைஃபி இணைப்பு வழங்குதல். அதாவது பல்கலைக்கழகங்களுக்கு 1ஜிபிபிஎஸ் இணைப்பு மற்றும் கல்லூரிகளுக்கு 10எம்.பி.பீ.எஸ் இணைப்பு வழங்குதல்.

**உயர்கல்வி குறித்த அனைத்திந்திய கணக்கெடுப்பு (ஏ.ஐ.எஸ்.ஹெச்.இ)** - இதில் அனைத்து உயர்கல்வி நிறுவனங்களும் அடங்கும். கொள்கை முடிவுகளையும் ஆராய்ச்சிகளையும் முன்கூட்டி தெரிந்து பங்கேற்க இது உதவும்.

**வடிவமைப்பியல் புத்தாக்கத்துக்கான தேசிய முன்னோடி நடவடிக்கை** - இணையத்தில் பாடத்திட்டம் மற்றும் இதர விவரங்களைப் பகிர்ந்து கொள்வதன் மூலம் அதிக எண்ணிக்கையில் நபர்களுக்கு வடிவமைப்பு கல்வி மற்றும் பயிற்சிகள் பற்றி தெரிவிப்பது இதன் நோக்கமாகும்.

**முனைவர் பட்டத்துக்குப் பிறகான மேல் ஆய்வு உதவித்தொகை** - அறிவியல் மற்றும் மானிடவியல் பிரிவுகளில் வளரும் அறிவார்ந்த இளைய ஆராய்ச்சியாளர்களுக்கு கற்பித்தல் / ஆராய்ச்சி வேலையை உருவாக்கித் தருதல். இதன் மூலம் ஒருவர் புதிய தொழில்திறன்களைப் பெற முடியும். ஆய்வுப் பரப்பு விரிவடையும், பல்துறை ஆய்வாக மேற்கொள்ள உதவும்.

**யூ.ஜி.சிபிஎஸ்.ஆர் ஆசிரியர் உதவித்தொகை**- திட்டம் பல்கலைக்கழகங்களில் அடிப்படை விஞ்ஞான ஆராய்ச்சியை வலுப்படுத்த இத்திட்டம் உதவுகிறது. ஓய்வு பெறும் வயதை நெருங்கும் தகுதிவாய்ந்த அறிவியல் ஆசிரியர்கள் மற்றும் தொழில்நுட்பப் படிப்பு சார்ந்த ஆசிரியர்கள் தங்களது ஆராய்ச்சியைத் தொடர்வதற்கான வாய்ப்பை இது வழங்குகிறது.

**பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் அறிவியல் சார்ந்த உயர் கல்வியையும் ஆராய்ச்சிகளையும் வலுப்படுத்துவதற்கான திட்டம்** - ஆராய்ச்சித் திட்டங்களை மேம்படுத்துவதன் மூலம் உயர்கல்வியில் ஆராய்ச்சியின் தரத்தை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துடன் இது தொடங்கப்பட்டு உள்ளது.

**திறன் இந்தியா** - இது நமது பிரதம மந்திரியின் மிகச் சிறந்த முன்னோடி திட்டமாகும். வேலை இல்லாத இளைஞர்கள், விளிம்பு நிலையில் உள்ள பெண்கள் மற்றும் ஊரகப் பகுதியினருக்குத் தேவையான தொழில்திறன்களை வழங்கும் திட்டமாக இது உள்ளது. இந்தப் பிரிவினர்கள் தங்களது வாழ்க்கைத் தரங்களை உயர்த்துவதற்குத் தேவைப்படும் வேலைவாய்ப்புகளையும் நீடித்த வாழ்வாதாரங்களையும் வழங்க இத்திட்டமானது உதவுகிறது.

**ராஷ்ட்ரிய உச்சதார் சிக்ஷா அபியான் (ரூசா ஆர்.யூ.எஸ்.ஏ)** - கல்வி என்பது மாநில அரசின் ஒதுக்கீடாக இருந்தாலும் கூட மாநில அரசின் கல்வி அமைப்புகளின் தரத்தை உயர்த்த ரூசா என்ற இந்தத் திட்டத்தின் கீழ் மத்திய அரசு மாநிலங்களுக்கு நிதி உதவி செய்கிறது.

**விருப்பத்தின் அடிப்படையில் பாடங்களைத் தேர்ந்தெடுக்கும் முறை (சி.பி.சி.எஸ்)** - மாணவர்களை மையப்படுத்தி பாடதிட்டத்தை மறுவடிமைப்பு செய்யும் அற்புதமான அணுகுமுறையை இது கொண்டிருக்கிறது. பல்துறை சார்ந்த பாடப்பிரிவை தேர்ந்தெடுத்துக் கொள்ளும் வாய்ப்பை இது தருகிறது. மாநிலத்துக்குள், தேசிய அளவில் மற்றும் உலகக் கல்விப்புலச் சூழலுக்குள் எனப் பல திசைகளிலும் மாணவர்கள் பயணிக்க முடியும். தேர்வுத்தாள் மதிப்பீட்டு முறை மீதான இழுக்கை நீக்கவும் வேலைவாய்ப்புக்கான தடைகளை நீக்கவும் இந்த அமைப்பானது உதவும்.

இளைஞர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட வேண்டும் என்றால் கல்வி அமைப்பில் திட்டமிட்ட

சீர்திருத்தங்கள் அவசியமாகின்றன. அதிலும் குறிப்பாக கலை மற்றும் மாடவியல் துறைகள், அடிப்படை அறிவியல் பாடப் பட்டங்களில் மாற்றங்கள் வேண்டும். வளரும் நாடு என்ற நிலையில் குறைவான மூலவளத்தோடு இருக்கின்ற நாம் செயல்பாட்டில் உள்ள நடப்பு அமைப்புகளையும் கொள்கைகளையும் முறையாக ஒருங்கிணைத்தோமானால், அது பல அற்புதங்களைச் செய்யும். நான்கு முனை கொண்ட நேர்மறையான அணுகுமுறை: 1. மாணவர்களை மையப்படுத்தி அமையும் கல்வி அமைப்புகள் (சி.பி.சி.எஸ்), 2. வேலை அளிப்போரின் தேவைகளின் அடிப்படையில் அமையும் பாடத்திட்டம் (என்.பி.சி.எஸ்), 3. தனது கொள்கைகள் மற்றும் இயக்கங்கள் மூலம் அரசு உதவிக்கரம் நீட்டுதல், 4. பயிற்சி பெற்ற மற்றும் திறமையான இளைஞர்களைச் சமூகமும் வேலை அளிப்போரும் அங்கீகரித்தல். இவை இளைஞர்களுக்கு அதிகாரம் அளிப்பதோடு நாட்டுக்கும் அதிகாரம் அளிப்பவையாக இருக்கும். நமது மிகச்சிறந்த அறிவுக்குட்பட்டு இந்திய இளைஞர்களுக்கு அதிகாரம் அளிப்பதற்கான நான்கு முனை அணுகுமுறை மாதிரியை முன்வைப்பதோடு இந்தக் கட்டுரையை நாங்கள் நிறைவு செய்கின்றோம்.

**இந்திய இளைஞர்களுக்கு அதிகாரம் அளிப்பதற்கான நான்கு முனை அணுகுமுறை மாதிரி**




**முக்கியமான பார்வை நூல்கள் / கட்டுரைகள்**

1. www.mhrd.gov.in (டிசம்பர் 30, 2016), "ஆண்டு நிறைவு செயல்பாடுகள் பரிசீலனை 2016, மனதவள மேம்பாட்டு அமைச்சகத்தின் தொடக்க நடவடிக்கைகளும் சாதனைகளும்".

2. மனித வள மேம்பாட்டு அமைச்சகம் (2015), "உயர்கல்வி குறித்த அனைத்திந்திய கணக்கெடுப்பு (2013-14), இந்திய அரசின் வெளியீடு, உயர்கல்வித் துறை, புதுதில்லி.

3. www.ugc.ac.in <http://www.ugc.ac.in> (2015), "விருப்பத்தின் அடிப்படையில் பாடங்களைத் தேர்ந்தெடுக்கும் முறையின் கீழ் இளங்கலை/இளம் அறிவியல் படிப்புகளுக்கான குறைந்தபட்ச பாடத்திட்டம்"

4. டி.வி.பத்மா (மே13, 2015), "இந்தியாவின் விஞ்ஞான தேர்வு" நேச்சர் விஞ்ஞானத்துக்கான சர்வதேச வராந்திர இதழ்: 521(7551): 144147

5. பி.பெடெங்கர் (மே 4, 2015), "இந்தியாவில் 75% மாணவர்கள் கல்லூரிகளில் மானிடவியல் பாடங்களை விரும்புகின்றனர்", இந்துஸ்தான் டைம்ஸ்

6. www.nature.com <http://www.nature.com> பி.வி.பத்மா (மார்ச் 2, 2015), "இந்தியாவின் பட்ஜெட் விஞ்ஞானிகளுக்கு ஏமாற்றம் அளிக்கிறது"

7. பிரிட்டிஷ் கவுன்சில் (பிப்ரவரி 2014), "இந்தியாவை புரிந்து கொள்ளுதல்: உயர்கல்வியின் எதிர்காலம் மற்றும் சர்வதேச ஒத்துழைப்புக்கான வாய்ப்புகள்".

8. ஆர்.டி.வேல் மற்றும் கே.டெல் (2009), "இந்தியாவில் உயிரியல் விஞ்ஞானங்கள்", த ஜர்னல் ஆஃப் செல் பயாலஜி, 184, 184(3): 342353.

9. ஜி.வர்கீஸ் (2006), "இந்தியப் பல்கலைகழகங்களில் விஞ்ஞானக் கல்வி மற்றும் ஆராய்ச்சியில் பங்கேற்புக் குறைந்து வரும் போக்கு", யுனெஸ்கோவின் உயர்கல்வி, ஆராய்ச்சி, அறிவுக்கான குழுமம் (பதிப்பு), பாரீஸ்.

* **டாக்டர் ராகேஷ் கே.வாட்ஸ்** சண்டிகரில் உள்ள தொழில்நுட்ப ஆசிரியர்களுக்கான பயிற்சி மற்றும் ஆராய்ச்சி தேசிய நிலையத்தில் உள்ள ஊடக மையம் மற்றும் வளர்கல்வி மையத்தின் தலைவராகவும் பேராசிரியராகவும் உள்ளார்.

** **டாக்டர் மீனு வாட்ஸ்** சண்டிகரில் உள்ள பஞ்சாப் பல்கலைக்கழகத்தின் டி.ஏ.வி.கல்லூரியில் உதவிப்பேராசிரியராக உள்ளார்.

அடுத்த மாத இதழில்

## "சமூகப் பாதுகாப்பு"

பற்றிய கட்டுரை இடம் பெறும்

# மாற்றத்தை ஏற்படுத்தும் சரக்கு மற்றும் சேவை வரி (ஜி.எஸ்.டி.)

- டி.எஸ். மாலிக்
கூடுதல் தலைமை இயக்குனர் (ஊடகம் மற்றும் தொடர்பு)

ஜி.எஸ்.டி எனப்படும் சரக்குகள் மற்றும் சேவை வரி நாட்டில் அறிமுகம் செய்யப்படுவதற்கான முதல் அறிவிப்பு 2006, ஃபிப்ரவரி 28ம் தேதி அப்போதைய நிதி அமைச்சர் தனது வரலாற்று சிறப்புமிக்க பட்ஜெட் உரையில் வெளியிட்டதுடன் இந்த சரக்கு மற்றும் சேவை வரி 2010ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் தேதி முதல் அறிமுகப்படுத்தப்படும் என்றும் அறிவித்தார். அதன் பின்னர் ஜி.எஸ்.டியை நாட்டில் அறிமுகப்படுத்த ஒரு நிலையான முயற்சி மேற்கொள்ளப்பட்டு 2014 டிசம்பரில் அதற்கான அரசியல் சட்ட (122வது திருத்தம்) மசோதா அறிமுகம் செய்யப்பட்டதே இந்த முயற்சியின் தொடக்கமாக அமைந்தது.

**சரக்கு மற்றும் சேவை வரி எதற்கு?**

சரக்கு மற்றும் சேவை வரி அறிமுகம் செய்ய வேண்டியதன் அவசியம் என்ன என்பது தான் இதற்காக நடத்தப்பட்ட முக்கியமான விவாதங்களில் எழுப்பப்பட்ட பொதுவான பல்லவியாக இருந்தது. இந்தக் கேள்விக்கு பதில் அளிக்க தற்போது நமது நாட்டில் தற்போது நடைமுறையில் உள்ள மறைமுக வரி கட்டமைப்பைப் புரிந்து கொள்வது முக்கியமாகும். தற்போது உற்பத்திக்கான வரி (மத்திய கலால் வரி), சேவைக்கான வரி (சேவை வரி), மாநிலங்களுக்கு இடையிலான சரக்கு விற்பனை (மத்திய அரசால் விதிக்கப்பட்டு மாநிலங்களால வசூலிக்கப்படும் மத்திய விற்பனை வரி), ஆகியவற்றை மத்திய அரசும், மதிப்பு கூட்டு வரி, நுழைவு வரி, ஆடம்பர வரி, கொள்முதல் வரி உள்ளிட்டவற்றை மாநில அரசுகளும் விதித்து வருகிறது. ஒரே விநியோகச் சங்கிலியில் பல்வேறு பெயர்களில் வரி வசூலிக்கப்படுவது தெளிவாகத் தெரிகிறது.

மாநில அரசுகள் விதிக்கும் வரிகளுக்கு எதிராக மத்திய அரசும் வரிகளை விதித்து அடுக்கடுக்காக வரி விதிப்புகள் உள்ளன. மாநில அரசுகள் விதிக்கும் சில வரிகளே அவர்கள் விதிக்கும் வேறு வரிகள் செலுத்தப்பட்டதற்கு எதிராக நீக்கப்படுவதில்லை. மேலும் பல்வேறு விதமான மதிப்பு கூட்டு வரி பல்வேறு விகிதங்களிலும் வெவ்வேறு வரி நடைமுறைகளிலும் வசூலிக்கப்படுவது நாட்டைத் தனித்தனி பொருளாதாரப் பகுதிகளாக பிரிக்கிறது. ஆக்ட்ராய், நுழைவு வரி, சுங்கச்சாவடி போன்ற கட்டண மற்றும் கட்டணமில்லா எல்லைகள் உருவாக்கப்பட்டு இருப்பது நாடு முழுவதும் வணிகம் எளிதாக பரவுவதற்கு தடை ஏற்படுத்துகிறது. இது தவிர ஏராளமான வரிகள் விதிக்கப்படுவது வரி செலுத்துவோருக்கு கூடுதல் செலவை ஏற்படுத்துகின்றன.

**ஜி.எஸ்.டி என்றால் என்ன?**

மேற்கூறப்பட்ட அனைத்து மறைமுக வரிகளும் சரக்குகள் மற்றும் சேவை வரி என்ற பெயரில் ஒரே வரியாக ஒருங்கிணைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இது சரக்கு அல்லது சேவை அல்லது இரண்டும் விநியோகிக்கப்படும் போது விநியோகச் சங்கிலியின் ஒவ்வொரு கட்டத்திலும் உற்பத்தி அல்லது இறக்குமதி தொடங்கி கடைசி கட்டம் வரை விதிக்கப்படும். எனவே சரக்கு அல்லது சேவை விநியோகிக்கப்படும் போது மத்திய அல்லது மாநில அரசு தற்போது விதிக்கும் எந்தவொரு வரியும் ஜி.எஸ்.டியாக மாற்றப்படும்.

மாநிலத்திற்குள் சரக்கு மற்றும் சேவை வினியோகிக்கப்படும் போது சரக்கு மற்றும் சேவை வரி என்பது இரு விதமாக விதிக்கப்பட்டு வசூலிக்கப்படும். மத்திய ஜி.எஸ்.டியை மத்திய அரசு விதித்து வசூலிக்கும், மாநில ஜி.எஸ்.டியை மாநில அரசு விதித்து வசூலிக்கும். மாநிலங்களுக்கு இடையே சரக்கு மற்றும் சேவை விநியோகிக்கப்படும் போது மத்திய அரசு ஒருங்கிணைந்த ஜி.எஸ்.டியை விதித்து வசூலிக்கும். எனவே ஜி.எஸ்.டி. என்பது மத்திய மற்றும் மாநில அரசுகள் விதிக்கும் பல்வேறு வரிகளை ஒருங்கிணைத்து அதன் மூலம் நாட்டின் பொருளாதார ஒற்றுமையை ஏற்படுத்தும் ஒரு மேடையாகத் திகழும்.

இந்த வரிச் சீர்திருத்தமானது ஒற்றை தேசிய சந்தை, பொது வரித் தளம் மற்றும் பொது வரி சட்டங்களை மத்திய மாநில அரசுகளுக்கு உருவாக்குவதற்கான வழியை அளிக்கும். நமது அரசியல் சட்டத்தில் அளிக்கப்பட்டுள்ள கூட்டாட்சி முறையை எவ்வாறு நடைமுறைப்படுத்த முடியும் என்பதற்கான உதாரணமாக ஜி.எஸ்.டி உள்ளது.

விநியோகத்தின் தொடக்க நிலையில் செலுத்தப்பட்ட வரி குறித்த உள்ளீட்டு வரி இருப்பு விவரங்கள் விநியோகத்தின் ஒவ்வொரு கட்டத்திலும் இருக்கும் என்பது ஜி.எஸ்.டியின் மற்றும் குறிப்பிடத்தக்க அம்சமாகும். இந்த அம்சம் இரட்டை வரி முறை மேலும் மேலும் வசூலிக்கப்படுவதை பெரும் அளவு ஒழிக்கும் என்பது இதன் சிறப்பம்சமாகும். இந்த வரிச் சீர்திருத்தம் என்பது தகவல் தொழில்நுட்பத்தின் (சரக்கு மற்றும் சேவை வரி நெட்வொர்க் ஜி.எஸ்.டி.என்.) மூலம் விரிவான ஆதரவைப் பெறும் என்பதால் வரிச் சுமையில் அதிக வெளிப்படைத் தன்மை, மத்திய மாநில அரசுகளின் வரி நிர்வாகத்தின் மீது நம்பகத்தன்மை, ஆகியவற்றை ஏற்படுத்துவதுடன் வரி செலுத்துவோர் அதற்கு ஏற்ப நடந்துகொள்வதற்கான செலவுகளையும் குறைக்கும். இந்த ஜி.எஸ்.டி. அறிமுகம் செய்யப்படுவதால் பொருளாதார வளர்ச்சி அதிகரிக்கும் என்றும், அதன் காரணமாக ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தி ஒன்று முதல் இரண்டு சதவிகிதம் கூடுதலாக வளர்ச்சி அடையும் என்றும் ஆய்வுகள் கூறுகின்றன.

**ஜி.எஸ்.டியின் பயன்கள்**

**அரசுக்கான பயன்கள் :**

இந்தியாவுக்கான ஒருங்கிணைந்த தேசிய சந்தையை உருவாக்க உதவுவதுடன், அந்நிய நேரடி

முதலீடுகளை ஈர்க்கவும், 'மேக் இன் இந்தியா' இயக்கத்திற்கு ஊக்கமும் அளிக்கும்.

- சரக்கு மற்றும் சேவை விநியோகத்தின் ஒவ்வொரு கட்டத்திலும் உள்ளீடு செய்யப்பட்ட வரி இருப்பு இருக்கும் என்பதால் அடுக்கடுக்கான வரிவிதிப்புகளைப் போக்கும்
- மத்திய மற்றும் மாநிலங்களுக்கு இடையே சட்டங்கள், நடைமுறைகள் மற்றும் வரி விகிதங்கள் ஒருங்கிணைக்கப்படும்
- அனைத்துக் கணக்குகளும் இணையவழியில் ஆன்லைனில் தாக்கல் செய்யப்படும் என்பதாலும், உள்ளிடப்பட்ட வரிகளும் இணையவழியில் சரிபார்க்கப்படும் என்பதால் விநியோக சங்கிலியின் ஒவ்வொரு கட்டத்திலும் பரிவர்த்தனைகளின் அதிக காகித விசாரணைகள் ஊக்கப்படுத்தப்படும் வகையில் இணக்கத்திற்கான சூழல் மேம்படுத்தப்பட்டுள்ளது.
- ஒரே மாதிரியான மாநில ஜி.எஸ்.டி மற்றும் ஒருங்கிணைந்த ஜி.எஸ்.டி விகிதங்கள் அண்டை மாநிலங்களுக்கு இடையே விகித விவாதங்கள் நீக்கப்படுவதால் ஏய்ப்பு குறையும்
- வரிசெலுத்துவோர் பதிவு, வரியை திரும்பப்பெறுதல், வரி கணக்கு செலுத்துவதற்கான சீரான முறைகள், பொதுவான வரி அடித்தளம், சரக்குகள் மற்றும் சேவைகளை பிரிப்பதற்கான பொதுவான முறை ஆகியவை வரி முறைக்கு அதிக உறுதிப்பாட்டை அளிக்கும்.
- தகவல் தொழில்நுட்பம் அதிக அளவில் பயன்படுத்தப்படுவதால் வரி செலுத்துபவர் மற்றும் வரி நிர்வாகத்துக்கு இடையிலான நேரடித் தொடர்பு குறையும் என்பதால் நீண்ட கால அடிப்படையில் ஊழல் குறையும்
- இது ஏற்றுமதி மற்றும் உற்பத்திக்கு ஊக்கமளித்து, வேலைகளை உருவாக்குவதுடன் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியை அதிகரித்து அதன் மூலம் பொருளாதார வளர்ச்சிக்கு வழிவகுக்கும்
- இறுதியாக இது அதிக வேலைகளை உருவாக்கி அதன் மூலம் நிதி ஆதாரங்களை பெருக்கி ஏழ்மையை ஒழிக்க உதவும்

**வணிகம் மற்றும் தொழில்துறைக்கான பயன்கள்**

- சில விலக்குகளுடன் எளிமையான வரி விதிப்பு
- எளிதாக வர்த்தகம் செய்வது அதிகரிக்கப் பட்டுள்ளது
- தற்போதைய நிர்வாகத்தில் மறைமுக வரி விதிப்பில் உள்ள பல வரி விதிப்புகள் குறைக்கப்பட்டு எளிமை மற்றும் சீரான நிலை கொண்டுவரப்பட்டுள்ளது
- பணி ஒப்பந்தங்கள், மென்பொருள் மற்றும் உபசரிப்பு போன்ற துறைகளில் இரட்டை வரி விதிப்பு முறை நீக்கம்
- விநியோகத்தின் ஒவ்வொரு கட்டத்திலும் சரக்குகள் மற்றும் சேவைகளில் உள்ளிடப்பட்ட வரி கணக்கு இருப்பதால் அடுக்கடுக்கான வரி விதிப்பை போக்கும்
- இணக்கத்திற்கான செலவுகள் குறைப்பு பல்வேறு வரிகளுக்கான பல்வேறு ஆவண பராமரிப்பு இல்லை எனவே ஆதாரங்கள் மற்றும் ஆவண பராமரிப்புக்கான மனித ஆற்றல் குறைவு
- சிறந்த முறையில் வரிகள் குறைக்கப் பட்டுள்ளதால் குறிப்பாக ஏற்றுமதியில் குறைக்கப்பட்டுள்ளதால் சர்வதேச சந்தையில் நமது பொருட்களின் போட்டித் தன்மை அதிகரிக்கப்பட்டு ஏற்றுமதிக்கு ஊக்கம் அளிக்கப்பட்டுள்ளது
- பதிவு, கணக்கு தாக்கல், வரி செலுத்துதல்கள் போன்ற பல்வேறு நடைமுறைகள் எளிமைப்படுத்தப்பட்டு தானியங்கியாக ஆக்கப்பட்டுள்ளது
- சரக்கு அல்லது சேவைகள் விநியோகத்தில் சராசரி வரிச் சுமை குறையும் என எதிர்பார்க்கப்பட்டு அதன் மூலம் நுகர்வு அதிகரித்து, அதனால் உற்பத்தி அதிகரித்து இந்தியாவில் உற்பத்தித் தொழிற்சாலைகளில் உற்பத்தி அதிகரிக்கும்

**நுகர்வோருக்கான பயன்கள்**

- உற்பத்தியாளர், சில்லறை வியாபாரி மற்றும் சேவை அளிப்பவர் இடையே உள்ளிடப்பட்ட வரி தடையின்றி செல்வதால் பொருட்களின் இறுதி விலை என்பது வெளிப்படையாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது
- அடுக்கடுக்கான வரி விதிப்பு குறையும் என்பதால் நீண்ட கால அடிப்படையில் பண்டங்கள் மற்றும் சரக்குகளின் விலை குறையும்
- அதிக அளவிலான சிறு வியாபாரிகள் வரி முறையில் இருந்து விலக்கு அளிக்கப்படுவார்கள் அல்லது மிகக் குறைந்த அளவு வரி விதிக்கப்படும் என்பதால் அவர்களிடம் இருந்து நுகர்வோர் பொருட்களை வாங்கும் போது விலை குறையும்
- அதிக வேலைகள் மற்றும் நிதி ஆதாரங்கள் அதிகமாகும் என்பதால் ஏழ்மை ஒழிக்கப்படும்.

**மாநிலங்களுக்கான பயன்கள்:**

- வரி அடித்தளம் விரிவுபடுத்தப்படுவதால் உற்பத்தி முதல் சில்லறை விற்பனை வரை ஒட்டுமொத்த விநியோக சங்கிலிக்கும் வரி விதிக்க முடியும்
- மத்திய அரசிடம் மட்டுமே இருந்து வந்த வரிச் சேவைகள் அதிகாரம் பொருளாதாரத்தின் வேகமாக வளரும் துறையை மாநிலங்களும் அணுகி வருவாய்க்கு ஊக்கமளிக்கும்
- ஜி.எஸ்.டி என்பது இடம் அடிப்படையிலான நுகர்வு வரி என்பதால் நுகர்வு மாநிலங்களுக்கு சாதகமாக இருக்கும்
- நாட்டில் ஒட்டுமொத்த முதலீட்டு சூழ்நிலையை மேம்படுத்தும் என்பதால் மாநிலங்களிலும் இயல்பாக வளர்ச்சிப் பயன்களை அளிக்கும்
- சீரான எஸ்.ஜி.எஸ்.டி மற்றும் ஐ.ஜி.எஸ்.டி. விகிதங்கள் அண்டை மாநிலங்கள் மற்றும் மாநிலத்திற்குள் மற்றும் மாநிலங்களுக்கு இடையே விகித மாற்றத்தைப் போக்கி வரி ஏய்ப்புக்கான ஊக்கத்தைக் குறைக்கும்
- வரி செலுத்துவோரின் இணக்கத்தை மேம்படுத்தி அதன் மூலம் மாநிலங்களின் வருவாய் வசூலை அதிகரிக்க பெரும் பங்களிக்கும்

**தற்போதைய நிலை :**

வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த முக்கியமான மறைமுக வரி சீர்திருத்தத்துக்கான அரசியல் சட்ட (122வது திருத்தம்) மசோதா நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்தப்பட்டு 2016 ஆகஸ்ட் 3ம் தேதி மாநிலங்களவையிலும், 2016 ஆகஸ்ட் 8ம் தேதி மக்களவையிலும் நிறைவேற்றப்பட்டது.

- இந்த அரசியல் சட்ட திருத்த மசோதா 15 மாநிலங்களில் நிறைவேற்றப்பட்டு, மேதகு குடியரசுத் தலைவர்

அரசியல் சட்ட (நூற்று ஒன்றாவது திருத்த) சட்டத்திற்கு கடந்த 2016 செப்டம்பர் 8ம் தேதி ஒப்புதல் அளித்தார். அதன் தொடர்ச்சியாக ஜி.எஸ்.டி. கவுன்சில் அறிவிக்கப்பட்டு ஜி.எஸ்.டி. தொடர்பான விவகாரங்கள் குறித்து முடிவு செய்யும் அமைப்பு செயல்பாட்டுக்கு வந்தது

- 2016 செப்டம்பர் 16 அன்று இந்திய அரசு ஜி.எஸ்.டியை நடைமுறைக்கு கொண்டு வருவதற்கான அரசியல் சட்ட திருத்தத்தில் உள்ள அனைத்து பிரிவுகள் குறித்த அறிவிக்கைகளையும் வெளியிட்டது. ஜி.எஸ்.டியை 15.09.2017க்கு முன்னதாக ஓர் ஆண்டுக்குள் அமல்படுத்துவதற்கான கால அவகாசத்தை இந்த அறிவிக்கை நிர்ணயித்தது.

**ஜி.எஸ்.டி. கவுன்சில் கூட்டங்கள்**

அரசியல் சட்ட திருத்தத்தின்படி உயர் முடிவுகளை எடுக்கும் அமைப்பான ஜி.எஸ்.டி. கவுன்சில் அமைக்கப்பட்டது முதல் பதின்மூன்று முறை சந்தித்து பல்வேறு கூட்டங்களில் எடுக்கப்பட்ட சில முக்கிய முடிவுகள் வருமாறு:

- ஜி.எஸ்.டி. கவுன்சிலில் பணிகள் மேற்கொள்வதற்கான விதிகள்
- ஜி.எஸ்.டி. நடைமுறைக்கான கால அட்டவணை :
- ஜி.எஸ்.டி. விதிப்பிற்கான விலக்கிற்கான உச்சவரம்பு சிறப்பு பிரிவு மாநிலங்கள் தவிர மற்றவைக்கு ரூ. 20 இலட்சமாக இருக்கும். அரசியல் சட்டத்தின் 279ஏவில் சேர்க்கப் பட்டுள்ள இந்த சிறப்பு மாநிலங்களுக்கான உச்சவரம்பு ரூ. 10 இலட்சமாக இருக்கும்.
- காம்போசிஷன் திட்டத்தை பெறுவதற்கான நுழைவு வரம்பு ரூ. 50 இலட்சமாக இருக்கும். சேவை அளிப்பவர்கள் மற்றும் இதர சிலர் இத்திட்டத்தில் இணைக்கப்படமாட்டார்கள்
- ஜி.எஸ்.டி. நடைமுறைப்படுத்துவதால் 2015-16 முதல் 5 ஆண்டுகளுக்கு மாநிலங்களுக்கு இழப்பீடு அளிக்க வளர்ச்சி விகிதம் 14 சதவிகிதமாக இருக்க வேண்டும்
- வரைவு ஜி.எஸ்.டி. விகிதங்களுக்கு பதிவு, கணக்கு தாக்கல், திருப்பி அளித்தல் மற்றும் இன்வாய்ஸ், டெபிட்/கிரெடிட் குறிப்புகள் ஒப்புதல் சம்பந்தப்பட்டவர்கள் மற்றும் சட்டத் துறை அளிக்கும் சில மாற்றங்களுடன் அளிக்கப்படும்.
- தற்போது உள்ள வரி ஊக்கத் திட்டத்தின் கீழ் மறைமுக வரி செலுத்துவதற்கு விலக்கு அளிக்கப்பட்டுள்ள அனைத்து நிறுவனங்களும் ஜி.எஸ்.டி.யின் கீழ் வரி செலுத்த வேண்டும் என்பதுடன் அந்த நிறுவனத்துக்கு தொடர்ந்து விலக்கு அளிக்கும் முடிவு குறித்து சம்பந்தப்பட்ட மாநில அரசு அல்லது மத்திய அரசால் முடிவு செய்யப்படும். தற்போதுள்ள விலக்கு அல்லது ஊக்கத் திட்டத்தைத் தொடர் மாநில அல்லது மத்திய அரசு முடிவு செய்தால் அது திருப்பி அளிக்கும் நுணுக்கத்தின் மூலமாக நடைமுறைப்படுத்தப்படும்.
- 5%, 12%, 18% மற்றும் 24% என்ற நான்கு வரி விதிப்பு அடுக்குகள் பின்பற்றப்படும். இது தவிர விலக்கப்பட்ட சரக்குகள் பிரிவு மற்றும் ஆடம்பர கார்கள், வாயு சேர்க்கப்பட்ட பானங்கள், பான் மசாலா மற்றும் புகையிலை பொருட்கள் ஆகியவற்றுக்கு மாநிலங்களுக்கு அளிக்கப்பட வேண்டிய 28% வரிக்கு கூடுதலாக வரி விதிக்கப்படும்.
- மத்திய சரக்கு மற்றும் சேவை வரி மசோதா 2017, ஒருங்கிணைந்த சரக்கு மற்றும் சேவை வரி மசோதா 2017, யூனியன் பிரதேசங்கள் (சட்டப்பேரவை இல்லாதவை) சரக்கு மற்றும் சேவை வரி மசோதா 2017 மற்றும் சரக்கு மற்றும் சேவை வரி (மாநிலங்களுக்கு இழப்பீடு) மசோதா 2017 ஆகியவை 2017 மார்ச் 29 அன்று மக்களவையிலும் 2017 ஏப்ரல் 6ஆம் தேதி மாநிலங்களவையிலும் நிறைவேற்றப்பட்டது. கீழ்க்காணும் ஜி.எஸ்.டி. விகிதங்கள் ஜி.எஸ்.டி. கவுன்சிலில் 2017 மார்ச் 31ஆம் தேதி ஒப்புதல் அளிக்கப்பட்டு அவை தற்போது பொது பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது.
- பதிவு விதிகள்
- கணக்கு தாக்கல் விதிகள்
- இன்வாய்ஸ் விதிகள்
- கட்டண விதிகள்
- திருப்பி அளிக்கும் விதிகள்
- உள்ளிடப்பட்ட வரி இருப்பு விதிகள்
- மதிப்பீடு (சரக்கு மற்றும் சேவை விநியோக உறுதிப்படுத்துதல்) விதிகள்
- இடைக்கால விதிகள்
- வடிவ விதிகள்

**ஜி.எஸ்.டி.யை நடைமுறைப்படுத்துவதில் உள்ள சவால்கள்:**

- ஜி.எஸ்.டி.யை 2017 ஜூலை 1ஆம் தேதி நடைமுறைப்படுத்துவதில் உள்ள கால அவகாச சவால்கள்
- வரைவுச் சட்டங்கள் மாநில சட்டப்பேரவைகளில் நிறைவேற்றம்
- வரி முறைகளின் உள்கட்டமைப்பு மற்றும் தொழில்நுட்பக் குறிப்பாக மாநிலங்களின் மேம்பாடு
- தொழில் மற்றும் வர்த்தகத்தின் தகவல் தொழில்நுட்ப முறைகள் மேம்பாடு

சம்பந்தப்பட்டவர்கள் மற்றும் பொது மக்களிடையே உள்ள சந்தேகங்கள்/குழப்பங்கள் மற்றும் ஜி.எஸ்.டி.குறித்தும் அதனை நடைமுறைப்படுத்துவதால் ஏற்படப் போகும் தாக்கங்கள் குறிப்பாக அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் மற்றும் வேலை வாய்ப்புகள் உருவாக்கம் குறித்தும் தவறான புரிதல்கள் ஏதேனும் இருப்பின் அவற்றைப் போக்க தேசிய அளவில் விழிப்புணர்வை ஏற்படுத்த முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும். சிறு வர்த்தகர்கள் மற்றும் வியாபாரிகளுக்கு ஜி.எஸ்.டி. குறித்தும் அது தொடர்பான சட்டங்கள் குறித்தும் விளக்கப்பட்டு, ஆன்லைனில் வரிக் கணக்குகளைத் தாக்கல் செய்வது எப்படி, உள்ளிடப்பட்ட வரி இருப்பைப் பெறுவது எப்படி உள்ளிட்டவை குறித்து விளக்கப்பட வேண்டும். இந்தப் புதிய மறைமுக வரி சீர்திருத்தத்தை 2017 ஜூலை 1 முதல் நடைமுறைப்படுத்துவதில் அரசு நம்பிக்கையுடனும் முழு உறுதியுடனும் உள்ளது. ●

# உடான் - பிராந்தியங்களுக்கு இடையிலான போக்குவரத்து இணைப்புக்கு மிகப் பெரும் ஊக்கத்தை அளித்தல்

உடான் என்பது விமானப் போக்குவரத்துக்கான பிராந்திய இணைப்புத் திட்டமாகும். இந்தத் திட்டத்தை பிரதம மந்திரி ஏப்ரல் 27,2017 அன்று சிம்லா-தில்லிக்கு இடையிலான முதல் உடான் விமானப் போக்குவரத்தை சிம்லா விமான நிலையத்தில் இருந்து கொடியசைத்துத் துவக்கி வைத்தார் இந்தத் திட்டத்தின் கீழ் விமானங்கள் சிம்லா, நான்டெட் மற்றும் கடப்பா விமான நிலையங்களில் இருந்து தொடங்கி வைக்கப்பட்டன. ஒரே நேரத்தில் உடான் தொடக்க விழா விமானங்களை கடப்பா-ஹைதராபாத் மற்றும் நாட்டெட்ஹைதராபாத் பிராந்தியங்களுக்கு இடையில் பிரதம மந்திரி தொடங்கி வைத்தார்.

உடான் (உடே தேஷ்கா ஆம் நாக்ரிக்) என்பது விமானப் போக்குவரத்து அமைச்சகத்தின் திட்டமாகும். பிரிவு2 மற்றும் பிரிவு3 நகரங்களில் இருக்கும் குடிமக்கள் விமானப் பயணத்தை மேற்கொள்ள உதவும் வகையில் இந்தத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளது. விமானப் போக்குவரத்து அமைச்சகம் ஜூன் 16, 2016இல் வெளியிட்ட தேசிய விமானப் போக்குவரத்துக் கொள்கையின் (என்.சி.ஏ.பி) முக்கிய அம்சமாக உடான் திட்டம் இருக்கிறது. இந்தத் திட்டத்தால் பின்தங்கிய பகுதிகளில் பொருளாதார வளர்ச்சியை முடுக்கி விடுதல், வசதியானவர்களுக்கு மட்டுமே விமானச் சேவைகள் என்ற மேலாதிக்க மனப்பான்மையை முடிவுக்குக் கொண்டு வருதல், சிறிய நகரங்கள் மற்றும் டவுன்களில் வசிக்கும் இளம் தொழில் நிபுணர்கள், சிறிய வர்த்தகர்கள் மற்றும் மாணவர்கள் அடங்கிய மத்தியதர வர்க்கத்தினரும் விமானப் பயணத்தைச் சிக்கனச் செலவில் மேற்கொள்ளச் செய்தல் போன்ற பலன்கள் ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பல்வேறு பிரச்சனைகள் குறித்து அலசி ஆராய்ந்தும் பங்குதாரர்களுடன் ஆலோசனைகள் மேற்கொண்டும் இந்த உடான் திட்டம் உருவாக்கப்பட்டு உள்ளது. சந்தை அடிப்படையிலான முறையில் பிராந்தியப் போக்குவரத்து இணைப்பை மேம்படுத்துவதற்காக உருவாக்கப்பட்டுள்ள இந்தத் திட்டமானது உலக அளவில் முதன் முதலாக அறிமுகப்படுத்தப்படும் திட்டமாக உள்ளது.

இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தும் இந்திய விமான நிலைய ஆணையமானது (ஏ.ஏ.ஐ) ஆர்.சி.எஸ் உடான் ஒப்பந்தத்தின் கீழ் பெறப்பட்ட 27 திட்ட முன்மொழிவுகளுக்கு செயல் அங்கீகார ஒப்புதலை அளித்துள்ளது. இத்திட்டத்துக்கான திட்ட முன்மொழிவுகளின் முக்கிய அம்சங்கள் கீழே தரப்படுகின்றன:

- இந்த 27 திட்ட முன்மொழிவுகள் மூலமாக தற்போது செயல்பட்டுக் கொண்டு இருக்கும் 27 விமான நிலையங்கள், தற்போது குறைவான அளவில் விமான சேவைகளை இயக்கும் 12 விமான நிலையங்கள் மற்றும் தற்போது விமான சேவை இல்லாத 31 விமான நிலையங்கள் (மொத்தமாக 70 விமான நிலையங்கள்) இணைக்கப்படும்.
- இந்த முன்மொழிவுகள் பரந்துபட்ட நிலைப்பரப்பை உள்ளடக்குகின்றன. நாட்டின் அனைத்துப் பகுதிகளையும் இணைப்பதாக இவை உள்ளன. நாட்டின் மேற்குப்பகுதியில் உள்ள 24 விமான நிலையங்கள், வட பகுதியில் உள்ள 17 விமான நிலையங்கள், தெற்கில் உள்ள 11 விமான நிலையங்கள், கிழக்கில் உள்ள 12 விமான நிலையங்கள் மற்றும் வடகிழக்கில் உள்ள 6 விமான நிலைங்கள் இதன் மூலம் இணைக்கப்பட உள்ளன.
- அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ள முன்மொழிவுகளில் 16 முன்மொழிவுகள் ஒற்றை விமானப் பாதைக்கானவை (இரண்டு நகரங்களை இணைப்பவை) ஆகும். 11 முன்மொழிவுகள் நெட்வொர்க் சேர்ந்தவை (மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட நகரங்களை இணைப்பவை). 6 முன்மொழிவுகள் பொருளாதார நிலைப் பேற்றுக்காக அரசு மானியம் தரத்தேவை இல்லை (இசட்.வி.ஜி.எஃப்) என்ற ஒப்பந்தத்துடன் அனுமதிப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் இந்த 6 இடங்களிலும் பயணத் தேவை அதிகமாகும் என்ற உண்மையைக் கருத்தில் கொண்டுதான் இந்த இடைவெளியை நிரப்பும் மானியம் இல்லை என்று கூறப்பட்டுள்ளது.
- 27 முன்மொழிவுகளுக்கும் பொருளாதார நிலைபேற்றுக்காக ரூ.200 கோடி அளவுக்கு அரசு மானியம் (வி.ஜி.எஃப்) தேவைப்படுகிறது. இவை பிராந்திய பயணத் திட்டத்துக்காக சுமார் 6.5 லட்சம் இருக்கைகளை (ஆர்.சி.எஸ்) வழங்கும். நிர்ணயிக்கப்பட்ட விமானத்தில் ஒரு மணி நேரப் பயணம் அல்லது ஹெலிகாப்டரில் 30 நிமிட நேரம் மேற்கொள்ளப்படும் பயணத்திற்கு தோராயமாக 500கி.மீட்டருக்கு ரூ.2.500 எனக் கட்டணம் நிர்ணயிக்கப்படும். விமானப் பயண நேரம் மற்றும் பல்வேறு நிறுத்தங்களுக்கு இடையிலான

தூரத்திற்கேற்ப விகிதாச்சார விலை ஆகியவற்றின் அடிப்படையில் கட்டணம் நிர்ணயிக்கப்படுகிறது. தேர்ந்தெடுக்கப்படும விமான நிறுவனம் விமான இருக்கைகளில் 50 சதவிகித இருக்கைகளை (குறைந்தபட்சம் 9 மற்றும் அதிகபட்சம் 40 இருக்கைகள் என்ற நிபந்தனைக்கு உட்பட்டு) ஆர்.சி.எஸ் இருக்கைகளாக ஒதுக்கித் தர வேண்டும். இது நிர்ணயிக்கப்பட்ட இருக்கைகள் உள்ள விமானங்களை இயக்கும் போது பொருந்தும். ஹெலிகாப்டர்கள் மூலம் பயணச் சேவை அளிக்கும் போது குறைந்தபட்சம் 5 மற்றும் அதிகபட்சம் 13 இருக்கைள் ஆர்.சி.எஸ்-க்கு ஒதுக்கப்பட வேண்டும். இந்த விமான நிறுவனங்கள் மட்டுமே மூன்று ஆண்டுகளுக்கு விமானச் சேவையை இயக்க அனுமதிக்கப்படுவர். இத்தகைய வழித்தடங்களில் விமானச் சேவையை இயக்குவதற்கு ஆகும் செலவைக் குறைக்க, மத்திய மற்றும் மாநில அரசுகளும் விமான நிலையங்களும் சலுகைகளை அளிக்கும். மேலும் இத்தகைய விமான நிலையங்களில் இருந்து விமானச் சேவையைத் தொடங்குவதை ஊக்குவிக்கும் வகையில் விருப்பமும் தேவையும் உள்ள விமான நிறுவனங்களுக்கு பொருளாதார நிலைபேற்றுக்கான அரசு மானியமும் வழங்கப்படும். இவ்வாறு செய்தால்தான் விமானப் பயணக் கட்டணம் என்பது பயணிகள் செலவழிக்கக் கூடிய வகையில் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும். மாநில அரசு வி.ஜி.எஃப்-பில் குறிப்பிட்ட பங்கை வழங்கும் (வடகிழக்கு மாநிலங்கள் தவிர்த்து இதர பகுதிகளுக்கு மாநிலங்களின் பங்கு 20 சதவிகிதம் ஆகும்). வடகிழக்கு மாநிலங்களுக்க நிர்ணயிக்கப்பட்ட வி.ஜி.எஃப்- பில் 10 சதவிகிதம் மாநிலங்களின் பங்கு ஆகும்.

●